முச்சந்தி முனி



வெளிநாட்டில நிண்டால் ஒண்டு சொல்லுகினம். உள்ள வந்தால் இன்னொண்டு சொல்லுகினம் என்னப்பா இது!


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32

சுடர் 31 | கதிர் 319 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 24, திங்கட்கிழமை 10.10.2016


புதிய அரசமைப்புக் குறித்து

# நவம்பரில் அறிக்கைதான் வெளிவரும்

## வரைவு முன்வைக்கப்படாது என்கிறார் ஜயம்பதி விக்ரமரட்ண எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 10

புதிய அரசமைப்புக்கான சட்டவரைபு அடுத்த மாதம் முன்வைக்கப்படாது. அரசமைப்பு உருவாக்க வழி நடத்தும் குழு, அறிக்கையை மாத்திரமே முன்வைக்கும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நியமன நாடாளுமன்ற உறுப்பினரும், அரசமைப்பு உருவாக்கக் குழுவின் நிபுணருமான கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ண நேற்றுத் தெரிவித்தார்.

பக். 08

## பொலிஸார் அசமந்தமா? எனக்கு முறையிடுங்கள்

### மக்களிடம் கூறுகிறார் பொலிஸ்மா அதிபர்



கொழும்பு, ஒக். 10

முறைப்பாடுகளுக்குப் பொலிஸார் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று நீங்கள் கருதினால் எனது தனிப்பட்ட இலக் கம் ஒன்றைத் தருகிறேன். அதற்கு அறிவியுங்கள். அது எனது தொலைபேசி இலக்கம் அல்லாத போதும் என்னுடன் பக்கத்தில் இருக்கும் எனது நம்பிக்கைக்குரிய உயர் பொலிஸ் அதிகாரிஒருவரது தொலைபேசி இலக்கம் (0718592020). அதில் என்

பக். 04

## எழுந்து நிற்போம் இன்று

### விபத்துக்களை தடுக்கும் விழிப்புணர்வுக்காக

யாழ்ப்பாணம், ஒக். 10
விபத்தைத் தடுக்கக்கோரும் இன்றைய 'எழுந்து நிற்போம்'

பக். 05

## கற்கோவளத்தில் நேற்றிரவு ஒருவர் மீது வாள்வெட்டு

### சந்தேகத்தில் இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஒக். 10

பருத்தித்துறை - கற்கோவளத்தில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்து மந்திகை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். வாளால் வெட்டிய சந்தேகத்தில் இருவரைக் கைது செய்துள்ள

பக். 06



## வவுனியாவில் சிவசேனா

வவுனியா, ஒக். 10

வவுனியா மாவட்டத்தில் சிவசேனா என்ற புதிய அமைப்பின் ஆரம்ப நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்து மதத்தின் பாதுகாப்பு மற்றும் இந்து மக்களின் நலன்களில் கவனம் செலுத்தும் வகையில் இந்த

பக். 06

## 2017 இல் வடக்கு – கிழக்குக்கு 15,000 வீடுகள்

### திட்ட முன்மொழிவு முன்வைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 10

மீள்குடியேற்ற அமைச்சினால் அடுத்த ஆண்டு 15 ஆயிரம் வீடுகள் வடக்கு, கிழக்கில் அமைப்பதற்கான திட்ட முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ளது. தலா ஒரு மில்லியன் ரூபா செலவில் ஒவ்வொரு வீடும் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

மீள்குடியேற்ற அமைச்சினால் வடக்கு, கிழக்கு மற்றும் புத்தளம், பொலநறுவை மாவட்டங்களுக்கு வீட்டுத் திட்டம் நடப்பு ஆண்டில்

பக். 05



## யாழ்ப்பாணத்தில் கலைக் கல்லூரி

### இந்திய துணைத் தூதரக உதவியுடன் அமையும் என்கிறார் கங்கை அமரன்

யாழ்ப்பாணம், ஒக். 10

இங்குள்ள சிறுவர்கள், கலைஞர்கள் மற்றும் சங்கீதத்தைக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்காக கலைக்கல்லூரி ஒன்றை அமைக்கும் ஏற்பாடுகளை இந்தியத் துணைத் தூதரகத்தின்

பக். 04

## 2016 வாக்காளர் பட்டியல் குறித்து 72,621 மேன்முறையீடு

கொழும்பு, ஒக். 10

2016ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் தொடர்பில் 72 ஆயிரத்து 621 மேன் முறையீடுகள் கிடைத்துள்ளன என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

இவற்றில் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகூடிய தொகையாக 21ஆயிரத்து 499 மேன்முறையீடு கள் கிடைத்துள்ளன என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்தார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தே குறைவான மேன்முறையீடுகள் கிடைத்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (து)

## முதலீட்டாளர் தகவல் மையத்தின் கட்டுப்பாட்டைக் கேட்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், ஒக். 10

நல்லிணக்கச் செயலணியினால் யாழ். மாவட்டச் செயலகத்தில் திறந்து வைக்கப்பட்ட முதலீட்டாளர்களுக்கான தகவல் மையத்தை நிர்வகிக்கும் பொறுப்பை வடக்கு மாகாண சபையிடம் ஒப்படைக்குமாறு, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி

பக். 04



எமனானது செல்பி

## ஓமான் கடலில் மூழ்கி 2 இளம் பெண்கள் சாவு

மஸ்கட், ஒக். 10

ஓமான் தலைநகர் மஸ்கட்டிலுள்ள கடலில் செல்பி எடுத்துக்கொண்டிருந்த வேளை, இலங்கையைச் சேர்ந்த இரு

பக். D

## சமஷ்டிக் கதவு திறந்தே உள்ளது

### அமெரிக்காவில் கூறினார் மங்கள



கொழும்பு, ஒக். 10

பிரிவினைவாதத்துக்கு நல்லாட்சி அரசு ஒருபோதும் தயாரில்லை. அதனால் கூட்டாட்சிக்கான கதவு திறக்கப்பட்டே உள்ளது என்று அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர அமெரிக் காவில் தெரிவித்தார்.

அமெரிக்கா வாழ் இலங்கையர்களில் சுமார் 200 பேரை

பக். D

2017 பட்ஜெட்டிலும்

## பாதுகாப்புக்கே பெருந்தொகை நிதி

கொழும்பு, ஒக். 10

நல்லாட்சி அரசினால் சமர்ப்பிக்கப்படவுள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திலும், பாதுகாப்பு அமைச்சுக்கே பெருந்தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகத்

பக். D

மலையகத் தொழிலாளர்களுக்கு

## வடக்கில் ஆதரவு வலுக்கிறது

யாழ்ப்பாணம், ஒக். 10

1000 ரூபா அடிப்படைச் சம்பள உயர்வை வலியுறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வடக்கு மாகாணத்திலும் ஆதரவு வலுத்து வருகின்றது.

இதற்கான கவனவீர்ப்புப் போராட்

பக். D

## உடமைகளை மட்டுமின்றி தமிழரின் கலைகளையும் அழித்தனர் படையினர்

### ஆதாரத்துடன் வடக்கு அமைச்சர் பகிரங்கக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 10

எமது பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள படையினர் எமது சொத்துக்களை மட்டுமன்றி எமது கலைகளையும் இணைத்தே அழித்தனர். அதற்கு கடற்படை அதிகாரி கப்டன் பொயோகொடாவால் அண்மையில் எழுதப்பட்ட புத்தகமும் ஒரு சாட்சி.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தின் ஏற்பாடில் சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பண்பாட்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பக். D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# தென்னிந்தியாவுடன் இறுக்கமான உறவு

## இலங்கை அரசு விருப்பம்

கொழும்பு, ஒக். 10
தென்னிந்திய மாநில அரசுகளுடன் இறுக்கமான பொருளாதாரத் தொடர்புகளை வளர்த்துக் கொள்ள இலங்கை விரும்புவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தியாவில் நடந்த உலகப் பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்ளச்சென்றிருந்தபோதே இந்தியப் பத்திரிகையாளர்களிடம் அவர் இந்தக் கருத்தைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவில் வெவ்வேறு விதமான பொருளாதார வகை மாதிரிகள் காணப்படுகின்றன. இந்தியா ஒரு பிராந்திய வல்லரசு. எங்களுக்குத் தென்னிந்திய மாநிலங்களுடன் பொதுவான பல விடயங்கள் காணப்படுகின்றன.

ஆழமான ஒருங்கிணைப்புக் கொண்ட இரு தரப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள நாங்கள் எதிர்பார்த்திருக்கிறோம்.

குறிப்பாக தென்னிந்தியாவில் சிறப்பு வர்த்தகப் பகுதிகளைத் தெரிவு செய்ய விரும்புகிறோம்.

இலங்கை சிங்கப்பூருடன் பலமான பொருளாதாரத் தொடர்புகளைக் கட்டியெழுப்பி வருகின்றது.

அதேபோல் வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கு இந்தியாவுடன் இருதரப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவும் விரும்புகிறது-என்றார். (த-ப)



# இயக்கச்சியில் நடைபவனி

பருத்தித்துறை முதல் அம்பாந்தோட்டையின் தேவேந்திரமுனை வரையிலான நடைபவனி, நான்காம் நாளான நேற்றுக் கிளிநொச்சி - இயக்கச்சி பகுதியைச் சென்றடைந்தது.

காராப்பிட்டியவில் அமையவுள்ள புற்றுநோய் வைத்தியசாலைக்கான நிதியைச் சேகரிக்கும் நோக்கில் சிறப்பு நடைபவனியொன்று கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தின் பருத்தித்துறை புனித சேவியர் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது. (வ-35)

# மாணவரைக் கண்டிக்க பயப்படும் ஆசிரியர்கள்

## பெற்றோரின் தவறே காரணம் என்கிறார் வடக்கு அவைத் தலைவர்

யாழ்ப்பாணம், ஒக். 10
பெற்றோர்கள் தமது பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்காமையினாலேயே அவர்கள் ஆசிரியர்களை எதிர்க்கக்கூடிய நிலைக்கு வந்திருக்கிறார்கள். மாணவர்களைக் கண்டித்து வளர்க்கும் ஆசிரியர்கள் இன்று நீதிமன்றங்களுக்கும் பொலிஸாருக்கும் பயப்படவேண்டிய சூழல் எழுந்திருக்கின்றது.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

யாழ். இந்து சமயப் பேரவையும் ஆதிரையான் கல்வி நிலையமும் இணைந்து நடத்திய வாணி விழா நிகழ்வு வடமராட்சி திக்கம் சித்திவிநாயகம் பாடசாலைக்கு அருகில் உள்ள கல்வி நிலைய முன்றிலில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மாணவர்களைக் கண்டித்து வளர்க்கும் ஆசிரியர்கள் இன்று பொலிஸாருக்கும் நீதிமன்றுக்கும் பயப்பட வேண்டிய சூழல் எழுந்திருக்கிறது. இதை நான் பிள்ளைகளுடைய பிழையாகப் பார்க்கவில்லை. பெற்றோரினுடைய பிழையாகவே பார்க்கிறேன். பிள்ளைகளைவீட்டில்ஒழுங்காக வளர்த்து இருந்தால் இந்தப் பிள்ளைகளுக்கு ஆசிரியர்களை எதிர்க்கக் கூடிய துணிவு வரமாட்டாது. கடந்த காலத்தில் சாவகச்சேரி சம்பவம் தொடர்பில் சில ஆசிரியர்கள் என்னிடம் வந்தார்கள். நாங்கள் இனி எப்படிப் பாடசாலை போவோம் எனக் கேட்டார்கள். அவர்களின் கேள்வியிலும் நியாயம் இருக்கின்றது.

பிள்ளைகளைச் சரியாக ஒழுங்குபடுத்தும் பொறுப்பு பெற்றோரிடம் இருக்கின்றது.

கண்டித்தால் பொலிஸ் நிலையம் செல்லும் வழக்கம் மேலைத்தேய நாடுகளில் இருந்து வருகின்றது. அது எம்மிடையேயும் இப்போது தொற்றியுள்ளது. எமக்கு ஒரு வரையறை உண்டு. தமிழர்களுக்கு என்றொரு வாழ்வியல் உண்டு. இதை ஒரு பெரிய சமூகப் பிறழ்வாகவே நான் பார்க்கிறேன்.

ஆசிரியர்கள் பிள்ளைகளிடையே நம்பிக்கையை உருவாக்கவேண்டும். விசுவாசமானவர்களாக இருக்கவேண்டும். கல்வியோடு ஒழுக்கம், பண்பாடு, மனிதப் பண்பு, கலாசாரம், ஒருவரை ஒருவர் மதிக்கின்ற பண்பு, ஏனையோர்களிடையே இரக்கம் காட்டுகின்ற பண்புகளோடு பிள்ளைகள் வளர்வதற்குத் துணை புரிபவர்களாக அனைவரும் இருக்கவேண்டும்-என்றார். (த-4-109)

# ஈழ அகதிகள் 30 பேர் 18ஆம் திகதி நாடு திரும்புவர்

நாட்டில் நிலவிய போர் காரணமாக தமிழகத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்தவர்களில் 30 பேர் எதிர்வரும் 18ஆம் திகதி நாடு திரும்பவுள்ளனர்.

13 ஆண்களும், 17 பெண்களுமே இவ்வாறு தாயகம் திரும்பவுள்ளனர் என்று மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வே. சிவஞானஜோதி தெரிவித்தார்.மதுரையிலுள்ள இலங்கை அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களே நாடு திரும்பவுள்ளனர்.

திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் இவர்கள் மீள்குடியேற்றப்படவுள்ளனர். இவர்களுக்கான இலவச விமா னப் பயணச்சீட்டுகள் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தால் வழங்கப்படுவதோடு, அவர்களுக்கான ஆரம்பகட்ட வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் கூறினார். (தி)

# சகல துறைகளிலும் இலங்கையுடன் உறவு

## தாய்லாந்துப் பிரதமர் தெரிவிப்பு



பாங்கொக், ஒக்.10
இலங்கை மற்றும் தாய்லாந்துக்கிடையில் காணப்படும் இரு தரப்பு உறவுகளை அனைத்துத் துறைகளிலும் வலுவூட்டி புதிய பிரவேசத்துக்குள் கொண்டு செல்லவுள்ளதாக தாய்லாந்து பிரதமர் பிரேயுத் சான் ஓச்சா தெரிவித்தார்.

ஆசிய ஒத்துழைப்பு கலந் துரையாடல் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தாய்லாந்துக்கு நான்கு நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தாய்லாந்தின் பிரதமருக்குமிடையி லான உத்தியோபூர்வ சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் மாலை பாங்கொக் நகரில் இடம்பெற்றபோதே தாய்லாந்துப் பிரதமர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கைக்கு தாய்லாந்து அரசு வழங்கும் ஒத்துழைப்புக்களை பாராட்டிய ஜனாதிபதி, குறிப்பாக அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு இடர்களின் போது இலங்கை மக்களுக்கு வழங்கிய உதவிகள் தொடர்பில் தன்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இரு நாடுகளுக்குமிடையிலான விவசாயத்துறையின் தொடர்புகளைமேலும் முற்னேற்றுவது தொடர்பில் இருதலைவர்களும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடினர்.

பௌத்த நாடுகள் என்ற வகையில் இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் அனைத்துத் துறைகளையும் வலுவூட்ட முடியும் என்பதை சுட்டிக்காட்டிய தாய்லாந்துப் பிரதமர், இரு நாடுகளுக்கு [illegible] முன்னேற்றும் வகையில், எதிர்காலத்தில் பல வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டுமென எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

இலஞ்ச ஊழல் மற்றும் முறைகேடுகளைத் தவிர்ப்பதற்காக இலங்கை அரசு முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளைப் பற்றி தெளிவுபடுத்திய ஜனாதிபதி, தேசிய நல்லிணக்கப் வேலைத்திட்டத்தை வலுவூட்டுவதற்குதமது அரசுமுன்னுரிமை அளித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதன் மூலமும் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தி, சுதந்திரமான ஜனநாயக நாடொன்றைக் கட்டியெழுப்ப எதிர் பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் கூறினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமை யின் கீழ் இலங்கை சிறந்த தோர் எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கும் எனவும், அந்தப் பயணத்தின்போது தாய்லாந்து நாட்டினால்வழங்கக்கூடிய அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குவதாகவும் தாய்லாந்துப் பிரதமர் கூறினார். (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திரைக் கண்காட்சி

பன்னாட்டு அஞ்சல் தினத்தை முன்னிட்டு சுழிபுரம் அஞ்சல் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முத்திரைக் கண்காட்சி நடைபெற்றது.

முத்திரைக் கண்காட்சியை வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் என். இரத்தினசிங்கம் ஆரம்பித்தார்.

யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் கே.புஸ்பநாதன் வடமாகாண அஞ்சல் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் ஜ.சின்னப்பு ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ற-17)

இலங்கையில் முதல் தடவையாக
பெண்களுக்கான
அழகுக்கலைக் கல்லூரி (Since 1989)

ஒளி அழகன் ஸ்ருடியோவும்
British College of Beauty Studies
உம் இணைந்து நடத்தும்
பெண்களுக்குப் பொருத்தமான துறை சார்ந்த பாடநெறிகள்

* அழகுக்கலை - Makeup
* தையற்கலை - Tailoring
* சமையற்கலை -Cooking, கேக்ஐசிங் -Icing
* கணினி
* ஆங்கிலம்
* Ladies Skills Development



ஒவ்வொரு பாடநெறியிலும் பல பிரிவு பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

*Our Special Diplomas*

DIBC, ADHBTH, DIM, DIAM, DIHC, DIHB, DIHC, DIM, DIAMT, DIT, DICTM, DILS

வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும் எங்களுடைய சான்றிதழ்.
எங்களிடம் எந்தப் பாடநெறியினைப் பூர்த்தி செய்தாலும் உலகின் எப்பகுதியிலும் சுயமாக சொந்தத் தொழிலினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எங்களிடம் எந்த பாடநெறியை தொடங்க விரும்பினாலும் வருடத்திற்கான இறுதி வகுப்பில் இணைந்து கொள்ளுங்கள்.

குறிப்பு: இறுதி வகுப்பு ஆரம்பமாகும் திகதி
10.10.2016

பெண்களே இது உங்களுக்கான கல்லூரி.

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு: 076 701 1645 பலாலி வீதி, திருநெல்வேலி.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



J.R.ரவிக்குமார்
ஆசிரியர் (விஞ்ஞானம்)
"குரு பிரதீபா பிரபா விருது" 05.10.2016

உள்ளம் மகிழ்ந்து உவகை பொங்க
எங்கள் பள்ளி மகிழ்வு கொண்டது
தங்கமான பணியின் கனிகளை
எங்கள் பள்ளிக்கு அள்ளித் தந்து
நல்லாசான் விருதை
நலமாய்ப்பெற்று
எல்லோரும் வாழ்த்த இனிதே இருக்கும்
நல்லோன் வல்லோன் நலமிகு ஆசான்
ரவிக்குமார் என்னும் இனிய ஆசானை
இந்நாளில் நாங்கள்
இனிதே வாழ்த்துவோம்.

Best Wishes

உழைப்பின் வியர்வையில்
வெற்றிக்கனிகள்
விளையும் என்பதில் விந்தை இல்லையே!
உயரிய பணியாம் ஆசிரியர் பணியில் தன்னை
உருக்கி நற்பணியாற்றி உரிய பயிர்களின்
விளைச்சலைக்காணும் உன்னத ஆசாரின்
உயர்ந்த பணிக்கு நன்றாய்க்கிடைத்த நலமான
விருதுக்கு நாங்கள் அளிப்போம் நலமான
வாழ்த்து
வாழிய! வாழிய! வாழிய! பல்லாண்டு.

வாழ்த்துவோர்
பாடசாலைச்சமூகம்.
மன்/வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை.

தற்போது அமோக விற்பனையில்
உங்கள் குடும்பச் சஞ்சிகை
ஒக்டோபர் மாத இதழ்!




குடும்ப முன்னேற்றத்துக்கான அனைத்து
ஆக்கங்களும் ஒரே சஞ்சிகையில்!

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள: கொழும்பு 071 8628372 வடக்கு: 07...
உதயன் முகவர்களிடமும் உங்கள் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

தணிகா நுண்கலைக் கல்லூரி

தலைசிறந்த நுண்கலை ஆசான்களால்

சங்கீதம், நடனம், சித்திரம், ஓர்கன் மற்றும் ஏனைய வகுப்புக்கள் 11.10.2016 செவ்வாய்க்கிழமை விஜயதசமி அன்று மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.










2015 அரச நடன மற்றும் நாட்டிய நாடக விழாவில் பங்கு பற்றி விருதுகள் பெற்ற தணிகா நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தொடர்பு
077 7624475
021 2222106

தணிகா நுண்கலைக் கல்லூரி,
151/1, பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(சிறுவர் பூங்கா மற்றும் குழந்தைகள் காப்பகத்திற்கு அருகில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸார்

னுடன் கதைக்க வேண்டும் எனக் கூறினால் அவர்ஏற்பாடு செய்து தருவார்.

இவ்வாறு பொது மக்களிடம் தெரிவித்தார் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர.

கண்டி - பூஜாபிட்டிய நகரில் 451 ஆவது பொலிஸ் நிலை யத்தைத் திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டில் இதுவரைகாலமும் நடந்துள்ள குற்றச் செயல்கள் பற்றி பொதுமக்களுக்கு மத்தியில் ஒரு ஆதங்கம் காணப்படுகிறது. ஆனால், வெகு விரைவில் அதற்குரிய பதிலைப் பெற்றுக்கொள்வீர்கள். ஆகக்குறைந்தது இதுவரை காலமும் முறைப்பாடு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கருதும் அநேக மானவற்றுக்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். குற்றச் செயல்களாகப் பதிவானவற்றுள் 70 சத வீதமானவற்றுக்கான முடிவுகளை யாவது நாடு அறிந்து கொள்ளும் நிலைக்கு சட்டம், ஒழுங்கு என்பவை தொடர்பாக நாம் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி வருகிறோம்.

பல்வேறு வகையான குற்றங்களுக்கு முகங்கொடுத்துவரும் பொதுமக்கள் பொலிஸாரின் உதவியை நாடியே பொலிஸ் நிலையங்களுக்கு அடிக்கடி வருகின்றனர். அவர்களதுபிரச்சினைகளை எந்தவொரு பேதமுமின்றி செவிமடுப்பது பொலிஸாரின் கடமையாகும். ஆனால், சில முறைப்பாடுகளுக்குச் சரியான கவனத்தைச் செலுத்துவதில்லை எனப் பொதுமக்கள் தரப்பிலிருந்து முறைப்பாடுகள் அடிக்கடி எழுகின்றன.

அப்படியான சந்தேகங்கள் இருப்பின் அல்லது பொலிஸார் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று நீங்கள் கருதினால் எனது தனிப்பட்ட இலக்கம் ஒன்றைத் தருகிறேன். அதற்கு அறிவிக்கலாம் (0718592020). அது எனது தொலைபேசி இலக்கம் அல்லாதபோதும் என்னுடன் பக்கத்தில் இருக்கும் எனது நம்பிக்கைக் குரிய உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரது தொலைபேசி இலக்க மாகும். அதில் என்னுடன் கதைக்க வேண்டும் எனக் கூறினால் அவர் ஏற்பாடு செய்து தருவார்.

இதுவரை காலமும் நாட்டில் பல பாகங்களிலும் சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைத்திருந்தோம். அவர்களால் எமக்கு நல்ல ஒத்துழைப்பு கிடைத்துவந்தது. இருப்பினும், நாம் எதிர்காலத்தில் அதில் ஒரு மாற்றம் செய்யவுள்ளோம்.

பிரஜைகள் பொலிஸ் சங்கங்களைப் புதிதாக அமைக்கவுள்ளோம். இதன் ஊடாக முன் கூறிய அநேக விடயங்களை இலகுபடுத்த முடியும். பொலிஸாருக்கு உதவும் வகையிலும், பொலிஸார் பொதுமக்கள் உறவைக் கட்டியெழுப்பும் வகையிலும் தொழிற் படக்கூடிய நற்பிரஜைகளை நாம் பிரஜைகள் அமைப்புக்கு இணைத்துக் கொள்வோம். அவர்களது உதவிகள் பெறப்படும்.

சில சந்தர்ப்பங்களில் உடைமைகளைப் பறிகொடுத்துள்ள பொதுமக்கள் எமது உதவிகளைத் தேடி வருகின்றனர். அப்படியானவர்களின் தேவைகளை இயன்றளவு விரைவாக நிறைவேற்றவேண்டியுள்ளது. அவர்களதுஉடைமைகளைத் தேடிக்கண்டுபிடித்து உரிய முறையில் ஒப்படைக்க முயற்சி செய்ய வேண்டியுள்ளது. அதேபோன்று பண மோசடிகளுக்கு முகங்கொடுத்துள்ள மக்களும் எம்மை நாடி வருகின்றனர். இயன்றளவில் அவர்களுக்கும் உதவிகளைப் பொலிஸார் செய்ய வேண்டியுள்ளது-என்றார்.(த)

**வீடு விற்பனைக்கு**

சாவகச்சேரி நகருக்கு அண்மையில் 3 பரப்புக் காணியுடன் இணைந்த நல்ல நிலையிலுள்ள பெரிய வீடு விற்பனைக்குண்டு.

**077 255 1871**

**ஒத்துமாறல்**

கொழும்பில் அரச திணைக்களம் ஒன்றில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ஒருவர் அதே பதவியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் ஒத்துமாற விரும்புகின்றார்.

**071 814 7206**

# கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## பதிவு இலக்கமும் திகதியும்:- P/46 08.02.1971
## அறிவித்தல்

## கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல் - 16.10.2016

வடக்கு, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.16ஆம் திகதிய 1028/6 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு, கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய திரு.உ.சுபசிங்க ஆகிய நான் 2015.10.12 ஆம் திகதிய 1936/06ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இற்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளினதும் கிளைக் குழுத் தெரிவிற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்களை 16.10.2016ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பின்வரும் அட்டவணையின்படி நடத்துவதற்கு அந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

**காலம் - 16.10.2016ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம் - முற்பகல் 10.00 மணி.**

| கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01 | கணேசபுரம் | திருமதி பு.தர்சினி - கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | கங்கை முன்பள்ளி மண்டபம், கணேசபுரம். |
| 02 | கனகபுரம் | திருமதி ச.தயாதேவி கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், கனகபுரம். |
| 03 | திருநகர் | திருமதி மு.புஸ்பலக்சுமி கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பாரதி முன்பள்ளி மண்டபம், திருநகர் தெற்கு. |
| 04 | ஜெயந்திநகர் | திரு.ப.லெட்டினன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | கிளி.இந்து ஆரம்ப வித்தியாலயம், ஜெயந்திநகர். |
| 05 | கிளி - மேற்கு | திருமதி கே.கலைவாணி கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி. |
| 06 | உருத்திரபுரம் - மேற்கு | திரு.க.உதயரூபன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், உருத்திரபுரம் மேற்கு. |
| 07 | உருத்திரபுரம் கிழக்கு | திரு.ச.முகுந்தவேல் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், உருத்திரபுரம் கிழக்கு. |
| 08 | சிவநகர் | திரு.அ.செந்தூர்ச்செல்வன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், சிவநகர் |
| 09 | புதுமுறிப்பு | திரு.வி.சிவபாலன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், புதுமுறிப்பு. |
| 10 | கிளி. கிழக்கு | திருமதி ஶ்ரீஎமல்டா கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி. |
| 11 | இரணைமடு கிழக்கு | திரு.செ.நிமலரூபன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், மருதநகர். |
| 12 | கனகாம்பிகைக்குளம் | திருமதி த.செல்வகேந்தினி கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், கனகாம்பிகைக்குளம். |
| 13 | திருவையாறு | திரு.சி.குணாளன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், முதலாம் பகுதி, திருவையாறு. |
| 14 | இரத்தினபுரம் | திருமதி இ.மாலினி கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், இரத்தினபுரம். |
| 15 | ஆனந்தபுரம் | திரு.க.பாலகிருஸ்ணன் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், ஆனந்தபுரம். |
| 16 | பாரதிபுரம் | திரு.உ.ஜெயந்தபிரகாஸ் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், பாரதிபுரம். |
| 17 | உதயநகர் | திரு.இ.சுரேஸ் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், உதயநகர் மேற்கு. |
| 18 | அம்பாள் குளம் | திரு.செ.ஜெயராசா கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், அம்பாள்குளம். |
| 19 | செல்வாநகர் | திரு.ஜெ.சஞ்சீவ் கூட்டுறவு அபி.உத்தியோகத்தர் | பொதுநோக்கு மண்டபம், செல்வாநகர். |

கிளை பொதுச்சபைக் கூட்டத்துக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் 1998.05.16 ஆம் திகதிய 1028/6 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் அறிவுறுத்தலுக்கு அமையக் கூட்ட அறிவுறுத்தல் வழங்கப்படும்.

கிளைக்குழு தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவுறுத்தல்களைச் சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வைக்கு வைக்கப்படும்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத் தகதியுள்ள உறுப்பினர்களை குறித்த அறிவுறுத்தலின்படி கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உ[illegible] நாயக ஆளுமை கொண்டதாகச் செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கூட்டுறவுத் திணைக்களம்,
முல்லைத்தீவு.

(K/190)(11.18)

திரு.உ.சுபசிங்க.
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.

## யாழ்ப்பாணத்தில்...

அனுசரணையுடன் ஆரம்பிக்கவுள்ளோம்.

இவ்வாறு தென்னிந்திய பிரபல இசையமைப்பாளரான கங்கை அமரன் நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாங்கள் தமிழ் மக்கள் வாழும் பல நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறோம். ஆனால் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளோம். இதுவரை யாரும் எங்களை அழைக்கவில்லை. தற்போது அழைத்திருக்கிறார்கள். எம்மை அழைக்கும்போது இருக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்தோம். ஒரு பிரச்சினையும் இல்லை வாருங்கள். உங்களைப் பார்ப்பாதற்கு ஈழத்து உறவுகள் ஆர்வமாக இருக்கிறார் கள் எனச் சொன்னார்கள். யாழ்ப்பாணம் வந்த இறங்கியவுடன் எம்மை அழைத்து உபசரித்ததைக் கண்டு நாம் மெய்மறந்து விட்டோம் - என்றார்.

பிரபல பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் தெரிவிக்கையில்,

கலைத்துறைக்கு வந்த புதிதில் ஒரு கச்சேரி நடக்கும்போது எவ்வளவு பதற்றமும், பயமும், சந்தோசமும் இருக்குமோ அதை இன்று நான் உணர்கிறேன். சினிமாத்துறைக்கு வந்து தற்போது ஐம்பது வருடங்கள். இந்த ஐம்பது வருடத்தில் முதற் தடவையாக யாழ்ப்பாணம் வந்துள்ளேன். நினைக்கும்போது வருத்தமாக உள்ளது. ஆனால் இப்போதாவது வந்துள்ளேனே என நினைக்கும்போது சந்தோசமாக உள்ளது.

இங்கு நடந்த துன்பங்கள் பற்றிக் கேட்டோம். மனதுக்கு கஷ்டமாக இருந்தது. ஆனால் அதனை மீண்டும் நினைவுபடுத்த ஆசைப் படவில்லை. அது வேண்டவே வேண்டாம். தமிழ்பற்று இருக்கும் இந்தமாதிரி இடத்தில் வந்து இசைக்கு முக்கியத்துவம் இருக்க முடியாது என்று சொல்லவே முடியாது. உங்களுக்கு ஒரு இசைப் பயிற்சிக் கல்லூரி இல்லாததற்குக் காரணம் நான் சொல்ல வேண்டிய விடயமல்ல. பெரும் பிரச்சினைகளில் நீங்கள் இருந்தீர்கள்-என்றார்.

(த-ரி7)

## முதலீட்டாளர்...

சந்திரிகா பண்டார நாயக்கா குமரரணதுங்க தலைமையிலான நல்லிணக்கச் செயலணியினால், யாழ். மாவட்டச் செயலகத்தில் முதலீட்டாளர்களுக்கான தகவல் மையம் திறந்து வைக்கப் பட்டது.

முதலீடுகள் தொடர்பான சகல தகவல்களையும் பெற்றுக் கொள்ளும் வகையில் இந்த அலுவலகம் செயற்பட்டு வருகின்றது. கொழும்பு அரசின் நிர்வாகத்துக்கு உட்பட்ட திணைக்களங்களின் பிரதிநிதிகளும், வடக்கு அரசின் நிர்வாகத்துக்கு உட்பட்ட திணைக்களங்களின் பிரதிநிதிகளும் இங்கு பணியாற்றிவருகின்றனர். மாவட்டச் செயலகத்தில் கடந்த இரண்டு மாத காலமாக மேற்படி அலுவலகம் இயங்கிவருகின்றது. இந்த நிலையில், அந்த அலுவலகத்தின் நிர்வாகப் பொறுப்பை வடக்கு அரசிடம் வழங்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் கோரியுள்ளார். இது தொடர்பில் மாவட்டச் செயலக நிர்வாகம் முடிவு எதனையும் எடுக்கவில்லை என்று அறிய முடிகின்றது.

(வ-5)

**வேலையாள்கள் தேவை**

யாழில் இயங்கும் பிரபல Automobile garage and work shop ஒன்றுக்குப் பின்வரும் வேலையாள்கள் தேவை.

- ✓ வாகன Spray பெயின்ரெர்ஸ்
- ✓ ரிங்கறிங் வேலை தெரிந்தோர்.
- ✓ வாகனங்களின் வயறிங் வேலை தெரிந்தோர்.
- ✓ வாகனங்களின் மெக்கானிக் வேலை தெரிந்தோர். (டீசல், பெற்றோல் வாகனங்கள்)

குறிப்பு: அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 822 9004, 077 393 1393**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுந்து....

விழிப்புணர்வுப் போராட்டத்தைச் சகல திணைக்களங்களிலும், பாடசாலைகளிலும் இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணிவரை மேற்கொள்ளுமாறு பலதரப்பினரும் அழைப்பு விடுத்துள்ளனர்.

அண்மைக்கால வீதி விபத்துக்களால் ஏற்படும் இழப்புக்களைத் தடுத்து சமூகத்துக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த விழிப்புணர்வு நிகழ்வை யாழ். போதனா வைத்தியசாலை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்னெடுத்துள்ளது. இதில் தவறாது அனைவரையும் பங்கெடுக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வுப் போராட்டம் ஒரு மணித்தியாலம் வடக்கு மாகாணம் முழுவதும் நடத்தப்படுகின்றது.

இந்தப் போராட்டத்துக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம், யாழ்ப்பாண வணிகர் கழகம், யாழ்ப்பாண உற்பத்தியாளர்கள் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம், இலங்கை வங்கி ஊழியர் சங்கம், பொதுச்சேவைகள் ஆணைக்குழு, அரச உத்தியோகத்தர் சங்கம் உள்ளிட்ட பல நிறுவனங்களும் முழுமையான ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளன.

அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்படாதபடி, தத்தமது வேலைகளை நிறுத்தி அலுவலக வாசல்களில் கூடிநின்று வீதி விபத்துக்களால் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதுடன் எதிர்கால விபத்துக்களைத் தடுக்கும் வகையிலான பதாதைகளைத் தாங்கிய வண்ணம் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுமாறு மருத்துவர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

ஒரு மணி நேரப் போராட்டத்தின் பின்னர் முற்பகல் 11.30 மணியளவில் வடபகுதித் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளால் கையொப்பமிடப்பட்ட மனு ஒன்று ஜனாதிபதியிடம் கையளிக்கவென யாழ்.மாவட்டச் செயலர் ஊடாக அனுப்பி வைக்கப்படவுள்ளது. அதன் பிரதிகள் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், நீதி அமைச்சர், வடக்கு மாகாண முதலமைச்சர், வட மாகாண ஆளுநர், பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

(த-4-ரி7)

## 2017இல்

வழங்கப்பட்டது. சுமார் 11 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வீடுகளும் 8 லட்சம் ரூபா பெறுமதியானவை. இதற்கு மேலதிகமாக வீட்டுத் திருத்தங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டங்களை அடுத்த ஆண்டும் தொடர்வதற்கு நிதி ஒதுக்கீடு கோரி, திட்ட முன்மொழிவு மீள்குடியேற்ற அமைச்சினால் முன்வைக்கப்பட்டுள்ளது. மீள்குடியேற்ற அமைச்சு அடுத்த ஆண்டில் வடக்கில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் சுவாமிநாதனுக்கும், வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பின்போது இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக 15 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கும், வீட்டுத் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளுமாறு திட்ட முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சின் மேற்படி கோரிக்கையை திறைசேரி சாதகமாகப் பரிசீலித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(வ-5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ மட்டுவில் தெற்கு அ.மி.த.க வித்தியாலய உப அதிபர்
திருமதி சுதாஜினி சிவதாஸன்
Na.Dip.in Teach, B.A , PGDE (Destension) Teachers Pradepa Praba
அவர்கள் 05.10.2016 அன்று
தாமரைத் தடாக அரங்கியல் மண்டபத்தில் மேதகு ஜனாதிபதி மைத்திரி பால சிறி சேன அவர்களின் கரங்களால் நல்லாசிரியருக்கான "குரு பிரதீபா பிரபா" விருது பெற்றமையினையிட்டு வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.
அன்புடன் வாழ்த்துவோர்
அம்மா,அக்கா குடும்பம், அண்ணா குடும்பம், தம்பி குடும்பம்

பாராட்டி வாழ்த்துகின்றேன்



பாஸ்கரன் பானுஜன்
யாழ்/ உடுவில் மகளிர் கல்லூரியின்
2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 177 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் முதல்நிலை சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அன்புடன் அப்பா- சண்முகம் பாஸ்கரன்
வன்னிவிளாங்குளம்,மாங்குளம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆண்டு 5 புலமைப்பரிசில் 2016 - பரீட்சையில் 173 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாவதாக சித்தியடைந்த எங்கள் அருமைப் பேரன்
Congratulation
செல்வன்
பி.நிவேஜிதன்
அவர்களை வாழ்த்துவதோடு மேலும் பல சித்திகளைப் பெற்று வாழ்வில் உயர்வடைய வேண்டுமென ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
இவரின் கல்வியில் ஊக்கத்தை மேம்படச் செய்த மல்லாகம் யா/தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி வழங்கிய ஆசிரியர்களுக்கும் எங்கள் மன மார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.
வாழ்த்துவோர் :
தாத்தா, அம்மம்மா,
தம்பிப்பிள்ளை - நடராஜா,
T.N. மாஸ்டரும், வனிதா நடராஜாவும்
காளிகோயிலடி,
மல்லாகம்.
(c 25656) (13.18)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன்
செல்வன் இராசரவிச்சந்திரன் சாஜித்
2016 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 175 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரை மனமார வாழ்த்துவதோடு, அவரை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
அம்மம்மா - பத்மாவதி ,
சித்திமார்- தர்ஷா,
மீரா ,நிரோஷினி.
நவாலி தெற்கு, மானிப்பாய்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் ம.மதுரிகன்
அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் கல்வி கற்று 2016 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
174 புள்ளிகளைப்
பெற்று சித்தியடைந்த
மகிந்தன் மாஜினி தம்பதியரின் செல்லப்புதல்வன் மதுரிகனை
மேலும் கல்வியில் சிறந்து அறிஞனாக விளங்க குலதெய்வத்தை வணங்கி வாழ்த்துகின்றோம்.
அம்மப்பா - சேனாதிராஜா - [illegible] குடும்பம்
பெரியப்பா - மதிவதனன் - மாலாதேவி குடும்பம்
மாமா - பிரேம்குமார் - பூரணி குடும்பம்
அளவெட்டி மேற்கு.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



2016 புலமைப்பரிசில் பரீட்சையில் 178 புள்ளிகளைப் பெற்று சித்திபெற்ற சென்.ஜோண் பொஸ்கோ மாணவி
பத்மலிங்கம் தருணிகா
அவர்கள் சந்திரசேகரப்பிள்ளையார் துணையுடன் கல்வியில் மேலும் சிறந்து விளங்க வாழ்துகின்றோம்
வாழ்த்துவோர்:
மாமா, மாமி,
சித்தப்பாமார், சித்திமார்,
மச்சான்மார்களான - சரண், யது, சது
தங்கைமார்களான - வைஷாலி, சங்கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் குடும்பத்தைப் பாதுகாக்க சுத்திகரிக்கப்பட்ட நீரை மட்டுமே அருந்துங்கள்




### பாதுகாப்பான வாழ்க்கை வாழ்வதற்கு ஆரோக்கியமான தண்ணீர் அருந்துங்கள்

- நீங்கள் ஏன் சுத்திகரிக்கப்பட்ட நீரை அருந்தவேண்டும்.
- குழாய் நீர் ஃப்ளோரைடு, ஆர்சனிக் மற்றும் குளோரின் கட்டி போன்ற நச்சு இரசாயனங்கள் கொண்டுள்ளது.
- சுத்திகரிக்கப்படாத நீரானது மார்பக, புளோரைற், கருப்பை, மூளைப்புற்றுநோய் போன்ற இடர்களை அதிகரிக்கும்.
- Pet Water மல சம்பந்தமான மற்றும் கல்லீரல் புற்று நோய், விரை விதை அற்றோப் போன்றவற்றை ஏற்படுத் தலாம்.
- சுத்திகரிக்கப்பட்ட நீர் உங்கள் குழந்தைகளையும் மொத்தக் குடும்பத்தையும் பாதுகாக்கும்.

**Head office**
**GOLDEN SAND INTERNATIONAL (PVT) LTD**
No 100/12, Madapatha, Piliyandala 011 335 6240
JAFFNA SHOWROOM - No 405 Stanly Rd, Jaffna.
021 561 4900, 077 022 7055, 077 310 1267


## வவுனியாவில்...

அமைப்பு நிறுவப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு-கிழக்கு மாகாணங் களைச் சேர்ந்த பெருமளவான இந்து மக் கள் கலந்துகொண்டனர்.

இந்து மதத்தின் வளர்ச்சி, மத மாற்றங் களும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களும், இந்து மக்கள் வாழும் பிரதேசங்களில் இடம் பெற்று வரும் மத ரீதியான ஆளுகைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர் பாக இந்த நிகழ்வில் கலந்துரையாடப் பட்டது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ் வரன், தமிழறிஞர் மறவன்புலவு சச்சிதானந் தம், வைத்திய கலாநிதி நந்தகுமார் உள் ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(த)

## கற்கோவளம்...

தாகவும், மேலும் இருவரைத் தேடி வருவ தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இ.இந்திரன் (வயது -35) என்பவரே வாள் வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கற்கோவளம் பகுதி யில் மேற்படி நபர் சென்று கொண்டி ருந்த போது, நான்கு பேர் அவரது கையில் வாளால்வெட்டியுள்ள னர். அதன் பின்னர் நான்கு பேரும் தப்பிச் சென்றுள்ளனர். குடும் பத்தகராறு காரணமா கவே இந்தச் சம்பவம் நடைபெற்றதாக முதற் கட்டவிசாரணைகளில் தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-5- 26)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சிவக்கொழுந்து ஸ்ரீபத்மராசா**

தோற்றம் 03 . 12 . 1955
மறைவு 13 . 10 . 2013

ஆண்டுகள் மூன்றானாலும் ஆறவில்லை உங்கள் நினைவுகள்
இத்தனை ஆண்டுகள் கழிந்தும் ஓவியமாய்
எம் நெஞ்சில் உங்கள் முகம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
ஸ்ரீமகால், கரணவாய். மனைவி, மகள்

(8/153)(12.18.)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 19.06.1938



மறைவு 11.09.2016

### அமரர் வைரமுத்து அருணகிரி

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய் பண்புடனே எமை வளர்த்து பாசமழை பொழிந்து
இன்பமுடன் நாம் வாழ எல்லாம் எமக்களித்து இறைவனடி சேர்ந்தனையோ தாத்தா!
மீண்டும் ஒருதடவை எங்களிடம் வாராயோ!
என்றென்றும் நாம் மறவோம் உம் நினைவால் வாழ்ந்திருப்போம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

2016.09.11 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவனின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்து, அஞ்சலிகள் ஆறுதல்கள் தெரிவித்த, இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி அறிதல்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (10.10.2016)திங்கட்கிழமை காலையில் கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், நாளை (11.10.2016) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று...

கதிரிப்பாய், அச்சுவேலி. (ச/25753)(11,17,18.) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தாயின் மடியில் 23 . 10 . 1973



நோயின் பிடியில் 10 . 09 . 2016

### அமரர் தர்மலிங்கம் தர்மபாலா

ஆறுதல் சொல்ல யார் இருந்தென்ன உங்கள் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமோ
தேறுதல் சொல்ல தெய்வம் வந்தென்ன உங்கள் திருமுகம் பார்த்தால் போதாதோ
எங்கள் வம்சத்தின் ஒளிவிளக்கு அணைந்து ஆனதோ ஒரு மாதம், பாசமோ மாறாது
மீளாத்துயில் கொண்ட எங்கள் பாசப் பெருவிளக்கே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் பாதத்தில்
எங்கள் கண்ணீர்ப் பூக்களைச் சமர்ப்பித்து ஆறுதல் அடைகிறோம்

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (10.10.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவர் சிவபதமடைந்த செய்தி கேட்டுத் தமது துயரை எம்முடன் பகிர்ந்து கொள்ள வெளிநாடுகளில் இருந்து ஓடோடி வந்த உறவுகளுக்கும், நோயுற்றவேளை நலம்பெற வேண்டி உழைத்திட்ட வைத்தியப் பெருமக்களுக்கும், ஊழியர்களுக்கும், இறுதிச்சடங்கு நடைபெற்ற வேளையில் உதவிய நன்மனத்தோருக்கும், மலர்வளையம் சாத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் எமது துயரில் பங்கு கொண்ட அன்புள்ளங்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொற்பதி வீதி, கொக்குவில். (கே/5220)(11.18.) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி அலுவலருக்கு விநாடி வினா போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 10
உள்ளூராட்சி மாதத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபை உள்ளூராட்சி அலுவலர்களுக்கிடையிலான விநாடி வினாப் போட்டியை நடத்தவுள்ளது. போட்டிகளில் கலந்து கொள்ளும் குழுக்களின் விவரங்களை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு பிரதேச சபை செயலாளர் சு.சுதர்ஜன் தெரிவித்தார்.
பொதுமக்கள் மற்றும் அலுவலர்களிடையே உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, யாழ்.மாவட்டத்தில் இயங்கும் மாகாண உள்ளூராட்சி அமைச்சு உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் மற்றும் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றில் பணிபுரியும் அலுவலர்களுக்கிடையில் குழு நிலையில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அலுவலகம் ஆகியவற்றின் கள கடமைகளுடன் தொடர்புபட்ட விடயப் பரப்புகளில் விநாடி வினாப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப் பட்டது. (ற-9)

### தரம் 5 புலமைப் பரிசிலில்

## முல்லை. மாவட்டத்தில் சித்தி வீதம் அதிகரிப்பு

முல்லைத்தீவு, ஒக்.10
முல்லைத்தீவு மாவட்டத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இந்த ஆண்டு தோற்றிய 2 ஆயிரத்து 168 மாணவர்களில் 167 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளைத் தாண்டி சித்தியடைந்துள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் இரு கல்வி வலயங்களான முல்லைத்தீவு , துணுக்காய் ஆகிய இரு கல்வி வலயங்களில் தற்போது 118 பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றில் ஆரம்ப பிரிவுக் கொண்ட 103 பாடசாலைகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 168 மாணவர்கள் பரீட்சையில் தோற்றினர்.
பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் மொத்தம் 167 மாணவர்கள் வெட்டுப் புள்ளியை தாண்டிய பெறுபேற்றைப் பெற்றனர். முல்லைத்தீவு கல்வி வலயத்தில் தோற்றிய மாணவர்களில் 141பேரும், துணுக்காய் கல்வி வலயத்தில் தோற்றிய மாணவர்களில் 26 பேரும் வெட்டுப்புள்ளிகளைத் தாண்டி சித்தியடைந்தனர். இந்த வலயங்களில் கடந்த ஆண்டில் சித்தி எய்திய மாணவர் நிலையைவிட இந்த ஆண்டு சித்தி வீதம் அதிகரித்துள்ளது.
முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 49 பாடசாலை மாணவர்கள் பரீட்சையில் தோற்றிய நிலையில், 26 பாடசாலை மாணவர்களும், துணுக்காய் கல்வி வலயத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 54 பாடசாலைகளில் 10 பாடசாலை மாணவர்களுமே சித்தி எய்தி உள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து 103 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில், 36 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளைத் தாட்டிய போதும் , 67 பாடசாலைகளைச் சேர்ந்த எந்த வொரு மாணவனும் வெட்டுப் புள்ளியை தாண்டவில்லை .
முல்லைத்தீவு, விசுவமடுவில் உள்ள மு/விசுவநாதர் ஆரம்ப பாடசாலையில் தோற்றிய 80 மாணவர்களில் 34 பேர் வெட்டுப்புள்ளியை தாண்டி சித்தியைப் பெற்றனர். மாவட்டத்தின் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மூன்று மாணவர்களும் இதே பாடசாலையைச் சேர்ந்தவர்களாவர்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் வெலிஓயாவில் இயங்கும் 7 பாடசாலைகளின் விவரம் இதில் உள்ளடக்கப்படவில்லை. (ற-101)




சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பரிசளிப்பு விழா கல்லூரியின் முதல்வர் தலைமையில் நேற்று நடைபெற்றது. புதிதாக அமைக்கப்பட்ட அரங்கில் இடம்பெற்ற விழாவில் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், கல்லூரியின் முன்னாள் முதல்வர்கள், பழைய மாணவ சமூகம், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-21)

# ரூ. 15 மில்லியனில் மாந்தை கிழக்கில் அபிவிருத்திகள்

முல்லைத்தீவு, ஒக். 10
மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 9 ஆயிரத்து 500 பேர் பயனடையக் கூடிய வகையில் கிராமிய உட்கட்டுமான அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்காக 15 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற பிரதச அபிவிருத்தி குழுக் கூட்டத்தின்போது, பிரதேச செயலகம் வெளியிடப்பட்ட புள்ளி விவரத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
அதில் உள்ளதாவது:
உட்கட்டுமான அபிவிருத்தி திட்டங்களுக்கு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் இருந்து 15 வேலைத் திட்டங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 15 வேலைத் திட்டங்களுக்காகவே இந்த 15 மில்லியன் ரூபா பிரதேச செயலகத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது.
வன்னி விளாங்குளத்தில் உள்ள பொதுநோக்கு மண்டபம் சீரமைப்பு, அம்பாள் குளம் பகுதியில் நெல் களஞ்சியசாலை அமைப்பு, ஒட்டறுத்தகுளம் பகுதியில் ஆரம்ப பாடசாலைக்கான கட்டடம் அமைப்பு, கல்ல விளான் குளம் பகுதியில் உள்ள பொதுநோக்கு மண்டப சீரமைப்பு, பாண்டியன்குளம் பகுதியில் உள்ள இளம் கதிர் விளையாட்டு கழக மைதானத்தில் பாதுகாப்பு சுவர் அமைத்தல், செல்வபுரம் மதகு கட்டுமானம், சிவபுரம், பாலிநகர், கரும் புள்ளியான், பூவரசன் குளம், மூன்றுமுறிப்பு, நட்டாங்கண்டல், விநாயகர்புரம், பொன்னகர் ஆகிய பகுதிகளில் நெல் உலரவைக்கும் திடல் அமைத்தல் ஆகிய திட்டங்களுக்குத் தலா ஒரு மில்லியன் ரூபா வீதம் 15 மில்லின் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் 9 ஆயிரத்து 500 பேர் பயனடைவார்கள்- என்றுள்ளது. (ற-21,ரி7)

## பரீட்சை பெறுபேறுகள் வெளியான தினத்திலிருந்து அதிபர் நியமனம்

### வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 10
அதிபர்தேர்வில் சித்தியடைந்துள்ள வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 392 பேருக்கும் அவர்களின் பரீட்சைப் பெறுபேறு வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து அதிபராகப் பதவி உயர்வுக் கடிதம் வழங்க வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அதிபர் தேர்வில் சித்தியடைந்த வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 392 பேருக்கும் அவர்களின் பரீட்சைப் பெறுபேறு வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து அதிபராக பதவி உயர்வுக் கடிதம் வழங்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளது.
பரீட்சையில் சித்தியடைந்த 392 பேருக்கும் அவர்களின் சேவைக் காலத்திலோ அல்லது தரத்திலோ எந்தப் பாதிப்பும் ஏற்படாத வண்ணமே செயற்பட்டுள்ளோம்.
குறித்த அதிபர்களுக்கு பாடசாலைகள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் எம்மால் ஏற்படவில்லை. தற்போது கடமை நிறைவேற்று அதிபராக உள்ளவர்களின் விடயத்துக்கான தீர்வை இன்னமும் மத்திய அரசு அனுப்பவில்லை. அதற்கான தீர்வு நாளை திங்கட்கிழமை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
அதிபர் தரத்தில் சித்தி எய்தியவர்களை அதிபர் தரத்தில் நியமிக்க வேண்டும் என்பதில் நாம் தெளிவாக உள்ளோம். அவர்களுக்கான மாற்று ஏற்பாடுகள் எம்மால் தயார் செய்யப்படுகின்றன.
392 அதிபர்களில் தற்போது 90 பேர் நியமிக்கப்பட்டு விட்டனர் . அதேபோன்று கடமை நிறைவேற்று அதிபர்களாக உள்ளவர்களில் அதிபர் தேர்வுக்கு முன்பு 3 ஆண்டுகள் சேவையைக் கடந்தவர்களுக்கு மட்டுமே பதில் பரீட்சைக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது என்று அறிகின்றோம். தற்போதுள்ள 300 கடமை நிறைவேற்று அதிபர்களில் 100க்கும் மேற்பட்டவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தை இழப்பதால், குறித்த வெற்றிடம் அண்மையில் சித்தி எய்திய அதிபர்கள் மூலமே நிரப்பப்படவேண்டும் -என்றார். (ற-101)

## சந்தேகத்துக்கு இடமாக இரவு நடமாடிய இருவரை மடக்கிப் பிடித்த மக்கள்

### சாவகச்சேரி, பெருங்குளத்தில் நன்கு கவனித்து பொலிஸில் ஒப்படைப்பு

சாவகச்சேரி, ஒக்.10
சாவகச்சேரி நகரப் பகுதியில் பெருங்குளம், கல்வயல், கற்குளி போன்ற இடங்களில் கடந்த இரண்டு மாதங்களாக இடம்பெற்ற பல்வேறு திருட்டுக்களில் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இளைஞர்கள் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.
நேற்றுமுன்தினம் மாலை பெருங்குளம் பகுதியில் இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் நடமாடியுள்ளனர். இரவு 9 மணியளவில் பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு முன்பாகச் சந்தேகத்துக்கிடமான முறையில் [illegible] ஊர்மக்கள் அவர்களை அழைத்து விசாரித்தனர். திடீரென குறித்த இருவரும் தோட்ட வெளி ஊடாகத் ஓடத் தொடங்கினர். அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்த ஊரவர்கள் இருவரையும் வளைத்துப் பிடித்து பொலிஸிடம் ஒப்படைத்தனர்.
அவர்களிடம் இருந்த அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் என்பவற்றிலிருந்து அவர்கள் ஏழாலை, மயிலங்காட்டைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்தது.
பொலிஸாரின் விசாரணையில் வில்வத்து வைரவர் ஆலயத்தை அண்மித்த மக்கள் செல்ல முடியாத பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந் மோட்டார் சைக்கிள், இரு தலைக்கவசங்கள் மாற்று உடைகள், பாதணிகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.
குறித்த இருவரில் ஒருவர் இரு மாதங்களுக்கு முன்னர் பெருங்குளத்தில் உள்ள காணி ஒன்றில் கிணறு வெட்டிக் கொடுக்க வந்தவர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். அதன் பின்னர் நான்கு வீடுகளில் நகைகள், பணம், திருடப்பட்டிருந்தன. பெருங்குளம் பிள்ளையார் ஆலயத்திலும் திருட்டு இடம்பெற்றது. இவற்றுடன் இந்த இருவருக்கும் தொடர்பு இருக்கலாம் என்றும் மக்கள் சந்தேகிக்கின்றனர்.
வளைத்துப் பிடித்தபோது பொதுமக்கள் முறையாகக் கவனித்ததால் நேற்று இரவு குறித்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அதிகாலை 5 மணியளவில் இயற்கைக் கடன் கழிக்கச் சென்ற அவர்களில் ஒருவர் தப்பியோடினார் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.
தப்பியோடியவர் நேற்று மதியம் மீண்டும் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் தீர்வு விடயத்தில்

# வடக்கு -கிழக்கு மக்களுக்கு மலையகத் தமிழரும் ஆதரவு

## இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 10
வடக்கு - கிழக்கு மக்கள் புதிய அரசமைப்புக்கு முன்வைத்துள்ள அரசியல் கோரிக்கைகளுக்கு மலையகத் தமிழர்கள் முழு ஆதரவை வழங்குவார்கள்.

இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


கடந்த பத்து நாள்களாக மலையகத் தமிழர்கள் தமது சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்தக் கோரி தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அதற்கு ஆதரவாக வடக்கிலும் போராட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பத்திரிகைகள் ஊடாக அறிந்ததும் என் மனம் நெகிழ்ந்து. இவ்வாறு நாம் மொழியினால் ஒன்றுபட்டு எமக்குள் இருக்கும் வேற்றுமைகளைக் களையவேண்டும்.

நாம் வடக்கு - கிழக்கில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களோடு ஒன்று சேர்ந்து எமது கோரிக்கைளை வலுப்படுத்தவேண்டும். முழு அதிகாரம் வேண்டும் என்று தமிழர்கள் போராடி வருகின்ற நிலையில், போரினால் பாதிக்கப்பட்ட மக்களினுடைய அரசியல் பின்னடைவுகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில் அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும். அரசியல் தீர்வுக்காக மலையக மக்கள் எப்பொழுதும் உறுதுணையாக இருப்பார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மலையகத்தில் இருந்தாலும் வடக்கு கிழக்கு மலையகம் என்று பிரித்துப் பார்ப்பதில்லை. எல்லா மாகாணத்தையும் சமமாக மதிக்கின்றேன். அனைவருக்கும் என்னால் பெற்றுக் கொடுக்கக் கூடியவற்றை எல்லாம் பெற்றுக் கொடுக்கின்றேன்.

தற்போது வடக்கு - கிழக்கில் தொண்டராசிரியர் பிரச்சினை காணப்படுகிறது. போர்ச் சூழலிலும் பணியாற்றிய தொண்டராசிரியருக்கு நியமனம் வழங்க வேண்டும். அது தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளேன் என்றார் இராஜாங்க கல்வி அமைச்சர் இராதாகிருஸ்ணன்.(வ-5-ரி1)





# எஸ்.பி.பியின் இசைநிகழ்ச்சியில் பல ஆயிரம் ரசிகர்கள் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 10
அரங்கு நிறைந்த பல ஆயிரம் - ரசிகர்களின் மத்தியில் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் மற்றும் கங்கை அமரன் கலந்து கொண்ட இசை நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. யாழ். மாநகர சபை மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த சுமார் பத்தாயிரம் பேர் வரையில் கலந்து கொண்டனர். அத்துடன் பொலிஸ் மற்றும் சிறப்பு அதிரடிப் படையின் பாதுகாப்பு என்பனவும் நிகழ்வு நடைபெற்ற பிரதேசத்தைச் சுற்றி போடப்பட்டிருந்தது.

தென்னிந்திய திரைப்படப் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் மற்றும் கங்கை அமரன் ஆகியோர் கலந்து கொண்ட இசை நிகழ்வு நேற்று மாலை 7 மணிக்கு ஆரம்பமானது. ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் நிகழ்வு தொடங்கியது.

நிகழ்வில் ஆரம்பத்தில் உரையாற்றிய கங்கை அமரன், தமிழக முதலமைச்சராக எம்.ஜி. ஆர். இருந்தபோது ஈழத்துக்காக புலம்பெயர் தேசங்களில் இசை நிகழ்சி நடத்தி பணம் சேர்த்தேன். இதனால் விசாரணைகளையும் எதிர்கொண்டிருந்தேன். நடந்ததை நாம் நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது. விதைக்கப்பட்ட விதைகள் மேலெழுந்து வரும். அவை வீணாகிப் போகாது என்றார்.

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் தெரிவித்ததாவது, புண்பட்ட உங்கள் மனத்தினை இசை என்னும் மருந்தினால் ஆற்ற வந்துள்ளேன். மேலிருக்கும் எம்மவர்களை வணங்கிக் கொண்டு பாடுகின்றேன் - என்றார்.

நிகழ்வு பி.ப. 5 மணிக்கு ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்ட போதும் இரவு 7 மணிக்கே ஆரம்பமானது. (வ-5-37)

## ஆர்.பி.ஜி. குண்டு வவுனியாவில் நேற்று மீட்பு



வவுனியா காட்டுப் பகுதியில் இருந்து நேற்று ஆர்.பி.ஜி. குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக ஈரப் பெரியகுளம் பொலிஸார் தெரிவித் தனர்.

வவுனியா மாவட்டத்தை அண்மித்துள்ள பகுதியான அலகல்ல அலுத்கம காட்டுப் பகுதியிலேயே இந்தக் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

அலகல்ல அலுக்கம காட்டுப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தை அடுத்து அந்தப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு பெரும் குண்டுச்சத்தம் கேட்டுள்ளது. இந்த நிலையில் நேற்றுக் காலை அப்பகுதி மக்கள் சென்று பார்வையிட்டுள்ளனர். இதன்போது ஆர்.பி.ஜி குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு, பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாரால் குண்டு மீட்கப்பட்டது எனக் கூறப்பட்டது. (த-21)

## சு.க. செயலாளர் மாற்றப்படும் அறிகுறி

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைச் செயலாளர் பதவியில் வெகுவிரைவில் மாற்றமொன்று ஏற்படும் அறிகுறி தென்படுவதாக அந்தக் கட்சியின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய செயலாளரின் நடவடிக்கைகள் குறித்து கட்சியின் பெரும்பாலான அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட உறுப்பினர்கள் பெரும் அதிருப்தி கொண்டிருப்பதாகவும், அவரது திறமையற்ற நிர்வாகத்தால் கட்சி நாளுக்குநாள் பலவீனமடைந்து வருவதாகவும் கட்சியின் உயர்மட்டத்துக்கு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருப்பதால் அப்பதவியில் விரைவில் மாற்றமொன்று வரும் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

## நவம்பரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ண தெரிவித்தாவது:

1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அரசமைப்பை மாற்றியமைப்பதற்கு நாடாளுமன்றம் ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியது. இதனடிப்படையில் அரசமைப்பு நிர்ணயச் சபை உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் வழிநடத்தும் குழுவும், உப குழுக்களும் அமைக்கப்பட்டன. இதற்கும் சபையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது. ஆளும், எதிரணி உறுப்பினர்கள் மேற்படி குழுக்களில் அங்கம் வகிக்கின்றனர். இது மக்களுக்கான பணியென்பதால், ஜனநாயக முறைமையின்கீழ் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பூர்வாங்கப் பணிகள் முடிவடைந்த பின்னர், அடுத்த மாதமளவில் அரசமைப்பு நிர்ணயச் சபைக்கு (நாடாளுமன்றத்துக்கு) வழி நடத்தும் குழு அறிக்கையொன்றை வழங்கும். இது புதிய அரசமைப்புக்கான சட்டவரைவு அல்லவென்பதை சகலரும் புரிந்து கொள்ளவேண்டும். அந்த அறிக்கை தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்ற பின்னரே, அரசமைப்பு சம்பந்தமாக இரண்டாம்கட்டச் செயற்பாடுகள் ஆரம்பமாகும்.

எந்தவொரு சரத்துமே இன்னும் முன்மொழியப்படவில்லை. ஆகவே, பௌத்த மதத்துக்குரிய முன்னுரிமை நீக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுவது போலிக் கருத்தாகும். இதை மக்கள் நம்பக் கூடாது. மதம் சார்ந்த விடயங்கள் பற்றி வழிநடத்தும்குழு இன்னும் பேச்சையே ஆரம்பிக்கவில்லை. இந்த நிலையில்தான் இப்படியான பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கு இந்த அரசு ஒருபோதும் அனுமதி வழங்காது. நாம் அனைவருமே பிரிவினை வாதத்துக்கு எதிரானவர்கள்.

இனப்பிரச்சினைக்கு நிலையானதொரு அரசியல் தீர்வை ஒன்றுபட்ட நாட்டுக்குள் முன்வைப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது. பிச்சைக்காரன் புண்போல் இனப்பிரச்சினையைப் பயன்படுத்தி இனியும் அரசியல் நடத்துவதற்கு இடமளிக்க முடியாது. நிலையானதொரு அரசியல் தீர்வு பற்றி கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

அதேவேளை, ஆறு உபகுழுக்களின் அறிக்கைகளையும் வழிநடத்தும் குழு ஆராயும். அரசமைப்புத் தயாரிப்புப் பணியில் அவசரமும் கூடாது. இழுத்தடிப்பும் இருக்கக் கூடாது. எனவேதான், இந்த விடயத்தை அரசு நிதானமாக கையாண்டு வருகின்றது - என்றார். (வ-5)

# நகரைச் சேர்ந்த முதியோர்களே முதியோர் இல்லங்களில் அதிகம்

## கிளி. மேலதிக மாவட்ட செயலாளர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஒக். 10
முதியோர் இல்லங்களில் கிராமத்தைச் சேர்ந்த முதியோர்களை விட நகரத்தைச் சேர்ந்த முதியோர்களே அதிகம் காணப்படுகின்றனர்.

இவ்வாறு சுட்டிக்காட்டினார் கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் சி. சத்தியசீலன்.

கிளிநொச்சி - செல்வா நகர் கிராமத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற முதியோர், சிறுவர் தின கௌரவிப்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த மாவட்டத்தில் இதுவரை காலமும் முதியோர்களைக் கௌரவிக்கும் பல நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. அவை அனைத்தும் அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்களாலே நடத்தப்பட்டன. ஆனால் இன்று முதன் முதலாக கிராமத்து பொது மக்கள் ஒன்று சேர்ந்து தங்கள் கிராமத்தில் உள்ள முதியோர்களை கௌரவிக்கும் நிகழ்வை நடத்துகின்றனர். இது மகிழ்ச்சியளிக்கிறது.

எமது சமூகத்தில் உள்ள முதியோர் இல்லங்களில் கிராமத்தைச் சேர்ந்த முதியோர்களை விட நகரத்தைச் சேர்ந்த முதியோர்களே அதிகம் காணப்படுகின்றனர். முதியோர்கள் எம் சமூகத்தின் பொக்கிசங்கள். அவர்களுக்குரிய கௌரவம் கொடுக்கப்பட்டு அவர்கள் பராமரிக்க படவேண்டும் - என்றார்.

செல்வாநகர் கிராமத்தில் செயற்படுகின்ற மூத்த பிரஜைகள் சங்கம் மற்றும் மக்கள் ஒன்றிணைந்து குறித்த கிராமத்தில் உள்ள முதியோர்கள் மற்றும் சிறுவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை ஏற்பாடு செய்தனர். நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிபிள்ளை மற்றும் கிராம அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ற-21,35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய தீபாவளித் திருநாளை முன்னிட்டு

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

# மாபெரும் மெகா சேல்

# இந்தியன் பஜார்



உங்களுக்குத் தேவையான
திருமணப் பட்டுப்புடைவைகள், கொட்டன் சல்வார்கள்,
நெற் சல்வார்கள், சல்வார் துணிகள் மற்றும் சிறுவர் சிறுமியருக்கான
ஆடைத் தெரிவுகளை மாபெரும் விலைத் தள்ளுபடியில்
பெற்றுக் கொள்ளலாம்.

**இடம்**

**யாழ். வீரசிங்கம் மண்டபம்**

**காலம்**

**05.10.2016 முதல் 30.10.2016 வரை**

**சல்வார் துணிகள்**

| | | |
|---|---|---|
| ❖1 டொப் சல்வார் துணி (கொட்டன்) | ~~1000/=~~ | 750/= |
| ❖2 டொப் சல்வார் துணி (சில்க்) | ~~1250/=~~ | 1000/= |
| ❖3 டொப் சல்வார் துணி (சில்க்) | ~~1750/=~~ | 1500/= |

யாழ். மாவட்ட வாடிக்கையாளர்களின் நலன்கருதி
**எதிர்வரும் 21.10.2016 வெள்ளிக்கிழமை பி.ப 4.30 இற்கு**
**இல.80, கஸ்தூரியார் வீதி,**
**மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி**
**முதலாம் மாடியில்**
**திருமண பட்டுப்புடைவைகளின் பூங்காவனம்**
**"இந்தியன் செலக்ஷனின்" புதிய காட்சியறை**
**திறந்து வைக்கப்படவுள்ளது**
என்பதை அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

சகல வாடிக்கையாளர்களையும்
கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி
இந்தியன் செலக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இன்று சில பகுதிகளில் மின் தடை ஏற்படும்

யாழ்ப்பாணம், ஒக்.10
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

யாழ். பிரதேசத்தில் வறுத்தலைவிளான், டச்சுவீதி தெல்லிப்பழை, அச்செழு, காங்கேசன்துறை கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படைமுகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5ஆவதுபொறியியல்படைமுகாம், பலாலி இலங்கை விமானப் படைமுகாம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப் படை ஓய்வுகால விடுதிஆகிய இடங்களிலும், வவுனியாப்பிரதேசத்தில் பெரியார்குளம் (பூந்தோட்டம்), சிதம்பர புரம், தெற்கிலுப்பைக் குளம், வெளிக்குளம் ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் நானாட்டான், எருவிட்டான், அறுக்குக்குன்று, அச்சங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-ரி)

# வாணி விழா

தென்மராட்சி, ஒக்.10
தென்மராட்சி பிரதேச செயலக வாணி விழா இன்று பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் நடத்தப்படும். (ற-9)

++++++++++

தென்மராட்சி, ஒக்.10
பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் வாணி விழா இன்று மு.ப.10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும்.

(ற-9)

++++++++++

தென்மராட்சி, ஒக்.10
கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய வாணி விழா இன்று மு.ப.10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக இந்து கலாசார பிரிவு அபிவிருத்தி அலுவலர் திருமதி ம.விஜயகுமார் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய சைவசமய பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராமலிங்கமும், கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் கு.சுமுகலிங்கமும் கலந்துகொள்வர். (ற-9)

# தமிழர் கலைகளைப் பயில்வதற்கு இளையோரை ஊக்குவிக்கவேண்டும்

## யாழ். மாவட்டச் செயலாளர் வேதநாயகன் கோரிக்கை

சாவகச்சேரி, ஒக். 9
ஒவ்வொரு இனத்தின் பெருமைகளை விளக்குவன அந்த இனத்தின் கலை கலாசார விழுமியங்களாகும். ஒவ்வொரு கலைகளும் காலம்காலமாக பரம்பரையாகத் தொடர்ந்து செயற்பட்டு வந்தன. எனினும் அண்மைக் காலமாக தமிழர் கலைகளைக் கற்பதற்கு இளம் சமுதாயத்தினர் முன்வராததால் அவை அழிவடைந்து போகும் நிலை காணப்படுகிறது.

தமிழ் இனத்தின் கலைகளை இளம் சமுதாயத்தினர் மத்தியில் உட்புகுத்துவதன் மூலம் எதிர்காலச் சந்ததிக்கு ஊக்கமளிக்கும் நடவடிக்கையாக காணப்படும் என்பதுடன் அவைகள் எமது மக்கள் மத்தியில் ஆவணமாகவும் காணப்படும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பண்பாட்டுப் பெருவிழாவில் யாழ். மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டச் செயலகமும் யாழ்.மாவட்ட கலை கலாசார பேரவையும் இணைந்து நடாத்திய யாழ்ப்பாணப் பண்பாட்டுப் பெருவிழா நேற்று சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்டச் செயலாளரும் மாவட்ட கலை கலாசார பேவையின் தலைவருமான நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டார். இந்த விழாவில் 13 கலைஞர்களுக்கு 'யாழ்.முத்து' என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதன் போது தலைமையுரையாற்றிய யாழ். மாவட்டச் செயலாளர் நா. வேதநாயகன் தெரிவித்ததாவது:



ஏன் எமது கலைகள் அழிவடைந்து போகின்றன என்பதை எந்தவகையிலும் கண்டு பிடிக்க முடியாத நிலை காணப்படுகிறது. மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேசத்துக்கெனவும் தனித்துவமான கலைகள் இருந்தன. அவற்றை இன்று முன்னெடுத்துச் செல்ல எவரும் முன்வராததால் அழிந்து கொண்டு போகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் பல்வேறு கலைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் உள்ளனர். அந்தக் கலைகளைக் கற்பதற்கு அவரது குடும்பத்தினரோ அல்லது வேறு யாருமோ முன்வராததால் பல மூத்த கலைஞர்கள் தமது கலைத் திறமைகளை வெளிக்கொணர பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டும், பயில எவரும் முன்வராததால் கலையின் வளர்ச்சி அருகி வருகின்றதைக் காண முடிகிறது. இந்த நிலை நீடித்தால் தமிழ் மக்களுக்கான கலை கலாசார விழுமியங்கள் ஆவணப் பொரும்களாகவும் செல்பிகளாகவும் மட்டுமே எமது பிரதேசத்தில் காணப்படும்.

முன்னைய காலங்களில் ஒரு கலையை தெளிவுறப் பயின்றவர்கள் தனது கிராமத்தில் உள்ள பலருக்கு அதனைச் சொல்லிக் கொடுத்து கலையை வளர்த்து வந்தனர். நாட்டுக்கூத்து, இசை, நடனம், கிராமியக் கலைகள் போன்றவை தெரியாதவர்கள், அந்தக் கிராமங்களில் இல்லையென்று சொல்லுமளவுக்கு திறமைசாலிகளாகக் காணப்பட்டனர்.

கிராமத்தில் ஒரு நிகழ்வு இடம்பெற்றால் அதன் நெழிவு சுழிவுகள் அனைவர்க்கும் தெரிந்திருக்குமென்பதால் மிக அவதானமாக நிகழ்வுகளில் செயல்வடிவமாக்கிக் காண்பிப்பர். இன்று தொல்பொருள் காட்சியகத்தில் காணப்படும் பல்வேறு பொருள்கள் எமது முன்னோரின் நவீன முறையிலான கலை வடிவங்களின் பிரதிபலிப்பை எமக்கு விட்டுச் சென்றுள்ளனர். முன்னர் வீடுகளில் காணப்படும் மரத்திலான பல்வேறு பொருள்கள் இன்றும் எமது கலைகளின் நுட்பத்தை தெளிவாகக் காட்டுகின்றன.

மாவட்டத்தில் கலை கலாசாரம் அழிந்துவிடாமல் பாதுகாக்க கலை கலாசாரப் பேரவையினர் வருடாந்தம் இவ்வாறான நிகழ்வுகளை ஒவ்வொரு பிரதேசத்திலும் நடாத்திவருகின்றனர். அத்துடன் பிரதேச செயலகங்கள் மூலமும் இவ்வாறான நிகழ்வுகளை நடத்தி, அந்தந்த பிரதேசத்தில் காணப்படும் கலைகளுக்கு புத்துயிர் அளித்து, அதன் மூலம் அந்தக் கலைகளைப் பயில்வோருக்கு ஊக்குவிப்பதற்கான களங்களை அமைத்து வழங்குகின்றனர்.

நாட்டில் தற்போது காணப்படும் கலாசார பிறழ்வுகளுக்கு கலைகளில் நாட்டமில்லாதவர்களால் மேற்கொள்ளப்படும் செயலாகவே கருதமுடியும். இளம் சமூகத்தின் மத்தியில் பிறழ்வு ஏற்பட்டாலும் எமது பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்க பேரவை தன்னாலான பங்களிப்பினை மேற்கொண்டு வருகின்றது.

முன்னைய காலத்தில் ஒரு குடும்பத்தில் வாய்ப்பாட்டு, வீணை மிருதங்கம், புல்லாங்குழல் வாசிக்கக்கூடிய நிலையில் தமது பிள்ளைகளை உருவாக்கி தமது வீட்டு நிகழ்வுகளுக்கு அந்தக் குடும்பமே பார்த்து கேட்டு மகிழ்ந்த காலம் ஒன்று இருந்தது. இன்றைய குடும்பங்களில் எத்தனை பேருக்கு மிருதங்கம், புல்லாங்குழல், வீணை வாசிக்கத் தெரியும் என்றால் அது பூஜ்ஜியமாகவே காணப்படுகிறது. இவற்றின் இசைகளை இன்று வானொலிகளிலும் தொலைக் காட்சிகளிலுமே ரசிக்கின்றோம். தற்போது கூட நாதஸ்வரக் கலை தெரிந்த பலர் கீர்த்தனைகளுக்குப் பதிலாக சினிமாப் பாடல்களையே விரும்பி வாசிக்கின்றனர். அதனையே இளம் சந்ததியினரும் விரும்புகின்றனர் என்பது எமக்குத் தெரிந்தாலும் நாதஸ்வர இசையில் காணப்படும் கீர்த்தனையும் ரசிக்கக் கூடிய கலையாகும்.

அருகிப்போகும்-அழிந்துபோகும் கலைகளை மீண்டும் உருவாக்கி எமது கலைகளை கலாசாரத்தைப் பேண நீண்ட பாதையில் பயணிக்கவேண்டிய நிலை தெரிந்தாலும் முன்னரைப் போல கிராமங்களில் நாட்டுக்கூத்து உட்பட இலைமறைகாயாகக் காணப்படும் கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணர அனைவரும் முன்வரவேண்டும்- என்றார். (வ-4,9)

# விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி இன்று அரியாலையில் ஏற்றலாம்

யாழ்ப்பாணம், ஒக். 10
அரியாலை பொதுசுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இன்று திங்கட்கிழமை தொடக்கம் விலங்கு விசர் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. பிரதேச மக்கள் தவறாது தமது நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றுமாறு யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி கோரியுள்ளார்.

இன்று திங்கட்கிழமை முற்பல் 9 மணி தொடக்கம் மு.ப. 11 மணி வரை அருணோதயா சனசமூக நிலையத்திலும், மு.ப. 11 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை அரியாலை திருமகள் சனசமூக நிலையத்திலும், பி.ப. 2.30 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை அரியாலை மலர் வீதியிலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப. 11 மணி வரை அரியாலை செம்மணிவீதி பாரதி சனசமூக நிலையத்திலும், மு.ப. 11 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை நாயன்மார்க்கட்டு அம்பாள் சனசமூக நிலையத்திலும், பி.ப. 2.30 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை நாயன்மார்கட்டு மகேஸ்வரி பாடசாலையிலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் மு.ப. 11 மணி வரை அரியாலை சனசமூக நிலையத்திலும், மு.ப. 11 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை அரியாலை முள்ளி வீதியிலும், பி.ப. 2.30 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை அருளம்பலம் வீதிச் சந்தி ஆள்காட்டி வீதியிலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப. 11 மணி வரை அரியாலை இராஜேஸ்வரி வீதியிலும், மு.ப. 11 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை கனகரட்ணம் வீதி நாவலர் வீதிச் சந்தி அரியாலையிலும், பி.ப. 2.30 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை நாவலர் வீதி கனகரட்ணம் மகாவித்தியாலயம் அருகிலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப. 11 மணி வரை பாரதி வீதி, முதலியார் வீதி அரியாலையிலும், மு.ப. 11 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை கச்சேரி நல்லூர் வீதி றக்கா வீதிச் சந்தி அரியாலையிலும், பி.ப. 2.30 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை பேரின்பநாயகம் வீதியிலும் தடுப்பு மருந்து ஏற்றப்படும்

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்கு உரிமைக்கட்டணமாக 20 ரூபா செலுத்தி தடுப்பு ஊசியை ஏற்றிக்கொள்ள முடியும் என்று சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (ற-ரி)

# வீரசிங்கம் சிலை அமைப்பு நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.10
கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் உருவச் சிலை அமைப்பதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நாளை செவ்வாய்க்கிழமை விஜயதசமி தினத்தன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சிலை அமைப்பது சம்பந்தமான சபையின் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கூட்டுறவு பெரியார் வீரசிங்கத்தின் நினைவு தினமான டிசெம்பர் மாதம் ஐந்தாம் திகதிக்கு முன்பாக அவரின் நினைவுச் சிலையை அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

அதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளை விஜயதசமி தினத்தன்று காலையில் ஆரம்பிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சிலை அமைப்பு குழுவின் உறுப்பினரான செ.இலகுநாதன் தெரிவித்தார்.

சிலை அமைப்பதற்கான நிதி அன்பர்கள் மற்றும் கூட்டுறவாளர்கள் போன்றோரிடமிருந்து பெறப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ற-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருபூசை

யாழ்ப்பாணம், ஒக். 10
சுத்த சிவ சமரச சன்மார்க்க சாது குருபீடத்தில் சிவ சின்னத்தம்பி சுவாமிகளின் குருபூசை இன்று மறவன்புலோவிலுள்ள சமாதி குருபீடத்தில் நடைபெற உள்ளது என்று நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (வ)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 09.10.2016 | வெற்றி வாரம் 2041 | ஊதா
கும்பம்
வெற்றி இலக்கங்கள்
07 31 51 57
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 5,324,140 /-

Galaxy Star
வெற்றி வாரம் 099
திகதி 09.10.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
01 04 23 38 44
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 4,320,380/-

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 14.06.1945
மறைவு 10.09.2016


**மேரி மக்டலின் வேதநாயகம்**
**(பொன்னுக்கிளி)**

துன்பக்கடலில் துடுப்பிழந்த படகானோம்
அன்பின் நிறைவே எங்களது வாழ்வுக்காய்
சந்தனமாய் தேய்ந்தவரே எம் கடனை நாம் தீர்க்க
இன்றே பிறப்பெடுத்து எம் அருகில் வந்திடுவீர்

ஒஸ்லோ, நோர்வே. குடும்பத்தினர்.

# கொழும்பு அரசுடன் கூட்டமைப்பு சரணாகதி அரசியல் செய்யவில்லை

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஒக்.10
தமிழ்த் தேசியக் கூடமைப்பானது நல்லாட்சி அரசுடன் ஒருபோதும் சரணாகதி அரசியல் செய்யவில்லை என்பதனை உறுதியாகக் கூறுகின்றேன். சந்தர்ப்பங்கள் கொடுக்கப்பட வேண்டும். அந்தச் சந்தர்ப்பங்கள்தான் எமக்கு நீதியான நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பாக அமையும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமாகிய செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பிரதேச அலுவலக திறப்பு விழா விசுவமடு 12ஆம் கட்டையடியில் நேற்றுமுற்பகல் திறந்து வைக்கப்பட்டது. அதில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் நினைத்திருந்தால் இந்த அரசுடனோ அல்லது கடந்த மகிந்த ஆட்சிக் காலத்திலோ எங்களுடைய இனத்தை விலைபேசி வசதி வாய்ப்பாக வாழ்ந்திருக்க முடியும். ஆனால் அந்த எளிய வேலையைச் செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றைக்கும் முனையாது. எங்கள் மக்களினது வேணவாக்களை அடைமானம் வைத்து எந்தவொரு அடிமைச் சாசனமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் எழுதப்படவில்லையென்பதைஆணித்தரமாக கூறிக்கொள்கின்றேன்.

பன்னாட்டுச் சமூகத்திடமும் அரசிடமும் நியாயம் கேட்பதற்கான வழிமுறைகள்தான் தற்போது கையாளப்பட்டு வருகின்றன. அதற்காக இந்த அரசிடம் சரணாகதி அடைந்துவிட்டோம் என அர்த்தம் ஆகிவிடாது. எங்கள் மக்களினது விருப்பங்களை அரசியல் வேணவாக்களை நிறைவேற்றும் வகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருகின்றது.


சந்தர்ப்பங்கள் கொடுக்கப்பட வேண்டும், அந்தச் சந்தர்ப்பங்கள்தான் எமக்கு நீதியான நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பாக அமையும். சந்தர்ப்பங்கள் எம்மால் கொடுக்கப்படாத பட்சத்தில் எதிரிகளாக இருக்கலாம் அல்லது அரசாக இருக்கலாம், சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தோம், அவர்கள் சந்தர்ப்பங்களை வழங்கவில்லை என்னும் பழியை எம்மீது சுமத்தி தம்மால் ஒன்றும் செய்யமுடியாதிருப்பதாக தங்களை நியாயப்படுத்துகின்ற அந்தச் செயற்பாடுகள் அவர்களின் பக்கத்தில் தோன்றக்கூடாது என்பதற்காகவே சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கின்றோம் – என்றார்.

இந்த நிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் பன்னாட்டு மாணவர் அமைப்பினால், விசுவமடு பிரதேசத்துக்குட்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் 7 பேருக்கு மாதாந்தம் 5000 ரூபா வீதம் 4 ஆண்டுகளுக்கு வழங்கப்படவுள்ள நிதியுதவியின் ஆரம்பகட்ட கொடுப்பனவுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.மயூரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(வ-4,21,ரி7,102,35)

## நன்றி நவில்கின்றோம்



தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் புதிய கட்டட பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக பழைய மாணவர் சங்கத்தின் அழைப்பை ஏற்று வருகை தந்த கௌரவ கல்வி இராஜாங்க அமைச்சர் உயர்திரு. இராதாகிருஸ்ணன் அவர்கள் கட்டட வேலையினைப் பார்வையிட்ட பின்பு பழைய மாணவர் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று பாடசாலைக்கு 130 அடி நீளமான கேட்போர் கூடத்துடன் கூடிய இரு மாடிக் கட்டடத்தை அமைத்துத்தருவதென பழைய மாணவர் சங்கத்திடம் உறுதி அளித்துள்ளமைக்கு நன்றி தெரிவிப்பதுடன் அவரது சேவை மேன்மேலும் தொடர பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 10
பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் வாணி விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை மதியம் 12.30 மணிக்கு பாடசாலை முதன்மை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் வீ.இந்திரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குத் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பொன். சுகந்தன் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

கணக்குப் பகுதி உத்தியோகத்தர்கள் தேவை.

கொழும்பில் இயங்கும் ஒரு பத்திரிகை நிறுவனத்துக்கு கணக்குப் பதியுனர் ஒருவரும், பயிற்சி உதவிக் கணக்காளர் ஒருவரும் ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர். உயர்தரத்தில் வர்த்தகப் பாடத்தில் 3 பாடம் சித்தியடைந்தவர்கள் கணக்குப் பதியுனருக்கும், பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் பயிற்சி உதவிக்கணக்காளர் பதவிக்கும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதி வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். உங்கள் விண்ணப்பப்படிவங்களை
*Jobrequirementsо@gmail.com*
என்ற முகவரிக்கு உடன் அனுப்பவும்.

மேலதிக தொடர்புகளுக்கு 0714273035

## ஆசிரியர்களின் பணப் பைகளில் கைவரிசை காட்டியவர்கள் யார்?

கொழும்பு, ஒக்.10
சர்வதேச ஆசிரியர்கள் தினத்தன்று கருத் தரங்கொன்றுக்கு தெல்தெனிய தேசியப் பாடசாலைக்கு வந்திருந்த சமயம், அவர்களின் பயணப்பைகளில் இருந்த பணத்தைத் திருடிய மாணவர்கள் பற்றிய தகவலொன்று வெளியாகியுள்ளது.

கருத்தரங்கின் இடைவேளையில் இந்த ஆசிரியர்கள் தேநீர் அருந்தச் சென்றிருந்தபோது அவர்களது பயணப் பைகள் திறக்கப்பட்டுப் பணம் களவாடப்பட்டிருக்கிறது.

மாத்தளையைச் சேர்ந்த இரு ஆசிரியர்களின் 9 ஆயிரம் ரூபாவும், ஏனையவர்களின் 100, 150 ரூபா தொகைகளும் திருடப்பட்டுள்ளன. மொத்தமாக 12 ஆயிரம் ரூபா களவு போயுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் தெல்தெனிய, ஹசலக, மடவளை மதீனா, வலல மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலிருந்து வந்திருந்த சுமார் நூறு மாணவ, மாணவிகளும் பத்து ஆசிரியர்களும் கலந்துகொண்டதாகத் தெரியவருகின்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓமான்...

இளம் பெண்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்று ஓமான் ரைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. இலங்கையைச் சேர்ந்த இரண்டு குடும்பங்கள் சுற் றுலா சென்ற வேளை, குறித்த பெண்கள் இருவரும் சிறிய நீரோடை போன்ற பகுதியொன்றில் செல்பி எடுக்க முயன்றனர். அப்போது ஒரு பெண்கள் தவறி விழப்போயுள்ளார்.
அவரைக் காப்பாற்றுவதற்கு மற்றைய பெண்கள் முயன்றுள்ளார். இதையடுத்து இருவரும் ஆழமான நீர்ப்பகுதியில் வீழ்ந்தனர். நீரில் அடித்துச் செல்லப்பட்டவர்களின் உடல்கள் பல மணிநேரத்துக்குப் பின்னர் மீட்கப்பட்டன என்றும் ஓமான் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.
இவ்வாறு உயிரிழந்தவர்களில் ஒருவர் அங்குள்ள இந்தியப் பாடசாலையொன்றில் கல்விகற்று வந்த ருவானே டெல்சரா ஹேரத் சமரவீர மற்றும் தனியார் பாடசாலையொன்றில் கல்வி கற்று வந்த ஜைனாப் என இனங்காணப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(து)

மரண அறிவித்தல்

திருமதி மகேஸ்வரி கந்தையா



நாவலடிக்கேணி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், இல.192/10 கூமாங்குளம், பாண்டியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கந்தையா நேற்று (09.10.2016) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சிவலிங்கம், விவேகானந்தன் (நீர்ப்பாசனத் திணைக்களம்), மனோன்மணி, சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், புஸ்பராணி, பாவனி, அருள்ஞானம் ஆகியோரின் அன்பு மாமியும், கணேசலிங்கம், புவனேஸ்வரி, மீனாட்சி, லோகநாதன், சுப்பிரமணியம், லோகேஸ்வரி, அம்பலவாணர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெடுக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

192/10, கூமாங்குளம்,
பாண்டியன் வீதி, வவுனியா. (J/5033) (11,18)

தகவல்:
குடும்பத்தினர்.

## சமஷ்டிக் கதவு...

அமைச்சர் மங்கள சமரவீர சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தக் கலந் துரையாடலின்போது, இலங்கை அரசு மக்கள் கேட்கும் எந்த வகையான தீர்வையும் வழங்குமா என்று அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.
இதற்குப் பதிலளித்த அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, "பிரி வினைவாதத்துக்கு நாட்டில் மீண்டும் இடமில்லை. அதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்கப் போவதுமில்லை. கேட்கும் எல்லாவற்றையும் வழங்க மாட்டோம். ஆனால் கூட்டாட்சிக்கான கதவு இப்போது திறக்கப்பட்டிருக்கின்றது" என்று குறிப்பிட்டார்.
இதேவேளை, தற்போதைய நல்லாட்சி அரசின் அமைச்சர்களான லக்ஸ்மன் கிரியெல்ல, எஸ்.பி.திசாநாயக்கா ஆகியோர் புதிய அரசமைப்பில் கூட்டாட்சிக்கு ஒருபோதும் இடமில்லை என்று தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## வடக்கில்...

டங்கள் நாளையும், நாளைமறுதினமும் யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இடம்பெறவுள்ளன.
யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நாளை செவ்வாய்க்கிழமைமுற்பகல் 10 மணிக்கு யாழ். பிரதான பேருந்து நிலையத்துக்கு முன்பாக நடத்தவுள்ளதாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அறிவித்துள்ளது.
இதேவேளை, இந்த ஆதரவுப்போராட்டம் வவுனியாவிலும் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது. இந்தப் போராட்டத்தில் வவுனியா வாழ் மக்கள் அனைவரையும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தில் நடக்கவுள்ள கவனவீர்ப்புப் போராட்டம் குறித்து சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் இணைச் செயலாளர் ச.தனுஜன் தெரிவிக்கையில்,
எமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் காணியோ, சொந்த வீடோ இன்றிப் பல்வேறு உரிமை மறுப்புக்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு மேலும் மேலும் துன்பத்தை ஏற்படுத் துகின்ற வகையில், அவர்களுடைய உழைப்புக்கேற்ப ஊதியத்தை வழங்காது தோட்ட நிர்வாகங்களும், முதலாளிமாரும் உழைப்பைச் சுரண்டி வருகின்றனர். எனவே, பாதிக்கப்படுகின்ற அப்பாவித் தொழிலாளர்களுக்கு ஆதரவாக நாளை செவ்வாய்க்கிழமை அனைவரும் அணிதிரண்டு குரல் கொடுக்க வேண்டியது காலத்தின் அவசியத் தேவையாகும்-என்றார்.
வவுனியாவில் நடக்கும் போராட்டம் நாளைமறுதினம் முற்பகல் 9 மணிக்கு வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் கோயில் முன்பாக ஆரம்பமாகவுள்ளது. அங்கிருந்து மக்கள், பேரணியாக வவுனியா மாவட்ட செயலகம் வரை செல்வர். அங்கு மாவட்டச் செயலரிடம் மனு கையளிக்கப்படவுள்ளது.
பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வவுனியாவில் செயற்படும் அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்ட கலந்துரையாடல் ஒன்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே ஆதரவுப் பேரணியை நடத்துவதற்கு முடிவு எட்டப்பட்டுள்ளதாகப் பொது அமைப்புக்கள் தெரிவித்தன.
இதேவேளை, தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி நாளை மறுதினம் புதன் கிழமையும் யாழ்ப்பாணத் தில் போராட்டம் இடம்பெற வுள்ளமை குறிப்பிடத்தக் கது. (த-4-ரி)

மரண அறிவித்தல்

திருமதி சின்னத்தங்கம் கந்தையா

தோற்றம்
05 . 08 . 1919



மறைவு
09 . 10 . 2016

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் 8ஆம் கட்டை, துர்க்காபுரம், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கம் கந்தையா நேற்று (09.10.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் இராசரத்தினம், கதிர்காமத்தம்பி,காலஞ்சென்ற ஆறுமுகசாமி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் அன்னரத்தினம், மல்லிகாதேவி ஆகியோரின் அன்பு மாமியும் நவநீதன்-விஸ்வரூபி, தர்சினி-சுதர்ஸ் (பிரான்ஸ்), சுபாங்கி-மதன், சுபாகரன், சிவாஜினி-சபேசன் (மலேசியா), நிசாந்தி -நவபாலன் (லண்டன்), துளசி, அஜித்தா, கிரிசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் வசீகரன், குருபரன், கஜனுஜா, நதுஜா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2016) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

8ஆம் கட்டை,
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்.

## பாதுகாப்புக்கே...

தகவல்கள் வெளியாகியுள்ளன.
2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செல வுத் திட்டம் அடுத்த மாதம் 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்டவரைவு அரச வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளது.
இதன்படி, 2017ஆம் ஆண்டில் 1,819 பில்லியன் ரூபா மொத்த செலவினம் ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டின் கடன் வரம்பு 1,489 பில்லியன் ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
அடுத்த ஆண்டு பாதுகாப்புச் செலவினங்களுக்கான ஒதுக்கீடு சுமார் 284 பில்லியன் ரூபாவாக இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதில் 251 பில்லியன் ரூபா மீண்டெழும் செலவினம் என்றும், 32.2 பில்லியன் ரூபா முதலீட்டுச் செலவினம் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.
2016ஆம் ஆண்டு பாதுகாப்புக்கான 306 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில், 257.6 பில்லியன் ரூபா மீண்டெழும் செலவினமாகவும், 48.9 பில்லியன் ரூபா மூலதனச் செலவினமாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.
பாதுகாப்பு அமைச்சுக்கு அடுத்த படியாக நிதியமைச்சுக்கு 242.8 பில்லியன் ரூபாவும், மாகாணசபைகள், உள்ளூராட்சிச் சபைகள் அமைச்சுக்கு 214.1 பில்லியன் ரூபாவும், பொதுநிர்வாக முகாமைத்துவ அமைச்சுக்கு 165.2 பில்லியன் ரூபாவும், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 163.4 பில்லியன் ரூபாவும், சுகாதார அமைச்சுக்கு 160.9 பில்லியன் ரூபாவும், கல்வி அமைச்சுக்கு 76.9 பில்லியன் ரூபாவும், ஒதுக்கீடு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
2016ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 185.9 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட கல்வி அமைச்சுக்கு அடுத்த ஆண்டில், 78.9 பில்லியன் ரூபாவே ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
அதேவேளை, ஜனாதிபதி செயலகத்துக்கான நிதி ஒதுக்கீடு, 2.3 பில்லியன் ரூபாவில் இருந்து 7.4 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.
இந்த நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிதியமைச்சரால் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (தி)

## உடமைகள்...

இதன்போது வடக்கு கல்வி அமைச்சர் தெரிவித்ததாவது:
பொயோகொட என்னும் அதிகாரி புலிகளிடம் அகப்பட்டு நீண்டகாலம் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வாழ்ந்தவர். அவர் அண்மையில் தனது அனுபவம் தொடர்பில் ஒரு புத்தகத்தை எழுதினார். அதாவது காரைநகர் கடற்படைத் தளம்மீது புலிகள் தாக்குதல் தொடுத்த சமயம் அதனைக் காக்கும் பொருட்டு திருமலையில் இருந்து பொயோகொட அழைக்கப்படுகின்றார். அவர் சென்று அந்த முகாமினையும் காரை நகர்ப் பிரதேசத்தினையும் முழுமையாகப் புலிகளிடம் இருந்து இராணுவ வசப்படுத்துகின்றார்.
இதன் காரணமாக காரைநகருக்குப் பொறுப்பாக இருந்த கடற்படைத் தளபதி பொயோகொடவையும் காரைநகருக்கே விடுவிப்புச் செய்து அங்கு பொயோகொட பணி புரிகின்றார். அங்கு பணிபுரியும் படையினர் தமிழ் மக்களின் வீடுகளைச் சல்லடை இட்டுத் தேடும்போது, பல பொருள்களையும் அபகரித்து வைத்து விடுமுறையில் வீடு செல்லும்போது எடுத்துச் சென்றனர்.
இதன் காரணத்தினால் அங்கு ஒரு சோதனை நிலையம் அமைக்கப்பட்டு அவ்வாறு விடுமுறையில் செல்லும் படையினர் சோதனையின் பின்பே அனுமதிக்கப்பட்டதாக அவர் எழுதியுள்ளார். அந்தச் சோதனைகளின்போது தமிழ்மக்களின் காசு பொருள் நகை மட்டும் செல்லவில்லை. அந்தப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்களின் குடும்பப் படங்களைக் கூட படையினர் களவாடிச் செல்ல முற்பட்டபோது சோதனை நிலையத்தில் அவை கைப்பற்றப் பட்டதாக பொயோகொட எழுதியுள்ளார். அவ்வாறானால் எமது இனத்தின் அடையாளங்களும் அழிக்கப்பட்டன என்பதற்கு இவைகளும் சான்று பகிர்கின்றன.
இவ்வாறே அதிகமான எமது கலை , கலாசாரம் மட்டுமன்றி எமது இனத்தின் அடையாளங்களும் அழிக்கப்பட்டன. அண்மையில் நான் அனலைதீவில் வீடொன்றுக்குச் சென்ற சமயம், அங்கு பெட்டகம் ஒன்று வீட்டின் முன்னால் போடப்பட்டுள்ளது. அவர்களைப் பொறுத்த வரையில் அது ஒரு பெட்டகம். ஆனால் அதில் செதுக்கப்பட்டுள்ள வடிவத்தில் எமது பண்பாடு உள்ளது. குறித்த பெட்டகத்தை வாங்கி பண்பாட்டுத் திணைக்களத்தில் பராமரிக்கலாமா என்று எண்ணினேன்.
மாகாண சபையில் நிகழ்வொன்றில் எமது பாரம்பரிய பறையை முழக்க எண்ணினோம். ஆனால் அது அமங்கலமாகிவிடும் எனவும் பின்னர் பிறிதொரு நிகழ்வுக்கு ஒத்தி வைத்தோம். ஆனால் தற்போது மங்கல இசை என்றால் சினிமா இசையே வருகின்றது. எமது பாரம்பரிய இசைகள் கலைகள் பண்பாடுகள் அனைத்தும் வளர்க்க அனைவரும் முன்வர வேண்டும் – என்றார். (வ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி விபத்து கவன ஈர்ப்பு வாரம்

- நிகழ்வு - "எழுந்து நிற்போம்"
- காலம் - 10 . 10. 2016 அன்று முற்பகல்10 மணி தொடக்கம் 11 மணி வரை
- இடம் - உங்களுங்கள் அலுவலக, வேலைத்தள வாசலில்

"மற்றைய வாகனத்துடன் போட்டி போட்டுக்கொண்டு ஓடுகின்றீர்களா? சில நூறு ரூபாய்களுக்காக ஆசைப்பட்டு விலைமதிக்க முடியாத பல உயிர்களின் இழப்பிற்குக் காரணமாகப் போகின்றீர்கள். கவனம்! நிரந்தரமாக சிறையில் இருக்கவும் நேரிடலாம்."

## அநீதி இழைத்துவிட்டது மு.கா நீதிமன்றில் நியாயம் கேளுங்கள்

### கிழக்கின் எழுச்சி அமைப்பு ஹஸனலிக்கு கடிதம்

அம்பாறை, ஒக் 10
முஸ்லிம் காங்கிரஸின் உருவாக்க காலத்திலிருந்து இன்றுவரை கட்சி விசுவாசத்துடனிருக்கும் நீங்கள், உங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதிமன்றம்சென்று நியாயம் கேளுங்கள். இவ்வாறு கோரி, கிழக்கில் புதிதாக உருவாகியுள்ள கிழக்கின் எழுச்சி அமைப்பின் செயலாளர், அஸ்ஸர் சேகு இஸ்ஸதீன், முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலிக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடித்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பல்வேறு காரணங்களால் கட்சியில் உங்களை நீண்டகாலமாக ஓரங்கட்டும் பணி முன்னெடுக்கப்பட்டபோதிலும் கட்சியின் மீது நீங்கள் வைத்திருந்த அபரிமிதமான விசுவாசம் உங்களைத் தடுத்து விட்டிருந்தது.

கிழக்கு மண்ணைச் சேர்ந்த உங்களை ஒதுக்க முற்படும் நயவஞ்சகத்திலிருந்து காப்பாற்றி அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்றே குரல் கொடுக்கப்பட்டது. அந்தப் பதவி கிழக்கில் உள்ள ஒருவரிடம் இருப்பது முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கத்துக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும்.

செயலாளர் பதவி ஹஸனலி என்னும் தனிநபருக்கு வழங்கப்படுவதிலோ அல்லது தலைவர் பதவி ஹக்கீம் எனும் தனி நபரிடமிருந்து பிடுங்கப்படுவதிலோ கிழக்கின் எழுச்சிக்கு எந்தவித தனிப்பட்ட இலாபங்களும் இருக்கவில்லை.

ஆனால், இந்த முயற்சிகள் கைகூடாமல் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டிருக்கும் காலத்தில் கிழக்கையும் வடக்கையும் இணைப்பது பற்றிய கதையாடல்கள் அதிகரிக்கலாயிற்று. முஸ்லிம் காங்கிரசின் மூலம் முஸ்லிம் சுயநிர்ணயத்தை அடையமுடியாது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-ரி-30)

# வீதி வலையமைப்பை வடக்கில் உருவாக்க இந்தியா உதவும்

## அந்த நாட்டு அமைச்சருடன் பிரதமர் ரணில் பேச்சு



கொழும்பு,ஒக். 10
வடக்கின் பிரதான வீதி வலையமைப்பை உருவாக்கும் சாத்தியப்பாடுகள் குறித்து, இந்தியாவின் நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சர் நிதின் கட்கரியுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்தினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லி சென்றிருந்தபோது, அவர் தங்கியிருந்த தாஜ் விடுதியில், இந்திய மத்திய அமைச்சர் நிதின் கட்கரி கடந்த 5ஆம் திகதி அவரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

பிரதமர் ரணிலுடன் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளும், இந்திய அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது, மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை ஆகியவற்றை இணைக்கும் முதன்மை வீதி வலையமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் வரையும், மன்னாரில் இருந்து குருநாகல் வழியாகக் கொழும்பு வரையும், மன்னாரில் இருந்து வவுனியா வழியாகத் திருகோணமலை வரையும் வீதி வலையமைப்பை உருவாக்குவது தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டது.

இந்த வீதி வலையமைப்பு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்த உதவும் என்று இந்திய அமைச்சர் நிதின் கட்கரியிடம், பிரதமர் ரணில் தெரிவித்தார்.

இதுபோன்ற வீதி வலையமைப்பை உருவாக்குவற்கு இந்தியா தேவையான நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டிருப்பதாகவும், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் வீதி அபிவிருத்தி தொழில்நுட்பம், மிகவும் பயனுள்ளது என்றும் இந்திய அமைச்சர் நிதின் கட்கரி குறிப்பிட்டார்.

வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியாவின் உதவிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக நிதின் கட்கரியுடனான இந்தச் சந்திப்பு பயனுள்ளதாக அமைந்தது என்று இலங்கை அதிகாரிகள் தகவல் வெளியிட்டனர். (த)

## விபத்தில் முதியவர் சாவு

மட்டக்களப்பு, ஒக். 10
மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருவில் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்ததுடன் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

எருவில் பழைய பொலிஸ் நிலைய வீதியில் சென்ற முதியவர்மீது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றதாகக் களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் கூறினர். (த)



இணுவில் திருப்பதி அருள்மிகு வேங்கடேஸ்வரர் ஆலயம் - மருதனார்மடம்

8 ஆம் நாள் பிரமோற்சவ தினம் (10.10.2016)

இரவு 7.00 மணிக்கு திருமகள், பூமகள் சகிதம் ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ரதோற்சவ தின வீதிவலம்.

இசைஆராதனை

பாட்டு - N.J.அனுஷா, T.கிருஷ்ணசுபாசினி, S.ஜெயநளினி
வயலின் - யோ.பிறிசில்லா
மிருதங்கம் - சண்முகப்பிரியன்

மதியம் அன்னதானம்.

(C 25486)
(14,17,18)

ஆலயதர்மகர்த்தா.

# தனியார் மயப்படுத்தின் போராட்டம் வெடிக்கும்

## இலங்கை ரயில்வே ஊழியர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 10
தற்போதைய அரசு, இலங்கை ரயில்வேயை தனியார்மயப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதற்குப் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்திருக்கும் ஐக்கிய இலங்கை ரயில்வே ஊழியர் சங்கம் அவ்வாறு தனியார்மயப்படுத்தினால் நாடு தழுவிய தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாக எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

> இலங்கை வரலாற்றில் முன்னெப் போதும் இல்லாத வகையில் ரயில் பெட்டிகளைத் திருத்தும் பணியை இப்போது தனியாரிடம் ஒப்படைக்க ரயில்வே நிர்வாகம் திட்டமிட்டு வருகின்றது.

முன்னைய அரசின் பலவீனமான நிர்வாகம், கண்மூடித்தனமான செலவுகள், அரசியல் ஊடுருவல்கள், பின்வாசல் வழியான நியமனங்கள் போன்றவற்றால் இலங்கை ரயில்வே சீர்குலைந்து போயிருப்பதாகவும் அதை மறுசீரமைப்பதற்காக அதனைத் தனியாரிடம் ஒப்படைக்கப்போவதாகவும் தற்போதைய அரசு தெரிவித்து வருகின்றது எனவும் அந்த முயற்சிக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்றும் அந்தச் சங்கம் சூளுரைத்துள்ளது.

இலங்கை வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் ரயில் பெட்டிகளைத் திருத்தும் பணியை இப்போது தனியாரிடம் ஒப்படைக்க ரயில்வே நிர்வாகம் திட்டமிட்டு வருகின்றது. அதனைத் தொடர்ந்து முழு ரயில்வேயின் நிர்வாகத்தையும் தனியாரிடம் ஒப்படைக்கும் திட்டமொன்றும் இருக்கிறது. அவ்வாறு நடக்கும் பட்சத்தில் தாங்கள் போராட்டத்தில் ஈடுபட வேண்டி வரும் என அச்சங்கத்தின் செயலாளர் எஸ்.பி.விதானகே தெரிவித்தார். (த)



வல்லிபுர ஆழ்வார் இன்று (10.10.2016) திங்கட்கிழமை பதினோராம் திருவிழா

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :

UV Water Solution

வீடுகள், அலுவலகங்கள், உணவகங்களுக்கான குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் தரமானதும் மலிவானதும் எம்மிடம் மட்டுமே

கழிவு நீர், குடிநீர் பரிகரிப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வு எம்மால் வழங்கப்படும்

தொடர்பு:277, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
077 509 2737

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தை கிழக்கில் மின் வசதியின்றி 651 குடும்பங்கள்

முல்லைத்தீவு, ஒக்.10
மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 651 குடும்பங்கள் இன்னமும் மின்சார வசதியின்றி உள்ளன.
மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 196 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 196 பேர் வசிக்கின்றனர். கடந்த ஆண்டுகளில் மின் இணைப்பு பெறுவதற்கு விண்ணப்பித்த ஆயிரத்து 749 குடும்பங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 651 குடும்பங்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டியுள்ளது.
944 குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டுத் திட்டங்களும், 63 குடும்பங்களுக்கு வீடு திருத்த வேலைகளும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.
இதுவரை 2 ஆயிரத்து 394 மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 50 மலசல கூடங்கள் இன்னமும் அமைக்க வேண்டிய தேவையுள்ளது.
ஆயிரத்து 548 குடும்பங்களுக்கு வாழ்வாதார வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. 954 குடும்பங்களுக்கு வாழ்வாதார வசதிகள் வழங்க வேண்டியுள்ளது.
இந்தத் தகவல் பிரதேச செயலகத்தால் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் அண்மையில் நடந்த பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்தப் புள்ளிவிவரங்கள் வெளியிடப்பட்டன. (ற-21,ரி7)



# அனுமதியின்றித் தறிக்கப்பட்ட முதிரை மரக் குற்றிகள் சிக்கின

முல்லைத்தீவு, ஒக்.10
முல்லைத்தீவில் அனுமதியின்றித் தறிக்கப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரங்கள் முல்லைத்தீவு மாவட்டப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்று முல்லைத்தீவு மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் தெரிவித்தது.
முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல்களை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் வழிநாடத்தலின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப்பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரத்திணம் ஜெசிந்தன் தலைமையிலான அணி மரக் குற்றிகளைக் கைப்பற்றியது.
மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் பகுதியில் உள்ள விளாத்திக் குள வீதியில் காட்டுக்குள் சட்டவிரோதமான முறையில் முதிரை மரங்களை அறுத்து வாகனத்தில் ஏற்றிக்கொண்டிருந்த சமயம் பொலிஸார் அங்கு சென்றனர்.
"மரக்கடத்தலில் ஈடுபட்டவர்கள் அறுத்த முதிரைக் குற்றிகளை கைவிட்டு விட்டுவிட்டு வாகனத்துடன் தப்பிச் சென்றுள்ளனர். சந்தேகநபர்களும், அவர்கள் தப்பிச்சென்ற வாகனமும் இனங்காணப் பட்டுள்ளது. அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையில் முல்லைத்தீவு போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்" - என்றும் முல்லைத்தீவுமாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் தெரிவித்தது. (ற-ரி7)

## 3 ஆயிரம் குடும்பங்களுக்கு மானிய சிமெந்து

யாழ்ப்பாணம், ஒக்.10
மானிய அடிப் படையில் பூச்சு வேலைகளுக்கான சிமெந்து வழங்குவதற்கு யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டு 3 ஆயிரம் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முகாமையாளர் எம்.ரவீந்திரன் தெரிவித்தார்.
யாழ். மாவட்டத்தில் போருக்குப் பின்னர் பல்வேறு தரப்பினராலும் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டன. வீட்டுத் திட்ட வேலைகள் நிறைவு பெறாத குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் மானிய அடிப்படையில் குடும்பத்துக்கு 10 சிமேந்து பைக்கட்டுக்கள் வழங்கப்படுகின்றன. நடப்பாண்டில் 3 ஆயிரம் குடும்பங்களுக்கு சிமெந்து வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மூன்று கட்டங்களாக அவை வழங்கப்படும். முதல் கட்டத்தில் ஆயிரத்து 18 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏனையோருக்கு இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படும். கடந்த வருடம் மானிய அடிப் படையிலான சிமெந்து ஆயிரத்து 267 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.- என்று தெரிவிக்கப் பட்டது. (ற-ரி3)

# கிராம அலுவலர் மீது விவசாயி குற்றச்சாட்டு

பசுவை விற்கும் விவகாரத்தில்



வறட்சியால் நீர் வற்றிப் போயிருக்கும கிணறு

முல்லைத்தீவு, ஒக்.10
கறவைப் பசுவை விற்பதற்குரிய அனுமதி வழங்க வேண்டும் எனில், தான் கூறுவதைச் செய்ய வேண்டும் என்று தட்டயன்மலை கிராம அலுவர் நிர்ப்பந்திக் கின்றார்.
இவ்வாறு குற்றஞ்சாட்டினார் குறித்த பிரிவைச் சேர்ந்த விவசாயியான ஆசைப் பிள்ளை பூபாலசிங்கம்.
"ஒரு ஏக்கர் காணியில் விதைக்கப்பட்டுள்ள கச்சான் கருகும் நிலையில் உள்ளது. கடும் வறட்சியால் எனது காணியில் உள்ள கிணறு வற்றியுள்ளது. கடன்பட்டே விவசாயம் செய்கின்றேன். கிணற்றை ஆழப் படுத்துவதற்கு என்னிடம் பணம் இல்லை. என்னிடமுள்ள கறவைப் பசுவை விற்று அதனால் கிடைக்கும் பணத்தின் மூலம் கிணற்றை ஆழப்படுத்தத் திட்டமிட்டேன்.
கறவைப் பசுவை விற்பதற்குரிய அனுமதியை வழங்க கிராம அலுவலர் மறுத்துவிட்டார். வாய்க்காலுக்குக் குறுக்காக நான் வேலி அடைத்துள்ளேன் என்றும்- அதை அகற்றினால்தான் அனுமதி தருவேன் என்றும்- அவர் கூறினார். அந்த வாய்க்கால் ஊடாகவே என் காணிக்குப்பின் உள்ள காணிக்கு நீர் வழங்கப்படுகின்றது" என்றும்-அதை நான் தடுத்து வேலி அடைத்துள்ளேன் என்றும் அவர் கூறினார்.
எனது காணியான 101ஆம் இலக்கக் காணிக்கும், அடுத்த காணிக்கும் இடையில் நீர் வழங்கும் எந்த வாய்க்காலும் இல்லை. வரைபடங்களிலும் அவ்வாறு இல்லை. பின்புறம் உள்ள காணிக்கு வேறொரு தொட்டியில் இருந்தே நீர் வழங்கப்படுகின்றது. எனது காணியில் விதைக்கப்பட்டுள்ள பயிருக்கு கட்டாயம் நீர் தேவை. எனது கறவைப் பசுவை விற்பதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும். அல்லது அவர்களே எனது கிணற்றை ஆழப்படுத்தித் தர வேண்டும். இல்லையேல் நாம் தற்கொலை செய் வதைத் தவிர வேறு வழியில்லை - என்று பூபாலசிங்கம் கூறினார்.
"எமது பிரதேசத்தில் இருந்து கால்நடைகளை வெளி இடங்களுக்குக் கொண்டு செல்வதைத் தடுக்க, கடுமையான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த வாய்க்காலை விடுவிப்பது தொடர்பாக பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது" என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.
விவசாயின் பிரச்சினை தொடர்பாகக் கருத்துத் தெரிவிப்பதை அவர் தவிர்த்துக்கொண்டார். (ற-21,ரி7)

ACF
புறோமோல்ட்
அதி உன்னத
புரதப் பானம்
அருந்துங்கள்




ஆரோக்கியம், உற்சாக உயிர்ப்பு, பலம், உடல் வளர்ச்சி,
வளரும் பிள்ளைகள், நோயாளர்கள் ஊட்டம், நோய் எதிர்ப்பு,
நோய்க்குப்பின் துரித ஆரோக்கிய மீள்வு, மலச்சிக்கல் விடுதலை
அதியுயர் புரத கூட்டுக் கலவை. 14 வைட்டமின்கள். 11 கனியுப்புக்கள்.
அமினோ அமிலங்கள். ஒமேகா 3 & 6 கொழுப்பமிலங்கள்.
நார்ச்சத்து ( Dietary Fibre ) என்பன அடங்கியது.

உற்பத்தியாளர்கள் :
ASIAN CHEMICAL & FOODS (PVT) LTD
48/11A, Suvisutharama Road, Colombo-06,
Phone : 011 208 1273
Email : chemfood@sltnet.lk

விநியோகஸ்தர்கள் :
சிவன் மாளிகை லிமிடட்
166, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
Phone / Fax : 222 2996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்கள் போராட்டத்துக்கு வடக்கு ஆதரவளிப்பது மகிழ்ச்சி

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.10
மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் போராட்டத்துக்கு வடக்கு மக்கள் ஆதரவு தெரிவித்திருப்பதை வரவேற்கின்றேன்.
இவ்வாறு தெரிவித்தார் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன்.
கொக்குவில் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழா நேற்று நடந்தது.
விழாவில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் விழாவின் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.
மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரித் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். தற்போது அந்தப் போராட்டம் மத்திவரை விரிவடைந்துள்ளது. வடக்கு மக்களும் அந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என்று ஊடகங்கள் வாயிலான அறிந்தேன். மிக மகிழ்ச்சியாக இருக்கின்றது. நான் நல்லாட்சி அரசில் ஓர் அமைச்சராக இருக்கின்றேன். தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசுக்கு எடுத்துக் கூறி தொழிற்சாலை நிர்வாகிகளுக்கு அழுத்தம் கொடுக்கப்படும்.
வடக்கு மக்களும், மலையக மக்களும் ஒன்றுமையாக இருக்க வேண்டும் என்றும் விரும்புகின்றேன்.- என்று இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (ற-4,ரி1)

# யாழ். மாவட்டத்தில் 2,000 ஹெக்ரெயரில் வெங்காயச் செய்கை

யாழ்ப்பாணம், ஒக்.10
யாழ். மாவட்டத்தில் இந்தமுறை 2 ஆயிரத்து 100 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் காலபோக வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. எதிர்வரும் நவம் பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் இந்தச் செய்கை ஆரம்பிக்கப்படும்.
கடந்த சிறுபோகத்தில் இரண்டாயிரத்து 150 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டது என்று மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.
சிறுபோகத்தின்போது பயிரிட்ட வெங்காயச் செய்கை மூலம் விவசாயிகள் அதிக விளைச்சலைப் பெற்றனர். அறுவடை செய்யப்பட்ட வெங்காயம் கூடுதலாகச் சந்தைக்கு வந்து சேர்ந்ததால் அவற்றின் விலையும் குறைந்தே காணப்பட்டது. (ற-17)

# மானிய மின் கட்டண விவரம் அறிவிப்பு

அச்சுவேலி, ஒக்.10
விளை நிலங்களுக்கு மானியத் திட்டத்தின் கீழ் அறவிடப்படும் மின்சாரக் கட்டண விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மின்சாரம் பயன்படும் நேரத்துக்கு அமைய பாவனை மின் அலகுக் கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. மாதாந்த நிரந்தரக் கட்டணமும் 600 ரூபாவில் இருந்து 300 ரூபாவாகக் குறைக்கப் பட்டுள்ளது. புதிய கட்டண நடைமுறை ஒக்ரோபர் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.
விவசாயத்துக்கு மின்சார விநியோகம் மானியத்திட்டத்தின் கீழ் மின் அலகு ஒன்றுக் கான 10 ரூபா 80 சதம் இரவு 10 மணி தொடக்கம் காலை 6 மணிவரையான காலப் பகுதியில் பயன்படுத்தப் படும் மின் அலகு ஒன்றுக்கு 6 ரூபா 80 சதமாகக் குறைக்கப்பட் டுள்ளது.
மின்சாரம் பாவனை நேர அடிப்படையில் பயன்பாட்டு மின் அலகைக் கணிப்பதற்கு புதிய மின்மானிகள் இலங்கை மின்சார சபையால் இணைப்பு செய்யப்படும். இதற்கு விவசாயிகளிடம் இருந்து கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது. இலவசமாக இணைப்புச் செய்யப் படும். விவசாய நிலத்துக்கு மின்சார விநியோக மானிய மின் விநியோக திட்டத்தில் இணைந்து கொள்வ தற்கு விவசாயிகள் உரியபடிவத்தில் விண்ணப்பித்து மின்சார சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண் டும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (ற-11)

# அடிப்படை வசதி இன்றித் தவிக்கும் 300 குடும்பங்கள்

## வவுனியா மாவட்டத்தில் பரிதாபம்



வவுனியா, ஒக்.10
போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவத்தைக் கொண்டவர்கள், இந்தியாவில் இருந்து மீளத் திரும்பிக் குடியமர்ந்தவர்கள் என 300 குடும்பங்களைக் கொண்ட வவுனியா, கணேசபுரத்துக்குக் கடந்த 10 ஆண்டுகளாக நிரந்தர வீட்டுத் திட்டம் உட்பட எந்த அடிப்படை வசதிகளும் கிட்டவில்லை.
இவ்வாறு அங்கு வசிக்கும் மக்கள் ஆற்றாமையுடன் தெரிவித்தனர்.
வவுனியா, கணேசபுரத்தில் 40 வீட்டுத் திட்டப் பகுதி என அடையாளப்படுத்தப்பட்ட மக்கள் குடியிருப்பில் இதுவரை எந்த அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்படவில்லை. அங்குள்ள 300 குடும்பங்கள் எந்தவொரு வசதியும் இன்றி சொல்லொணா துயரத்தின் மத்தியில் தமது வாழ்க்கையைக் கொண்டு நகர்த்துகின்றனர்.
அங்குள்ள மக்கள் பாதுகாப்பற்ற தற்காலிக வீடுகளிலேயே வசிக்கின்றனர். பாதுகாப்பற்ற தற்காலிக வீட்டுக்குள் உறங்கிக் கொண்டிருந்த சிறுமி ஒருத்தி அதிகாலை வேளை பாம்பு தீண்டி உயிரிழந்த சம்பவமும் அண்மையில் அங்கு நடந்தது.
1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து திரும்பியவர்கள், வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என 300 குடும்பங்கள் கணேசபுரம் காட்டுப் பகுதியில் காடுகள் அழிக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டன.
“எமக்கு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட் டன. அதன் பின்னர் அரசு எந்த உதவிகளை யும் வழங்கவில்லை. இங்குள்ள 29 குடும்பங் களுக்கு தற்காலிக வீடுகள்கூட இல்லை.
இங்குள்ளவர்கள் கூலி வேலையையே பெரிதும் நம்பியிருக்கின்றனர். பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் [illegible] பொருளாதாரப் பிரச்சினைகளை [illegible]டுள்ளன. இங்குள்ள வீதிகள் சீரமைக்கப்பட்டுப் பல ஆண்டுகளாகின்றன. பொதுக்கிணறுகளும் சீரமைக்கப்படவில்லை. மலசலகூட வசதிகள் இன்றி மூன்று குடும்பங்கள் வாழ்கின்றன.
இயற்கையும் எம்மை வஞ்சிக்கின்றது. மழை காலம் என்றாலும், வறட்சி என்றாலும் பெரும் பாதிப்புகளை நாம் எதிர்கொள்கின்றோம்". எமக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளையும், வீட்டுத் திட்டங்களையும் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.- என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
ஐந்து கிராமங்களை நிர்வகித்து வருகின்றேன். மணிப்புரம், சமயபுரம், கணேசபுரம், புதிய கணேசபுரம், மரக்காம்பளை போன்ற கிராமங்கள் எனது பிரிவுக்குள் அடங்குகின்றன. அனைத்துக் கிராமங்களிலும் வீட்டுத் தேவை உள்ளது. இந்தப் பிரச்சினைகளை ஒரே நாளில் தீர்க்க முடியாது. மேலதிகாரிகளே இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்”- என்று குறித்த கிராமத்துக்குப் பொறுப்பான கிராம அலுவலர் தெரிவித்தார்.
“இந்த ஆண்டு இறுதிக்குள் அந்தப் பகுதி மக்களின் காணி உறுதிப் பத்திரங்களைக் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. வீட்டுத் திட்டப் பிரச்சினையைத் தீர்ப்பது உடனடியாகச் சாத்தியமில்லை. அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றேன். வவுனியா மாவட்ட நிரந்தர வீட்டுத் திட்டம் குறித்து மாவட்ட செயலாளரிடம் நீண்ட பட்டியல் கையளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வீட்டுத் திட்டங்கள் ஒதுக்கப்படும் போது வழங்கப்படும். தற்காலிக வீடுகளில் வசிப்பவர்களில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இடர் முகாமைத்துப் பிரிவால் வழங்கப்படும் நிதியில் இருந்து தற்காலிக திருத்த வேலைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்”- என்று வவுனியா பிரதேச செயலாளர் [illegible] தெரிவித்தார். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயுற்ற மாட்டை இறைச்சியாக்கிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

தென்மராட்சி, ஒக்.10
நோயுள்ள மாட்டை இறைச்சியாக்கி அதனைக் கடையில் விற்க முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் வரணியில் கைது செய்யப்பட்டார்.
கொடிகாமம் பொலிஸார் வீதி ரோந்தில் ஈடுபட்டபோது சந்தேகத்துக்கிடமாக மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை மறித்துச் சோதனையிட்டனர். அவர் அனுமதிப் பத்திரமின்றி மாட்டு இறைச்சி கொண்டு சென்றமை கண்டு பிடிக்கப்பட்டது.
குறித்த நபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் மந்துவிலில் நோயுற்ற நிலையில் காணப்பட்ட மாட்டை இறைச்சியாக்கி அதனைக் கடைக்கு வழங்கக் கொண்டு சென்றார் என்று தெரியவந்தது எனப் பொலிஸார் கூறினர். அவரிடம் இருந்த 30 கிலோ இறைச்சி கைப்பற்றப்பட்டது. (ற-9)

# மாணவர்களை பாடசாலைகளில் மீளிணைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 10
கிளிநொச்சி அக்கராயன் கிராம சேவகர் பிரிவில் பாடசாலை செல்லாத மாணவர்களை மீளவும் பாடசாலையில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி கிராம அலுவலர் தெரிவித்தார்.
கிளிநொச்சி நீதிமன்றத்தின் அறிவுறுத்தலை பாடசாலை செல்லாத மாணவர்களை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் மாணவர்கள் பிடிக்கப்பட்டு சிறுவர் இல்லங்களிலும் பெற்றோரிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.
இதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு மாலைநேர வகுப்புக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மற்றும் மாண வர்களை மகிழ்ச்சிப்படுத்த சிறுவர் கழகத்தை உருவாக்கி உதவிகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.
நேற்று முன்தினம் கிளி நொச்சி லீட்ஸ் நிறுவனத்தின் ஏற் பாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் சிறுவர் விழாவை நடத்துவது தொடர்பாகவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் கரைச்சி பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் எஸ்.றெஜி னோல்ட்டுடன், லீட்ஸ் நிறுவன அதிகாரியும் கலந்துகொண்டனர். (ற-ரி3)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தொழிலாளர் போராட்டம்; அரசின் அவசரத் தலை அவசியம்

**தே**நீர்க் கோப்பையை வாயில் வைத்து தேநீரை உறிஞ்சிச் சுவைக்கும் எவரும், அது தோட்டத் தொழிலாளரின் உழைப்பின் வாயிலாக வரப் பெற்றது என்பதை எண்ணுவதுமில்லை உணருவது மில்லை.

கார் ரயர்கள் முதற் கொண்டு றப்பரால் உருவாக்கப்பட்ட பொருள்களைப் பாவித்து மகிழும் எந்த ஒரு நபரும் அது றப்பர் தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பின் வாயிலாகக் கிடைத்தது என்பதை நினைத்தும் பார்ப்பதில்லை.

இவ்வித பொருள்களை உற்பத்தி செய்து வழங்கி இலங்கை மக்களின் நுகர்வுக்கு உதவுவதுடன் இவைகளின் ஏற்றுமதி மூலம் வெளிநாட்டுச் செலாவணியை அபரிமிதமாகச் சம்பாதித்துத் தருபவர்களும் இந்த மக்களே.

நாட்டின் செழிப்புக்கு பெரும் பங்கு பணியாற்றுகின்ற இவர்களின் வாழ்க்கைத் தரமானது வேறு எந்த சமூகத்தினரையும்விட நீண்ட காலமாக அடித்தளத்திலேயே இருப்பது கவலைக்குரியது. வறுமைக் கோட்டுக்கும் மிகமிக கீழ் நிலையில் வாழும் இந்த மக்கள், தங்கள் நிலையை இந்த நாட்டு மக்களுக்கும் தலைவர்களுக்கும் மட்டுமல்ல உலக நாடுகளுக்கும் இடித்துரைக்கும் வகையில் கடந்த இரண்டு வாரங் களுக்கு மேலாக வேலை நிறுத்தங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் இறங்கியுள்ளார்கள்.

பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் இந்த மக்களின் போராட்டம் அனைத்துமக்களினதும் மனச்சாட்சியைத் தட்டி யெழுப்புகிறது. தோட்டப்பகுதிகளுக்கு அப்பாலும் இவர்களுக்காகச் சமூக அமைப்புக்கள் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளன. இரு தினங்களுக்கு முன் கொழும்பு மாநகரில் சிவில் நிறுவனங்கள் பல ஒன்று கூடி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தின. வரும் புதன்கிழமை யன்று யாழ்ப்பாணத்திலும் அவர்களுக்கு ஆதரவாகப் பேரணியொன்று நடத்தப்படவிருக்கிறது. இவை வரவேற்கப்பட வேண்டியவை.

புசல்லாவ பகுதியில் தொழிலாளர் போராட்டத்தைத் தடுக்கப் பொலிஸார் நீதிமன்ற ஆணையைக் கேட்டபோது தோட்டத்தொழிலாளர்கள் தம் போராட்டத்தைக் காட்டுப்பகுதியிலா நடத்த முடியும் என்று கூறி நீதிமன்றம் அனுமதி மறுத்த தகவல் ஒன்றும் வந்துள்ளது. பொதுவில் தோட்டத்தொழிலாளருக்கு கணிசமான சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என் பதை நாட்டிலுள்ள சகல தரப்பினரும் ஏற்றுக்கொள் கிறார்கள். நீண்ட இழுத்தடிப்புகளுக்குப் பின்னர் தொழிற்சங்க பிரதி நிதிகளுக்கும் முதலாளிமார் சம்மேளனத்துக்குமிடையில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகவும் நாளுக்கு ரூ 730 நாள் சம்பளம்வழங்குவதை இருதரப்பும் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் செய்தி வந்தது. இதுபற்றி தொழில் உறவுகள் அமைச்சர் ஜோன் செனவிரட்ண நாடாளுமன்றத்தில் அறி வித்திருந்தார். ஆனால் இந்த முடிவை ஏற்க மறுத்து பல தொழிற்சங்கங்கள் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

இன்றைய வாழ்க்கைச் செலவினங்களைப் பார்க்கையில் தனிப்பட்ட ஒருவருக்கே இந்தத் தொகை போதுமானதாக இல்லை. நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவும் கிழமைக்கு 6 நாள்களுக்குக் குறையாமல் வேலையும் வழங்கவேண்டும் என்பது மனிதாபிமானமிக்க நியாயமான கோரிக்கை. தொழிலாளர்கள் இதில் பெருமளவு விட்டுக் கொடுக்கிறார்கள் என்பதைக் காணமுடிகின்றது.

ஏற்றுமதி குறைந்து விட்டது, விலைகள் இறங்கி விட்டன என்றெல்லாம் முதலாளிகள் ஜால் ஜாப்புக்கள் கூறுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

பொருள்களின் தரத்தை அதிகரித்து விலைகள் இறங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது முதலாளிமாரின் பொறுப்பு.

அன்றாடம் உழைத்துத்தான் ஒருகோப்பை தேநீரைக் கூடப் பருகும் நிலையில் இருக்கும் இந்த மக்கள், இரண்டுவாரங்களுக்கு மேல் வரிந்து கட்டிக்கொண்டு பட்டினியோடு போராடுகிறார்கள் என்றால் அந்த அளவுக்கு அவர்கள் துணிந்து விட்டார்கள் என்பதே பொருள். இனிமேலும் தாமதம் இன்றி இந்த மக்களின் கோரிக்கையை நியாயமாகத் அரசுத் தலைவர்கள் தீர்த்து வைக்கவேண்டும்.

# ஈழத் தமிழர் வரலாற்றில் நினைவழியா நாள்கள்



மு.ஈழத்தமிழ்மணி

**போர் முடிவடைந்த ஏழு ஆண்டுகளில்பலநினைவு நாள்களை நினைவு கூருவதற்கு தமிழர்கள் பின்நின்ற காலகட்டங்களுமுண்டு. அரசின் அனுமதி மறுப்பு, படையினரின் தடை, அச்சுறுத்தல்கள், புலனாய்வுகள், எனப்பல பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொண்டிருந்தனர்.**

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் தமிழினத்துக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரமான இனக்கலவரம் தமிழ் இளைஞர்களது ஆயுதப் போராட்டத்துக்கு வழிவகுத்தது. பெரும்படையாக உருவெடுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நான்கு கட்ட ஈழப் போரை 30 ஆண்டுகளில் சந்தித்திருந்தது. தமிழினத்தின் விடுதலைக்கு ஆயுதப் போராட்டமே இறுதி வழி என நம்பி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தலைமையில் சிங்கள இராணுவத்துடன் மோதினர். புலிகளின் வளர்ச்சியும், போரியல் திறமைகளும் போரியல் வல்லுநர்களால் வியந்து பாராட்டப் பட்டிருந்தன.

### பன்னாட்டு உதவிகளுடன் விடுதலைப்புலிகள் இலங்கை அரச படைகளால் அழிப்பு

2009ஆம் ஆண்டு மே 19இல் விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்தது. போரின் போது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள், சேதங்கள், பொருளாதார இழப்புகள் என்பவை வார்த்தைகளால் சொல்ல முடியாதவை. தமிழர்களின் இதயங்களில் என்றும் வலியாயிருப்பவை.

தமிழினத்துக்கு எதிரான போர் பன்னாட்டு உதவிகளோடும், அனுசரணைகளோடும் நடந்[illegible] [illegible] நாடுகள் விடுதலைப் புலிகள் என்ற அமைப்பை முற்றாக அழித் தொழிப்பதற்கு இலங்கை அரசுக்கு அப்போதைய காலகட்டத்தில் அத்தனை உதவிகளையும் வழங்கின.

விடுதலைப் புலிகளும் அழிக்கப்பட்டனர். தலைவரான வே.பிரபாகரனும் அகற்றப்பட்டார். பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை மீட்டெடுத்துவிட்டோம், நாட்டு மக்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்து விட்டோம் என மகிந்த அரசு கொக்கரித்தது. அத்தோடு போராடிய, போரின் இறந்த ஆத்மாக்களை நினைவு கூருவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டின் ஆட்சி மாற்றத்தின் பின்னர், முள்ளிவாய்க்கால் நினைவுநாள், மாவீரர் தின நிகழ்வு என்பவற்றை கடைப்பிடிப்பதற்கு புதிய ஆட்சியாளர்களால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. தமிழர் தாயகமெங்கும் இந்த இரண்டு நிகழ்வுகளும் கடந்த வருடமும் இந்த வருடமும் தமிழ் மக்களால் நினைவு கூரப்பட்டிருந்தன.

### ஈழத் தமிழர்களது நினைவுகளில் இருந்த அழிக்க முடியாத நாள்கள்

ஒரு வருடத்தில் தமிழ் மக்களால் நினைவு கூருவதற்கு மிக முக்கிய தினங்களாகவும், வரலாற்று நிகழ்வுகளாகவும் முள்ளி வாய்க்கால் நினைவு நாளும், மாவீரர் நாளும் மட்டுமன்றி இன்றைய காலகட்டத்தில் தியாகச்சுடர் திலீபனது உயிர்க் கொடை நாளும் சேர்ந்துள்ளது. இவை தமிழர்களை விட்டு எந்தக் காலத்திலும் விலகாத, மாறாத சரித்திரக் குறியீடுக் குரிய நாள்களாகும். ஓர் இனத்தின் மொழிக்காகத் தமிழறிஞர்களால் நடத்தப்பட்ட 1974ஆம் ஆண்டின் நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின்போது, ஒன்பது தமிழுணர்வாளர்கள் உயிர்க் கொடை கொடுத்திருந்தனர்.

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அரசினது திட்டமிட்ட சதிச்செயலாகும். அத்தினமும் தமிழர்களுக்குரிய ஒன்றேயாகும்.

போர் முடிவடைந்த ஏழு ஆண்டுகளில் பல நினைவு நாள்களை நினைவு கூருவதற்கு தமிழர்கள் பின் நின்ற காலகட்டங்களு முண்டு. அரசின் அனுமதி மறுப்பு, படை யினரின் தடை, அச்சுறுத்தல்கள், புலனாய்வுகள், எனப் பல பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொண்டிருந்தனர்.

இந்த ஆண்டில், குறிப்பிடப்பட்ட மூன்று முக்கிய தினங்களும் தமிழ் மக்களால் பேரெழுச்சியுடன் நினைவு கூரப்பட வேண்டியவைகளாக அமைந்து விட் டன. மே 18ஆம் நினைவுநாள் இந்த ஆண்டு தமிழ் மக்களால் உணர்வுபூர்வமாக தமிழர் தாயகமெங்கும் அனுஷ்டிக்கப் பட்டது. நல்லாட்சி அரசினதும், படைகளினதும் இடை யூறுகள் பெரிய அளவில் இடம்பெறவில்லை.

போருக்குப் பின்னர் ‘தியாகி திலீபனின் நினைவு’ நாள் தமிழ் மக்களால் நினைவு கூரப்பட முடியாதவாறு தடைகள் ஏற்படுத்தப் பட்டிருந்தன. 10ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த ஆண்டு திலீபனது 29ஆவது நினைவு நாள் தமிழர் தாயகமெங்கும் தமிழ் மக்களால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.

**இந்திய அரசைச் சங்கடத்துக்கு உள்ளாக்கிய திலீபனது போராட்டம்**

தமிழீழ விடுதலைப் போராட்டத் தியாகி திலீபனது விடுதலைப் போராட்டம் இந்திய அரசுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தது. இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, உணவு ஒறுப்புப் போராட்டத்தை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் திலீபன் முன்னெடுத்தார்.

செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பித்த உணவு ஒறுப்புப் போராட்டம் உயிர்த் தியாகத்துடன் முடிவுக்கு வந்திருந்தது. 29ஆவது ஆண்டு நினைவு நாளில் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி நல்லூரில் முதன் முதலில் நினைவு தினம் பகிரங்கமாக அனுஷ்டிக்கப்பட்டது.

பின்னர் கிளிநொச்சியிலும் தியாகி திலீபனது நினைவு நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டன.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூரில் உள்ள திலீபனது நினைவுத்தூபி 12நாள்களும் தியாகி திலீ பனது உயிர்த் தியாகத்தை தமிழ் மக்களுக்கு எடுத்துச் சொல்வதுபோல் அமைந்திருந்தது. நல்லூரில் இடம்பெற்ற ஆரம்பநாள் நிகழ்வே, தமிழர் தாயகத்தில் திலீபனது 29ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் பகிரங்கமாக இடம் பெறுவதற்கு வழிகோலியது.



> இந்த ஆண்டில், குறிப்பிடப் பட்ட மூன்று முக்கிய தினங்களும் தமிழ் மக்களால் பேரெழுச்சியுடன் நினைவு கூரப்படவேண்டியதொன்றாக அமைந்து விட்டன. மே18ஆம் நினைவுநாள் இவ்வாண்டு தமிழ் மக்களால் உணர்வு பூர்வமாக தமிழர் தாயகமெங்கும் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது. நல்லாட்சி அரசினதும், படைகளினதும் இடையூறுகள் பெரிய அளவில் இடம்பெறவில்லை.

29ஆம் ஆண்டு நினைவுநிகழ்வானது தமிழ் மக்களா லும், தமிழ்த்தலைவர்களாலும், வடக்கு மாகாண சபையினராலும் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளமையானது தியாகி திலீபனது ஈகம், அர்ப்பணிப்பு தமிழ் மக்கள் மத்தியில் எந்தளவுக்குப் போற்றப்படுகிறது என்பதை உணர்த்துகிறது.

**திலீபனது நினைவுத் தூபியைச் சிதைத்த போதிலும் நினைவை அழிக்க முடியவில்லை**

மகிந்த அரசின் காலத்தில் தியாக திலீபனது நினைவுத் தூபி படையினரால் சிதைக்கப்பட்டது. திலீபன் உணவு ஒறுப் புப் போராட்டம் நடத் திய இடத்தில் அமைக் கப்பட்ட நினைவு நடுகல் அகற்றப்பட்டிருந்தது.

இன்று தியாகி திலீபனது 29ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு பத்தாண்டுகளுக்குப் பின்னர், வடக்கு-கிழக்கு மாகா ணங்களில் பகிரங்கமாக தமிழ் மக்களால் நினைவு கூர்ந்து பேரெழுச்சியாக நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன.

தியாகி திலீபனது நினைவு நிகழ்வு என்பது ஈழப் போராட்டத்துக்கு வலுச்சேர்த்திருந்தது. தமிழினப்போராட்டங்கள் முள்ளிவாய்க்கலோடு முற்றுப்பெறவுமில்லை-பற்றறுந்து போகவுமில்லை.

இந்தமுறை நவம்பர் 27ஆம் நாள் இடம்பெறவுள்ள மாவீரர் நாள் நிகழ்வும் தமிழர்களுக்கு வரலாற்றுக்குரிய நிகழ்வாகும். தமிழர்களோடு ஒன்றுபட்ட, பிரிக்கமுடியாத உயிர்க்கொடையை தமிழ் மண்ணுக்கு வழங்கிய தியாகத் திருநாளாகும்.

தமிழர் தாயகமெங்கும் வேறுபாடில்லாது அனைத்துத் தமிழர் தரப்பினாலும் ஒன்றுபட்டு முன்னெடுக்கப்பட வேண்டிய மாவீரர் நிகழ்வும் இந்த ஆண்டு பேரெழுச்சியாக அமைய வேண்டும்.

அடுத்து வருகின்ற ஆண்டுகளில் தியாகி திலீபனது நினைவு நாள் நிகழ்வுகள் கிராம மட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்படல்வேண்டும். ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு கலந்து கொள்ளக்கூடியவாறு அது அமைய வேண்டும். திலீபன் தமிழ் மக்களின் பிள்ளை. திலீபனது வாழ்வும், வரலாறும் ஒருபோதும் அழிந்து போகாது அழிக்கவும் முடியாது.

## ஆபாசமான பாடல்களை ஒலிபரப்புவது ஒருபோதும் வேண்டவே வேண்டாம்

நான் கடந்த ஐந்தாம் திகதி புதன் கிழமை மாலை 5.20 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து குப்பிளான் செல்லும் மினிபஸ்ஸில் பயணம் செய்தேன். பஸ்ஸினுள் சனக்கூட்டம் அதிகமாகக் காணப்பட்டது. பெரும்பாலும் இளம்பெண்கள் அதிகமாகக் காணப்பட்டனர். வழக்கம் போல சினிமாப் பாடல்கள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன. அப்போது அடுத்தடுத்து ஆபாசத்தை வெளிப்படுத்தும் இரண்டு பாடல்கள் ஒலிபரப்பாகின. இவற்றுள் ஒன்றைக் காதுகொடுத்துக் கேட்க முடியாத அளவுக்கு அதில் ஆபாசமான முக்கல்களும், முனங்கல்களும் நிறைந்து காணப்பட்டன. எப்போதோ வெளிவந்த இந்தப் பாடலை இப்போது ஒலிபரப்பவேண்டிய அவசியத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

பெண்கள் உட்படப் பலர் பயணத்தை மேற்கொள்கின்ற மினி பஸ்களில் வக்கிரமான எண்ணங்களைத் தோற்றுவிக்கக்கூடிய ஆபாசமான சினிமாப் பாடல்களை ஒலிபரப்புவதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இத்தகைய செயல் சமூக விரோதிகளைப் பெண்களிடம் தவறாகப் பழகுவதற்குத் தூண்டிவிடும் என்பதையும் மறுக்க முடியாது.

பொதுவாகவே மினிபஸ்களில் பாடல்களை அதிக சத்தமாக ஒலிபரப்புவது தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால் அநேக மினிபஸ்களில் இது கடைப்பிடிக்கப்படுவதில்லை. இதனால் பயணிகள் கூறுவதை நடத்துநர் புரிந்த கொள்ளாத நிலைகூட ஏற்பட்டு விடுகின்றது.

இதன் காரணமாகப் பயணிகள் தாம் இறங்க வேண்டிய இடத்தைத் தவறவிடுவதும் உண்டு. நெரிசல் மற்றும் வசதியீனங்கள் காணப்பட்டாலும், தற்போதைய நிலையில் மினி பஸ்களையே மக்கள் நம்பியிருக்க வேண்டியுள்ளது. இதனால் மினி பஸ்காரர்களும் சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும்.

சில வேளைகளில் பஸ்நிறைந்திருக்கும்போதும், வழியில் காத்திருக்கின்ற பயணிகளை ஏற்றுகின்றனர். இதனால் அதிக அவஸ்தையை எதிர்கொள்பவர்கள் பெண்கள்தான். தமது பயணத்தைத் தொடரவேண்டும்மென்ற ஒரே காரணத்துக்காக அவர்கள் இன்னல்களை எதிர்கொள்கின்றனர். இவர்கள் மீது இரக்கம் காட்டுவது மனிதத் தன்மையல்லவா?

மிருகங்களை அவஸ்தையின்றி ஏற்றிச் செல்வதற்கு விதிமுறைகள் உள்ளன. இவை மனிதர்களுக்கு இல்லையா? வெ[illegible] இது உங்களுக்குச் சமர்ப்பணம்.

மா.சாந்தகுமார்

## இந்தக் குரூரச் செயற்பாடு தடுக்கப்பட வேண்டும்

யாழ்.மாவட்டத்தை மையமாகக் கொண்டு இயங்கி வரும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் சமூகம் சார் செய்திகளை மிகவும் பொறுப்புடன் வெளியிட்டு வரும் நிலையில், யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் இரட்டை ஆங்கில எழுத்தைக் கொண்ட தொலைக்காட்சி அலைவரிசையொன்று, மக்கள் முகம் என்ற போர்வையில் எமது மக்களுக்குத் தெரியாமலேயே அவர்கள் மேற்கொள்ளும் உரையாடல்களைப் பதிவு செய்து வெளியிட்டு வருகின்றது. பிரச்சினைகள் ஏற்படும் இடங்களுக்கு ஒலிவாங்கியுடன் செல்லும் அந்தத் தொலைக்காட்சி அலைவரிசையைச் சேர்ந்த ஒருவர், பொதுமக்களுக்குத் தெரியாமலேயே அவர்களின் உரையாடலை பதிவு செய்து ஒளிபரப்புகின்றார். இத்தகைய செயற்பாடு தனிப்பட்ட ரீதியில் பல குடும்பங்களை,நபர்களைப் பாதிப்பதாக சமூகத்தில் பேசப்படுகிறது. இந்த அலைவரிசை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவரினால் இயக்கப்படுவதாக நம்பப்படுகின்றது. பாவம், மக்களால் புறக்கணிக்கப்பட்டு, நொந்து நூலாகிப் போய் இருக்கின்ற அவரை, அவருடைய சகாக்களே மேன்மேலும் மக்களிடம் இருந்து ஓரங்கட்டப்பட வைக்கும் விதத்திலான செயற்பாடுகளில் ஈடுபடுவது வேடிக்கையானது. எது எப்படியோ ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் அமைப்புக்கள், இது தொடர்பாக கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். மக்களே! மிக அவதானமாக, விழிப்பாக இருங்கள். உங்களுக்குத் தெரியாமலேயே உங்களின் கருத்தைப் பதிவு செய்ய ஒலிவாங்கியுடன் ஒருவர் அலைகின்றார்.

நாவற்குழி மனோ.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏமனில் கூட்டுப்படைத் தாக்குதல் 155 பேர் சாவு; பலருக்குக் காயம்

சனா, ஒக். 10
ஏமனில் சவூதி அரேபிய கூட்டுப்படை நடத்திய தாக்குதலில் 155 பேர் உயிரிழந்தனர்.
ஏமனின் தலைநகர் சனாவில் அந்த நாட்டின் உள்துறை அமைச்சரின் தந்தையின் சாவு வீடு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஏராளமானவர்கள் திரண்டிருந்தனர். குறித்த மண்டபத்தைக் குறிவைத்து சவூதி கூட்டுப்படை நடத்திய தாக்குதலில் 155 பேர் சாவடைந்தனர். குறைந்தது 20 பேர் கால்களை இழந்ததாகவும், சாவடைந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் சனா நகர மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.
இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்கா தனது கண்டனத்தைத் தெரிவித்தது. ஏமனில் உள்ள ஹொதி கிளர்ச்சியாளர்களைக் காரணம் காட்டி, கண் மூடித்தனமான தாக்குதல்களை நடத்த முடியாது. சவூதியின் தலைமையிலான கூட்டுப் படைகளின் இந்தத் தாக்குதலை ஏற்கமுடியாது. இனியும் அனுமதிக்க முடியாது. அமெரிக்காவுடனான சவூதி அரேபிய பாதுகாப்பு ஒப்பந்தங்களை மீறும் செயல் இது. ஏமனில் இடம்பெறும் தாக்குதல் தொடர்பாக நாம் அதிக அக்கறையுடன் உள்ளோம். இவ்வாறான தாக்குதல்கள் அரங்கேற்றப்பட்டால் சவூதியூடனான ஒப்பந்தங்களைத் தொடர்வது குறித்து பரிசீலனை செய்யவேண்டிவரும்எனஅமெரிக்கா தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டது. (ம-ரி4)

# மௌனம் கலைத்தது அஸோ

ஜப்பானில் உள்ள மிகப் பெரும் எரிமலைகளில் ஒன்றான அஸோ, கடந்த 36 வருடங்களின் பின்னர் தற்போது மீண்டும் மௌனம் கலைத்துள்ளது.
புவியியல் அமைப்பில் 'நெருப்பு வளையம்' பகுதியில் அமைந்துள்ள ஜப்பானில் நூற்றுக்கும் அதிகமான எரிமலைகள் உயிர்ப்புடன் இருந்து வருகின்றன. 2014ஆம் ஆண்டு மத்திய ஜப்பானில் உள்ள ஓன்டேக் எரிமலை வெடித்துச் சிதறியதில் 63 பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில் ஜப்பானின் குமாமோட்டோ பகுதியில் உள்ள 5 ஆயிரத்து 222 அடி உயரமுள்ள



அஸோ எரிமலை தற்போது மௌனம் கலைத்துள்ளது. கடந்த 36 வருடங்களாக அமைதியாக இருந்த குறித்த எரிமலை தற்போது ஆபத்தான சமிக்ஞைகளை வெளிப்படுத்தியுள்ளது.
நேற்றுமுன்தினம் அதிகாலை 1.46 மணியளவில் (ஜப்பான் நேரப்படி) இந்த எரிமலை திடீரென வெடித்துச் சிதறியது. பயங்கரமான தீப்பிழம்புகள் மலையின் அடிவாரத்தை நோக்கி உருண்டுவருகின்றன. எரிமலையால் கக்கப்படும் சாம்பல் 11 ஆயிரம் மீற்றர் உயரத்தை நோக்கி பாய்ந்து செல்வதாக உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. குறித்த எரிமலை தொடர்பாக ஜப்பான் அரசு உயர் எச்சரிக்கை விடுத்துள்ளது. பாறைகளும் திடீரென வெடித்துச் சிதற வாய்ப்புள்ளதால் எவரும் மலையை நெருங்கிச் சென்று பார்க்க வேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளனர். (ம-ரி4)

## ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் 80 சதவீதம் படித்தவர்கள்

*உலக வங்கி தெரிவித்தது*

வொஷிங்டன், ஒக். 10
உலகத்திலுள்ள ஆயுதக் குழுக்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடமே அதிகம் படித்தவர்கள் இருக்கின்றனர் என்று உலக வங்கி தெரிவித்தது.
நடப்பு வருடத்தின் ஆரம்பத்தில், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் 4 ஆயிரம் உறுப்பினர்களின் பெயர் விவரங்களை அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்தார். இந்த விவரங்கள் உலக வங்கியிடம் கொடுக்கப்பட்டு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரின் பொருளாதாரம், கல்வி அறிவு என்பன ஆராயப்பட்டன. இதன் அடிப்படையிலேயே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் உள்ளவர்களில் 80 சதவீத மானவர்கள் சிறந்த கல்வி அறிவுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புடன் இணைந்தவர்களில் 25 சதவீதமானவர்கள் பட்டப்படிப்பை முடித்தவர்களாவர். 2 வீதமானவர்கள் மட்டுமே கல்வியறிவற்றவர்களாக உள்ளனர்.
இதைவிட, தனியாக இருப்பவர்கள், வேலையற்ற பட்டதாரிகள், போதிய வருமானமற்றவர்கள், மிக இளையவர்கள் ஆகியோரே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்துள்ளனர். இவர்களில் அநேகருக்கு இஸ்லாம் பற்றிய அறிவு இல்லை எனவும், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்தவர்களின் சராசரி வயதெல்லை 27 எனவும் உலக வங்கியின் குறித்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. (ம-ரி4)

## மியன்மாரின் மீதான தடையை நீக்கியது அமெ. ஆங் சான் சூகியின் வெற்றியின் எதிரொலி



இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழான ஆட்சியை காரணம் காட்டி மியன்மார் நாட்டின் மீது விதிக்கப்பட்டிருந்த பல்வேறுபட்ட பொருளாதாரத் தடைகளை முழுமையாக நீக்கியது அமெரிக்கா.
தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான மியன்மாரில் (பர்மா) முன்னர் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழான ஆட்சிமுறை நடைமுறையில் இருந்தது. இதை காரணம்காட்டி அந்த நாட்டின் மீது அமெரிக்கா பல்வேறு வகையிலான பொருளாதார தடைகளை விதித்திருந்தது. அரசியல் கைதியாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஆங் சான் சூகி விடுதலையடைந்ததைத் தொடர்ந்து, அங்கு நடைபெற்ற தேர்தலில் ஆங் சான் சூகி தலைமையிலான கட்சி, பெரும்பான்மையான வெற்றியை பெற்று, ஆட்சியைக் கைப்பற்றியது.
மியன்மாரில் தற்போது ஜனநாயகம் எழுச்சி பெறுவதால் அந்த நாட்டின் மீதான தடைகளை நீக்குவதாக அமெரிக்கா அறிவித்தது. (ம-ரி4)

## காலினின்கிராட்டில் அணுவாயுத ஏவுகணைகளை குவித்தது ரஷ்யா

போலந்து மற்றும் லித்துவேனியா நாடுகளுக்கு இடையில் உள்ள தனக்குச் சொந்தமான காலினின் கிராட் பகுதிக்கு அணு ஆயுதங்களுடன் சுமார் 500 கிலோ மீற்றர் தூரம்வரை பாய்ந்து சென்று தாக்கக்கூடிய "இஸ்கான்டர்-எம்" ரக ஏவுகணைகளை ரஷ்யா அனுப்பி வைத்துள்ளதாக அமெரிக்க உளவுப்படை எச்சரித்தது.
சிரியாவின் அலெப்போ நகரில் குறிப்பாக கிழக்கு அலெப்போ நகரில் ரஷ்ய படைகள் மேற்கொண்டு வரும் கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு உலகெங்கிலும் இருந்து எதிர்ப்புக்கள் வந்து குவிந்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் சிரியாவுக்கான தூதுவர் கிழக்கு அலெப்போவில் ரஷ்ய கண்மூடித்தனமான தாக்குதல் நடத்துவது நியாயமற்றது என வெளிப்படை [illegible] இதற்கு [illegible] நாடுகள் பலவும் ஆதரவு தெரிவித்தன. ஆனால், இந்த எதிர்ப்புக்களைக் கண்டு கொள்ளாத ரஷ்யா, காலின் கிராட் பகுதிக்கு அணுவாயுத ஏவுகணைகளைக் கொண்டு சென்று நிறுத்தியுள்ளது.
தனக்கு எதிரான உலகின் போக்குக்கு அதிருப்தி தெரிவிக்கும் வகையிலும், தனது ஆயுதபலத்தை வெளிப்படுத்தும் முனைப்பிலும் ரஷ்யா இதைச் செய்திருக்கலாம் என அமெரிக்க உளவுத்துறைமேலும் எச்சரித்தது. (ம-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு, ஒக். 10

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள செங்கலடி எல்லை நகரில் நேற்று முன்தினம் பிற்பகல் கைக்குண்டொன்று மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

எல்லை நகரிலுள்ள வீட்டு உரிமையாளர் ஒருவர் தனது வளவை துப்புரவு செய்து கொண்டிருந்தபோதே குண்டை அவதானித்து, பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். அங்கு விரைந்த புலனாய்வாளர்களும் பொலிஸாரும் குண்டை மீட்டுச் செயலிழக்கச் செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த)

### தேவையின்றித் தலையிட்டால்

# அமைச்சுப் பதவியை துறப்பதற்கும் தயார்

### சந்திரிகாவுக்கு மனோ கணேசன் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 10

எனது அமைச்சின் செயற்பாடுகளில் தேவையில்லாது மூக்கை நுழைக்க தேசிய நல்லிணக்கச் செயலகம் முற்படுவார்களாயின் அமைச்சுப் பதவியைத் துறப்பேன்.

இவ்வாறு தேசிய நல்லிணக்க, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.



தேசிய நல்லிணக்க மேம்பாட்டு நடவடிக்கைகளின் போது தன்னை அறியாது, அமைச்சின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின் தன்னுடைய அமைச்சுப் பதவியைத் துறந்து, சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படத் தயார் எனவும் அவர் கூறினார்.

"முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வழிகாட்டலின்கீழ் செயற்படும் தேசிய நல்லிணக்கச் செயலகம் எனது அமைச்சின் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் தலையிட்டு வருகின்றது.

அதிகரித்து வரும் தலையீடுகள் அனைத்தையும் பொறுத்துக் கொள்ள நான் ஒன்றும் பொம்மையல்ல.

நல்லிணக்கத்துக்கு அமைச்சொன்று இருக்கும்போது தனியான ஒரு செயலகம் அவசியமற்றது.

இது தொடர்பில் தலையிட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன் –என்றார். (த)



## புதிய தேர்தல் முறையில் எமக்குப் பெரும் சந்தேகம்

### கூறுகிறார் அமைச்சர் ஹக்கீம்

கொழும்பு, ஒக். 10

உத்தேச புதிய தேர்தல் முறையில் சந்தேகங்கள் உள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்றுமுன்தினம் கொழும்பு, தபால் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடத்திய அரசமைப்பு மற்றும் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான மூன்றாவது கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தற்போது நாடாளுமன்றத்தில் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 21 உறுப்பினர்களும் வடக்கு–கிழக்கு தமிழ் மக்களையும் மலையகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 28 நாடாளுமன்ற உறுப்பினர்களுமாக மொத்தம் 50 பேர் சிறுபான்மையினத்தவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளனர்.

இதனால் தேர்தல் நடைமுறை என்பது, நாடாளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சிச் சபைகள் என்ற மூன்று தளங்களிலும் வெவ்வேறு முறைகளில் நடைபெறாமல், நாடாளுமன்றத் தேர்தலுக்கு அறிமுகப்படுத்துகின்ற அதே முறையை ஏனைய தேர்தல்களுக்கும் அறிமுகப்படுத்த வேண்டும்–என்றார். (த)

## இன முரண்பாடு மேலும் கூர்மையடையக்கூடாது

### தேசிய சமாதானப் பேரவையின் இணைப்பாளர் வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஒக் 10

இனிமேலும் இன முரண்பாடுகள் கூர்மையடைந்து செல்லாதவாறு இந்த நாட்டில் வாழும் அனைவரும் அடுத்தவரின் மனித உரிமைகளை உறுதிப்படுத்தவேண்டும் எனத் தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் ஆர். மனோகரன் தெரிவித்தார்.

மாவட்ட சர்வமதப் பேரவையின் மாதாந்த ஒன்றுகூடலும் செயலமர்வும் கல்லடி கிறீன் கார்டன் விடுதியில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதை நாட்டு மக்கள் கடமையாகக் கொள்ளவேண்டும். சமத்துவம் மற்றும் பாரபட்சமின்மைக்கான உரிமை, பேச்சு மற்றும் ஒன்றுகூடுவதற்கான உரிமை, சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் எல்லாமே அடுத்தவருக்கும் உண்டு.

அமைதிக்கான ஆத்ம ஈடேற்றமுள்ள வாழ்வுக்கு வழிகாட்டவே மதங்கள் உள்ளன. மதங்களின் அடிப்படை நம்பிக்கைகளிலும் சுதந்திரத்திலும் அடுத்தவர் அராஜகம் புரியக்கூடாது. மத சுதந்திரம் என்பது ஒரு உரிமை அதனை மதிக்கவேண்டும்–என்றார். (த)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஒக். 10

கொழும்பு, கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் குறித்த நபரைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாதம்பிட்டிய வீதி, கொழும்பு – 14இல் வசிக்கும் 24 வயது சந்தேகநபரே கைது செய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து 300 கிராம் 460 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. (த)

## வெடிமருந்துடன் மூவர் கைது

திருகோணமலை, ஒக். 10

திருகோணமலை–கிண்ணியாவில் வெடிமருந்து வைத்திருந்த மூவர் நேற்றுமுன்தினம் மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கிண்ணியா மற்றும் மூதூரைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து சுமார் ஆறு கிலோ 45 கிராம் வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

திருகோணமலை குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)

## மாகாணத்துக்கு உள்ளேயே கிழக்கு ஆசிரியர் நியமனம்

### முதல்வர்–பிரதமர் சந்திப்பில் இணக்கம்

கொழும்பு, ஒக். 10

கல்வியியற் கல்லூரியில் கற்கைநெறியை முடித்து வெளியேறிய கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 215 ஆசிரியர்கள் வெளி மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

இது குறித்து கிழக்கு முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் நேற்றுக் காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார் என முதலமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, மாகாணத்துக்கு வெளியே நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்குக் கிழக்கு மாகாணத்துக்குள் நியமனம் வழங்குவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சம்மதம் தெரிவித்துள்ளதாக முதலமைச்சரின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)


## மட்டக்களப்புக்கு மகிந்த

அம்பாறை, ஒக். 10

போரில் உயிர்நீத்த இராணுவத்தினருக்கான விசேட பூசை நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு விகாரையில் இடம்பெறவுள்ளது.

இந்த பூசை நிகழ்வில் பங்கேற்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மட்டக்களப்பு நகருக்குச் செல்லவுள்ளார் எனவும், அவரின் உரை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் எனவும், தெரிவித்து- சுவரொட்டிகள் மட்டக்களப்பு நகரெங்கும் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோமஸ் அல்வா எடிசனின் விடாமுயற்சி!

எடிசன் தான் உலகின் முதல் மின்குமிழைக் கண்டுபிடித்தார் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அவர் தன்னுடைய வெற்றிகரமான மின்குமிழைக் கண்டுபிடிப்பதற்கு முன்னர் பலமுறை தோல்வியைக் கண்டுள்ளார் என்பது பலரும் அறிந்ததே. இதில் முதல் முறை தோற்றதும், அந்த முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து முயற்சி செய்து, தோல்விகளில் இருந்து பாடம் கற்றுக்கொண்டார். தோல்வி அடைந்ததும், வருந்தாமல் தோல்விக்கான காரணத்தை ஆராய்ந்தார். அதனாலேதான் உலகின் முதல் மின் விளக்கு உருவானது.



# அப்துல்கலாமிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பணிவு

நாம் அனைவரும் அறிந்த, நம் காலத்து மாமனிதர் அப்துல் கலாம். இவர் வாழ்வில் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை பல. அதில் மிகவும் முக்கியமானது அவரிடம் இருந்த பணிவு.

சாதாரணமான சிறுவனாக இருந்து அவர், பாரத தேசத்தின் ஒரு சிறந்த விஞ்ஞானியாக உருவெடுத்த போதிலும், அவரிடம் இருந்த அந்தப் பணிவு மட்டும் மாறவே இல்லை.

மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்ற பலரின் எண்ணத்தை தகர்த்தார் கலாம். சிறுவனாகத் தன் வாழ்வைத் துவங்கி சிறந்த விஞ்ஞானியாக முன்னேறியவர் தன் பணிவை மட்டும் மாற்றிக் கொள்ளவில்லை. அதுவே அவரை உயர்ந்த சிகரத்துக்கு அழைத்துச் சென்றது என்றுகூடக் கூறலாம்.



# எங்கே சந்திக்கலாம்?

உலகம் தோன்றுவதற்கு முன்பு கல்வி, செல்வம், வீரம் மற்றும் கண்ணியம் நான்கும் சொர்க்கத்தில் இருந்தன. கடவுள் உலகைப் படைத்து, ஒவ்வோர் உயிரினமாக உருவாக்கினார். கடைசியில் மனிதர்களையும் உருவாக்கி விட்டு சொர்க்கத்துக்கு வந்தார்.

"நீங்கள் பூமிக்குச் செல்லும் நேரம் வந்துவிட்டது. நீங்கள் ஒவ்வொருவரும் பலராக மாறி, மனிதர்களிடம் இருக்க வேண்டும்" – என்றார். நண்பர்கள் பிரியும் நேரம் வந்தது.

அப்போது கல்வி, "நீங்கள் கல்விக் கூடங்கள் பக்கமாக வந்தால் என்னைச் சந்திக்கலாம்" என்றது. உடனே செல்வம் "சிறந்த அறிவும் கடுமையான உழைப்பும் உள்ளவர்கள் இல்லங்களில் நான் இருப்பேன்" என்றது. வீரமோ, "பரந்து விரிந்த விளையாட்டு இடங்களிலும் போர்க் களங்களிலும் என்னைப் பார்க்கலாம்" என்றது.

கண்ணியம் மட்டும் அமைதியாக இருந்தது. "சொல்லுங்கள். நீங்கள் எங்கே இருப்பீர்கள்?" என்று மற்ற மூன்றும் கேட்டன.

"நான் கல்விக்கூடம், வீடு, போர்க்களம் என எங்கும் இருப்பேன். ஆனால் ஒருவரை விட்டு ஒருமுறை பிரிந்துவிட்டால், மீண்டும் வரமாட்டேன்" எனக் கண்ணியம் சொன்னது.





# வர்ணம் தீட்டுவோம் வாங்க...





# வரலாற்றில் இன்றைய தினம்

*1942* - சோவியத் யூனியன் ஆஸ்திரேலியாவுடன் நாகரிக உறவை ஏற்படுத்தியது.

*1953* - பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் அமெரிக்கா மற்றும் கொரிய குடியரசினிடையே ஏற்படுத்தப்பட்டது.

*1970* - பிஜி தீவு சுதந்திரமடைந்தது.

*1975* - ஐக்கிய நாடுகள் சபையில் பபுவா நியூகினி இணைந்து கொண்டது.

*1986* - எல் சவடோர் சான் சல்வடோரில் 5.7 MW அளவிலான நில நடுக்கத்தில் 1500 பேர் வரை உயிரிழந்தனர்.

*1988* - ஹொங்கோ ஜனநாயகக் குடியரசின் கின்டு பகுதியில் லிங்னெஸ் ஏயரியன்ஸ் விமான சேவை. விமானம் போராளிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதில் 41 பேர் உயிரிழப்பு.

*1992* - பிரச்சினையைத் தீர்க்கப் பேச்சுவார்த்தையே வழியென்றார் பிரேமதாச.

*1992* - ஜனாதிபதி தீர்வு ஒன்றை நெருங்கிக் கொண்டிருக்கிறார் என வடமேல் மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு.

*2007* - விடுதலைப் புலிகளைச் சந்திக்க முடியவில்லையென லூயிஸ் ஹாபர் அம்மையார் பெரும் ஆதங்கம்.

*2007* - வெலிக்கடைச் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் இருப்போர் தாக்கப்பட்டனர். எனினும் போராட்டம் தொடரும் என அறிவிப்பு.

சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உலக உளநல தினம்

# உளநலம் காப்போம் மகிழ்வுடன் வாழ்வோம்

கலாநிதி க.கஜவிந்தன்

ஆரோக்கியமான வாழ்வுக்கு, உடல்நலத்தைப் போல, உளநலமும் முக்கியம். உலகில் 35 கோடி பேரின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. வயது வேறுபாடின்றி அனைத்து வயதினரையும் உளநோய் பாதிக்கிறது. நீண்ட காலக் கவலை, வேலை யின்மை, ஏமாற்றம், ஏக்கம், தொடர் தோல்வி, மதுப் பழக்கம், வாழ்க்கையில் பிடிப்பு இல்லாமை போன்ற சில உளநலம் பாதிக்கக் காரணங்கள் ஆகும். உளநலம் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர். ஆண்டு தோறும் உலகம் முழுவதும் 8 லட்சம் பேர் தற்கொலை செய்கின்றனர். இவர்களில் 15 தொடக்கம் 44வயதுக் குட்பட்டோரே அதிகம் எனப் புள்ளி விவரங்கள் குறிப்பிடு கின்றன.

**உளநலம் என்றால் என்ன?**

நாம் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளினால் ஏற்படும் மன அழுத்தங்களுக்கு மனநிறைவுடன் பொருத்தப்பாடு மேற்கொள்ளும் திறமையே உளநலம் என்று வரையறை செய்துள்ளனர்.

உளநலவியல் என்பது பொருத்தப்பாடு, நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக நாம் மேற்கொள்ளும் வழிமுறையாகும்.

தன் னுடன் ஒத்திசைவையும், சமூக நல்லிணக்கத் தையும் உரு வாக்கும் ஒருவரின் திறமை உளநலமாகும்.

உளநலம் பாதிக்கப்பட்டால் உடல் நலமும் பாதிக்கப்படும்.

உளநலம் குன்றி உடல்நலம் பாதிக்கப் பட்டோருடைய நோயைக் கண்டு பிடித்துச் சிகிச்சை அளிப்பது இன்றைய மருத்துவத்துக்கு ஒரு சவாலாகவே உள்ளது. ஓரளவுக்குத் தான் இதை தீர்க்க முடியும். இலங்கையில் மக்கள் தொகைக்கு ஏற்ப, உள ஆற்றுப்படுத் துனர் களின் எண்ணிக்கை இல்லை. சில ஆற்றுப் படுத்தல் வளவாளரிடம் ஆற்றுப் படுத் தலுக்குத் தேவையான அடிப்படைத் தகுதி இல்லாத காரணத்தால் உளநலம் பாதித்த வர்களைக் குணமாக் குவதற்குப் பதிலாக மனப் பாதிப்பை அதிகரித்து விடுகிறோம்.

**உள நலமுள்ளவரின் சில குணநலன்கள்**

01. உளநலமுள்ளவர்கள் வாழ்க்கையிலும் சாதகமான மனப் போக்கைக் கொண்டிருப்பர்.
02. அவர்கள் மிகுந்த நல்லிணக்கம் உடையவராக, பிறரைப் பற்றிக் குறைகூறாமல், மனநிறைவுடையவராக இருப்பர்.
03. தம்முடைய நிறைகளையும், குறைகளையும் அறிந்திருப்பர்.
04. நிலைத்திருக்கக்கூடிய மனவெழுச்சியும், மகிழ்ச்சியும் உடையவராக, நியாய உணர்வும் சகிப்புத்தன்மையும் பெற்றிருப்பர்.

ஆரோக்கியமான மனிதர் என்பவர், உடல் ஆரோக்கியம் மட்டுமன்றி உள நலமும் பெற்றிருத்தல் அவசியமாகும். ஆரோக்கியம் என்ற தற்கால விளக்கம் உடலில் சீரான இயக்கத்தை மட்டும் குறிக்கவில்லை. அது மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்த வல்ல வலிமையையும் உள்ளடக்கியதாகும். உடல் நலத்தைப் பாதுகாக்கவும், சமூகத்தில் திறமையுடன் செயற்படவும் இன்றியமையாத அடிப்படைக்கூறு உளநலமாகும். உளநலம் இரு முக்கியகூறுகளைக்கொண்டது.

01. உளநலமுள்ளவர்கள் தம்முடனேயே ஒத்திசைவும், நல்லிணக்கமும் உடையவராக இருப்பர்.
02. உளநலமுள்ளவர் தாம் வாழும் சமூக அமைப்பிலிருந்து தன்னம்பிக்கை பெறுவர்.

இத்தகைய சமூக அமைப்பு ஒத்திசைவையும், நல்லிணக்கத்தையும் வளர்க்கிறது. சமூக சக்திகள் மாறும் தன்மை கொண்டவை என்பதால் சகிப்புத்தன்மை, பொருத்தப்பாடு, வளர்ச்சி போன்ற வற்றை உள்ளடக்கிய நல்லிணக்கத்திலிருந்தே உளநலம் உருவாதல் வேண்டும்.

மனிதருடைய உளநலமும் காலத்துக்குக் காலம் மாறுபடுகிறது. பெரும்பான்மையானோருக்கு உளப்பாதிப்பு சிறிதுநேரம் வந்துபோகும். ஆனால், சிலருக்கோ இந்த அனுபவம் மிகவும் வித்தியாசமானதாய் அமைந்துவிடுகிறது. உளநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்தப் பாதிப்பின் தீவிரத் தன்மையைப் பொறுத்து, பலவிதமான அறிகுறிகள் ஏற்படும். உதாரணமாக, கவலை என்பது தற்காலிக மான சாதாரணமான ஒரு துன்ப உணர்வாகவும் வரலாம் அல்லது வாழ்க்கை முழுவதையுமே பாதிக்கின்ற பெருந்துயரமாகவும் வரலாம். உலகில் மன நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆனால், இவர்களுக்கு சிகிச்சை அளிக்கப் போதிய வசதிகள் இல்லை என்பது வேதனைக்குரியது. மக்கள் தொகைக்கு ஏற்ப தகுந்த உள மருத்துவர்கள் இல்லை. உளநலம் பாதிக்காமல் இருக்க, மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். இசை கேட்பது, விளையாடுவது, நண்பர்களுடன் கலந்துரையாடுவது, உடற் பயிற்சி, யோகா, தியானம், செய்வதுடன் மற்றவர்களுடன் பழகவேண்டும் தனிமையைத் தவிர்க்கவேண்டும்.

**யார் பாதிக்கப்படுகின்றனர்?**

சமூகத்தில் காதல் திருமணம் செய்பவர்களில் பலர் எதிர் காலத்தில் பிரச்சினைகளை எதிர்கொள்ளமுடியாமல் உள நலன் பாதிக்கப்படுகின்றனர். மேலும், போதை பழக்கத்துக்கு அடிமையானவர்களும் உள நலப் பாதிப்புக்கு ஆளாகின்றனர். உளநலன் பாதிப்பில் ஆண்களும், பெண்களும் சமமாகவே உள்ளனர். அதே நேரத்தில் மன அழுத்தத்தினால் ஆண் களை விடப் பெண்களே அதிகம் பாதிக்கப்படுவதாகப் புள்ளி விவரம் தெரிவிக் கின்றது. தற்கொலை எண்ணங்கள், நோய்கள் போன்றவற்றுக்கு மன அழுத்தம் காரணமாகிறது. மன அழுத்தத் தினால் ஆண்களைவிடப் பெண்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டாலும், நம் சமுதாயத்தில் பெண்களைவிட ஆண்களே அதிகமாகத் தற்கொலை செய்துள்ளனர் எனப் புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன. இதற்குக் காரணம் காதல் தோல்வி, கடன் சுமை, விரக்தி, ஏமாற்றம், குடும் பச்சண்டை, சந்தேகம் போன்ற சிலவாகும்.

பொதுவாக இதன் பாதிப்பு பெண்களிடம் 50 சதவீதம் அதிக தாக்கத்தை உண்டாக் குகின்றது. 20 சதவீத மனநோய்கள் வெளிப்படையாகத் தெரியலாம். மிகுதியுள்ள 80 சத வீதத்தையும் அவர்களது நடவடிக்கைகள் மூலமே அறிய முடிகின்றது. மன நலன் பாதிப்பால் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள்கூட அதிகளவில் தற்கொலைக்கு முயல்கின்றன. சுமார் 60 லட்சம் குழந்தைகள் மன நோயால் பாதிக்கப்பட்டு இருப்பதாக ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

**அதிகரிக்கும் பாதிப்பு**


தற்போது உலக மக்கள் தொகை யில் 35 கோடி பேர் மன அழுத்தத்துக்கு ஆளாகியுள்ளனர். மன அழுத் தப் பாதிப்பு அதிகரித்து வருவதன் காரணமாக எம்நாட்டில் தற்கொலை எண் ணிக்கை அதிகரிக்கக் கூடும். உலகளாவிய ரீதியில் ஆண்டு தோறும் மன அழுத்தத்தால் 10 லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்கின்றார்கள். சராசரியாகத் தினமும் மூன்று, ஆயிரம் பேர் தற்கொலை செய்து சாவைத் தழுவுகின்றனர். இந்த எண் ணிக்கைக்கு 20 மடங்கு அதிகமான தற்கொலை முயற்சிகளும் நடக்கின்றன. அவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். அல்லது அவர்களது முயற்சி தோல்வி அடைகிறது.

பொதுவாக 32 வய தைக் கடந்தவர்கள் மன அழுத்தத்துக்கு அதிகம் உள்ளாகின்றனர். நோய்களுக்கான பெரிய காரணமாக மனஅழுத்தம் ஆதிக்கம் செலுத்தக் கூடும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கை செய்கின்றனர்.

மன அழுத்தத்துக்கான சிறந்த சிகிச்சை முறைகள் இருந்தபோதிலும், பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற முன் வருவதில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். ஒருவருக்கு ஏற்பட்டுள்ள மனநோய் எந்த வகையானது என்று உறுதியாக மருத்துவ ரீதியில் தீர்மானிப்பதற்கு உளநல நிபுணர்களுக்கே சில காலம் எடுக்கும். மன நோய்கள் தொடர்பாகச் சமூகத்தில் இன்றளவும் நிலவும் தப்பெண் ணங்கள் மற்றும் அத னால் ஏற்படக்கூடிய மோசமான பின் விளை வுகள் ஆகியவற்றைக்கருத்தில் கொண்டு ஒருவருக்கு வந்துள்ள மனநோய் இன்னதென்று அவசரப் பட்டு முத்திரை குத்த உள வியல் நிபுணர்கள் தயங்குவார்கள். வந்திருப்பது எந்த வகையான மன நோய் என் பதைத் தீர்மானிப்பதை விட, பாதிக்கப்பட்டவருக்கு எந்தவிதமான தேவைகள் உள்ளன என்பதை அடையாளம் கண்டு பொருத்தமான மருந்துகள், உளவியல் சிகிச்சைகள், சமூகத்தின் ஆதரவு ஆகியவை பலமாக இருந்துவிட்டால் பிரச்சினைகளைத் தாமதமின்றி குணப்படுத்துவதற்கு முடியும்.

கட்டுரையாளர்:
முதுநிலை உளவியல் விரிவுரையாளர்
யாழ்.பல்கலைக்கழகம்.

"உளநலன் பாதிப்பில் ஆண்களும், பெண்களும் சமமாகவே உள்ளனர். அதே நேரத்தில் மன அழுத்தத்தில் ஆண்களைவிடப் பெண்களே அதிகம் பாதிக்கப்படுவதாக புள்ளி விவரம் தெரிவிக்கின்றது. தற்கொலை எண்ணங்கள், நோய்கள் போன்றவற்றுக்கு மன அழுத்தம் காரணமாகிறது. மன அழுத்தத்தால் ஆண்களைவிட பெண்கவே அதிகமாகப் பாதிக்கப்பட்டாலும் நம் சமுதாயத்தில் பெண்களைவிட ஆண்களே அதிகமாக தற்கொலை செய்துள்ளதாக புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன. இதற்குக் காரணம் காதல் தோல்வி, கடன் சுமை, விரக்தி, ஏமாற்றம், குடும்பச்சண்டை, சந்தேகம் போன்ற சிலவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் 1: அக்கா இன்றைக்கு என் புருஷன் ஊருக்குப் போறாரு... இன்றைக்கு இராத்திரி மட்டும் என் கூட துணைக்கு படுங்களேன்...?



பெண் 2: அடி போடி... உனக்கும் உன் புருஷனுக்கும் வேற வேலை இல்லை! யார் ஊருக்குப் போனாலும் என்னையே கூப்பிடுறீங்க!!

பூமியில் உள்ள மரத்தை வெட்டிவிட்டு...



செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் தேடுவது தான் இன்றைய அறிவியல்...!

அம்மா என்னை விடும்மா நான் ஆடு, மாடு மேய்க்கப் போறேன்.
அதெல்லாம் இன்ஜினியரிங் முடிச்சிட்டு பார்த்துக்கலாம் வாடா...



ஜோதிடர்: தம்பி உன் ஜாதகத்திலை தோஷம் இருக்கு. 36 வயசு பெண்ணைக் கட்டிக்கோ...
தம்பி: இரண்டு 18 கட்டிக்கலாமா..?



ஜோதிடர்: ஏன் நாலு ஒன்பதை கட்டிக்கோவன்

ரீச்சர்:
தண்ணீரோட மூலக்கூறு என்ன...?
மாணவன்:
H2MgCaNaclCa2Co3Na
ரீச்சர்:
என்ன இழவு டா இது?
மாணவன்: மாநகர சபை விடும் தண்ணீரின் மூலக் கூறு
ரீச்சர்:...

# ரெமோ முதல் நாள் வசூல் சாதனை



சிவகார்த்திகேயன் படங்கள் என்றாலே தற்போது 'ஹிட்' என்ற நிலை வந்துவிட்டது. கடந்த வெள்ளிக்கிழமை வெளியான 'ரெமோ' படத்துக்கு பிரமாண்ட வரவேற்புக் கிடைத்துள்ளது. சூர்யா, விக்ரம் படங்களைவிட அதிக வசூலை ரெமோ பெற்றுள்ளது. இந்தப் படம் உலகம் முழுவதும் ஆயிரம் திரையரங்குகளில் வெளிவந்துள்ளது. சென்னையில் ஏதோ ரஜினி, அஜித், விஜய் படம்போல் காலை 5 மணிக்கே காட்சி தொடங்கியது.
இந்தப் படம் தமிழகத்தில் முதல் நாள் ரூ 7–8 கோடி வரை வசூல் செய்துள்ளதாம். இதன் மூலம் இந்த வருடத்திலேயே கபாலி மற் றும் தெறிக்குப் பிறகு முதல் நாள் வசூலில் ரெமோதான் இடம்பிடித்துள்ளது என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 7 | | 8 | 9 | | | |
| | | 6 | | 3 | | | 9 | |
| | | | | 4 | | | | 7 |
| | 2 | | 4 | | | | | 1 |
| | 4 | | | 9 | | | 7 | |
| 3 | | | | | 8 | | 4 | |
| 2 | | | | 1 | | | | |
| | 6 | | | 7 | | 4 | | |
| | | | 6 | 2 | | 8 | | 3 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 5 | 4 | 7 | 9 | 3 | 6 | 8 |
| 4 | 3 | 6 | 2 | 8 | 1 | 7 | 5 | 9 |
| 9 | 7 | 8 | 6 | 3 | 5 | 2 | 4 | 1 |
| 6 | 8 | 4 | 9 | 5 | 7 | 1 | 3 | 2 |
| 3 | 5 | 9 | 8 | 1 | 2 | 4 | 7 | 6 |
| 7 | 2 | 1 | 3 | 6 | 4 | 9 | 8 | 5 |
| 1 | 6 | 7 | 5 | 2 | 3 | 8 | 9 | 4 |
| 5 | 4 | 3 | 1 | 9 | 8 | 6 | 2 | 7 |
| 8 | 9 | 2 | 7 | 4 | 6 | 5 | 1 | 3 |

சுடோக்கு
ஒரு எண் விளையாட்டு.
தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** செயலில் தேவையற்ற தாமதம் உண்டாகும். நண்பரின் ஆலோசனையும் உதவியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், இலாபம் மிதமான அளவில் கிடைக்கும். வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடலாம்.

**இடபம்:** நட்புக்கு முக்கியத்துவம் அளிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், கூடுதல் உழைப்பு தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும். போட்டிப்பந்தயத்தில் ஈடுபடுவதை தவிர்க்கவும். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நல்லது.

**மிதுனம்:** சுயநலத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், இலக்கு நிறைவேறக் கூடுதல் அவகாசம் தேவைப்படும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பிராணிகளிடம் விலகியிருப்பது நல்லது.

**கடகம்:** உறவினர்களின் உதவி கிடைக்கும். உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம், வியப்பூட்டும் அளவில் வளர்ச்சி பெறும். கடனில் பெரும்பகுதி அடைபடும். ஆரோக்கியம் பலம்பெறும்.

**சிங்கம்:** மறைமுக எதிரியை இனம்கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய உத்தி மூலம் இலாபத்தைப் பெருக்குவீர்கள். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாற்றம் உண்டாகும்.

**கன்னி:** உங்களின் வளர்ச்சி கண்டு பிறர் பொறாமைப் படுவர். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப்பெறுவர். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**துலாம்:** நீண்ட நாள் முயற்சி இனிதே நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால், பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். குடும்பத்தின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை அளிக்கும்.

**தனுசு:** பொதுநலத்தில் அக்கறை கொள்வீர்கள். தொழிலில், உற்பத்தி, விற்பனை செழிக்கும். ஆதாயம் பன்மடங்கு உயரும். பிள்ளைகள் விருப்பம் அறிந்து வாங்கிக் கொடுப்பீர்கள். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும்.

**மகரம்:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். நண்பரிடம் நிதானத்துடன் பேசுவது நல்லது. தொழிலில், இலாபம் ஓரளவே இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** நண்பரின் கருத்துக்கு மதிப்பளிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு எளிதாக நிறைவேறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர்.

**மீனம்:** மனதில் புத்துணர்வு நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், நல்ல வளர்ச்சி உருவாகும். வருமானம் உயரும். குடும்பத்தில் சுற்றுலா சென்று வரத் திட்டமிடுவீர்கள். பெண்களுக்கு, தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும்.


## யாழினி ஷோபனா

எங்களின் உழைப்பு இப்போது தெரியாது, ஒரு சில ஆண்டுகளில் தெரியவரும். அப்போது நாங்கள் இருக்கமாட்டோம். அடுத்த சில ஆண்டுகளில் நீங்களும் இருக்க மாட்டீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரியின் வெற்றித் திருநாளாகிய விஜயதசமி



மலர்விழி கனகசபை

அண்ட, புவன போகங்களை எல்லாம் காத்து உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல ஆதி பராசக்தியாகிய அம்பிகைக்குரிய நவராத்திரி முடிந்து பத்தாம் நாள் வருகின்ற விஜயதசமி இந்த முறை பதினொராம் நாள் வருகின்றது. இனிய மங்கலகரமான நாள்– விஜயதசமியின் வெற்றித்திருநாள்நாளையாகும். இந்தஆண்டு துர்முகி வருடத்துக்கான நவராத்திரி விரதாரம்பம் கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து முதல் மூன்று நாள்களும் துர்க்கா பூசையும், அடுத்த மூன்று நாள்களும் லக்சுமி பூசையும், இறுதி மூன்று நாள்களும் சரஸ்வதி பூசையும் இடம் பெற்றது. சக்தி விரதமாகிய நவராத்திரி விரதம் விரதங்களிலே மகிமையும், முக்கியத்துவமும் வாய்ந்தது. வருடா வருடம் பத்துநாள்கள் வருகின்ற நவராத்திரி விழா இந்தமுறை பதினொராம் நாளான விஜயதசமியுடன் நிறைவு பெறுகின்றது. எத்தகைய சமய விழாக்களானாலும் திகதி, நட்சத்திரம், திதி, மாதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அனுஷ்டிக்கப்படுகின்றன. அந்த வகையில் நோக்குகையில் துர்முகி வருட புரட்டாதி மாதத்து பூர்வ பட்ச பிரதமையானது கடந்த முதலாம் திகதி சனிக் கிழமை காலை 6மணிக்கு கூடியது. எனவே கும்பம் வைத்தல் நிகழ்வு சூரிய உதயத்தின் பின் காலை 6.05க்குப் பின்ஆரம்பிக்கப்பட்டது. திதியை அடிப்படையாகக் கொண்ட இந்த நவராத்திரி விரத்தின் 10ஆம் நாள் இன்றையதினம் 10ஆம் திகதியாகும். மாலை 6.30மணிவரை நவமி திதி உள்ளது. அதன் பின்னரே தசமி திதி கூடி நாளைய தினம் மாலை 6.11 மணிவரை உள்ளது. விஜயதசமி என்பது இரு பெரும் கைங்கரியங்களுடன் தொடர்புபட்டு உள்ளது. ஒன்று வித்தியாரம்பமும் விஜயதசமிப் பூசையும், இரண்டாவது மானம் பூதிருவிழா. வித்தியாரம்பம் ஏடுதொடக்குதல் மதியத்தின் முன் காலை வேளையில் சிறந்ததாகும். எனவே தசமி திதி முடியமுன் இந்த முறை மகிடா சூரசங்காரம் செய்யவேண்டும்.

அன்றாட வாழ்வில் சர்வமும், சக்தி மயம் என்பதற்கிணங்க எல்லாம் வல்ல ஆதிபராசக்தியை வேண்டிக்கலைமகள், அலைமகள், மலைமகளாக காட்சி தரும் மகாசக்தியிடம் முறையே வீரம், செல்வம், கல்வி ஆகிய முப்பெரும் பேற்றையும் பெற்று மனிதனாகப் பிறந்ததன் பயனைப் பெறுவதற்காக அனுஷ்டிக்கப்படும் விரதமே நவராத்திரி விரதமாகும்.

இந்த விரதம் அனுஷ்டிப்பதன் பயனாக சகலசௌபாக்கியங்களையும்பெற்றுக் கொள்ள முடியுமென்பது சான்றோர்களால் அருளப்பட்ட உண்மையான தொன்றாகும். தொழில்நிறுவனங்கள், பாடசாலைகள், வீடுகள், கல்விநிலையங்கள், ஆலயங்கள் என்பனவற்றில் ஆரம்ப நாளன்று சரஸ்வதி கொலு வைத்து, பூரணகும்பம் வைத்து விழாவை ஆரம்பிப்பார்கள். இந்தவிரதத்தின் போது கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றைப் பேணிப்பாதுகாத்துக் கலைகளை அரங்கேற்றுவது மிகவும் சிறப்பாகும்.

சிம்மவாகனத்தில் அமர்ந்து சக்கரம், சிங்கம், சூலம் முதலிய ஆயுதுங்கள் தரித்துத் துக்க நிவாரணியாகத் துர்க்கை காட்சி தருகின்றாள். நன்மைகளையும் நன்மை செய்யும் எல்லாப் பொருள்களையும் அள்ளி வழங்குபவள் லக்சுமி. ஆயிரம் இதழ்களையுடைய தாமரையை இருகைகளிலும் தாங்கி அபயம், வரதம் என்ற முத்திரைகளுடன் வீற்றிருந்து அருள், பொருள் பாலிப்பவள் லக்சுமி. ஒரு மனி தனின் வளர்ச்சிக்கு உடல்வலிமையும், வாழ்க்கைக்குத் தேவையான செல்வமும் அறிவும் மிக அவசியம். அதனை வெளிப்படுத்த உடல் வலிமையின் சக்தியாக ஸ்ரீதுர்க்கா தேவியையும், வாழ்க்கைக்குத் தேவையான செல்வத்தைநல்கவல்லசக்தியாகஸ்ரீமகாலக்சுமியையும், அறிவையும் ஆற்றலையும் தரவல்ல கல்வியின் அதிபதியாகிய ஸ்ரீ சரஸ்வதி தேவியையும் நாம் இந்த நவராத்திரி வாரத்திலே வழிபட்டு அந்தத் தேவியரின் கிடைத்தற்கரிய அருள் பேற்றைப்பெற்று முறையே வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றையும் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட பண்டிகையே இந்த நவராத்திரி விரதமாகும். ஆயகலைகள் அறுபத்துநான்கிற்கும் கலைத்தெய்வமாகிய சரஸ்வதிதலைமை தாங்குகின்றாள். கல்வி அழியாத செல்வமாகும். ஏனையசெல்வங்கள் பிறருக்குக் கொடுக்கும் தோறும் குறைந்து கொண்டே செல்லும். கல்வியானது பிறருக்குக் கொடுக்கும் தோறும் பெருகிக் கொண்டே செல்லும் இதனைத் தான் வள்ளுவர் தனது ஈரடிகள் மூலம் 'தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்குக் கற்றனைத்து ஊறும் அறிவு' – அதாவது படிக்கப்படிக்க அறிவு மேம்படும் என்று கூறியுள்ளார். எனவே மாணவச் செல்வங்கள் கல்விப்பயிரை கற்றுணர்ந்து படித்து எதிர்கால நாட் டின் தலைவர்கள், சிற்பிகள் பிறந்த பொன் நாட்டுக்கும், பெற்றோர்களுக்கும் சேவை செய்து, நல்லவர்களாக வாழ்ந்து இந்த மண்ணிலே மனிதப் பிறவி எடுத்ததன் பயனை அனுபவிப் போமாக!

கட்டுரையாளர், உதவிக்கல்விப் பணிப்பாளர் [அழகியல்] தீவகம் கல்வி வலயம், வேலணை.

---

# நவராத்திரி விரதத்தை முறைப்படி கடைப்பிடித்து சிறப்புற வாழ்வோம்

அரியாலையூர் மிஷாந்தி செல்வராஜா

புராணங்கள் போற்றும் புனிதமான விரதம் நவராத்திரி விரதம் ஆகும். இந்தப் புனிதமான நவராத்திரி விரதத்தை எப்படிக் கொண்டாடுகின்றார்கள்? இதன் விதி முறைகள் எத்தகையன? என்பதை ஆராய்வோம்.

விரதம் என்பது அகத் தூய்மையும், புறத் தூய்மையும் வாய்ந்ததாக இருக்க வேண்டும். இந்துக்களின் சிறப்பு வாய்ந்த விரதங்களினுள் நவராத்திரி விரதமும் மிகவும் சிறப்பு வாய்ந்த விரதமாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த நவராத்திரி விரதத்தின் மகிமையை நோக்கிப் பார்ப்போம்.

நவராத்திரிவிரதம் கும்பபூசையுடன் ஆரம்பமாகின்றது. இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்திகளை அருளும் பூமகள், மாமகள், நாமகள் மூவடிரையும் ஒரே அம்சமாக கலசம் ஒன்றில் எழுந்தருள வேண்டி நிற்பது தான் இந்தப் பூசையின் நோக்கமாகும். நவராத்திரி தொடங்கும் நாளன்று அதிகாலையில் எண்ணெய் தேய்த்துக்குளித்துவிட்டு கொலு வைக்கப் போகின்ற இடத்தில் கிழக்குத்திசை நோக்கி அமர்ந்து பூசையைத் தொடங்குவது பாரம்பரியமான வழக்கம். முதலில் மரப்பலகை ஒன்றை எடுத்து அதனை நன்றாகத் தூய்மை செய்து கோலம் போடுதல் வேண்டும். அதற்கு மேல் தலை வாழை இலையை வைத்து நெல் அல்லது அரிசியைப்பரப்பி தூய நீர் கலந்த செம் புக்கலசத்தை வைத்து கர்ப்பூரம், சந்தனம், பூவிதழ்களை நீரில் கலந்து புதிய சில்லறைக்காசுகளையும் அதில் கலந்து விட வேண்டும்.

கலசத்தின் (செம்பு) வாய்ப்பகுதியில் புதிய மாவிலைகளை ஒற்றை எண்பட வைத்து மஞ்சள் பூசப்பட்ட தேங்காயை கலசத்தின் மேல் வைக்க வேண்டும். கலசத்தின்கழுத்துப் பகுதியை சிவப்பு நிறப்பட்டுத் துணியால் கட்ட வேண்டும். சாமி அறையில் விளக்கேற்றிய பின்பு கலசத்தின் முன்பாக விளக்கேற்றி வைத்து விடலாம். கலசத்தில் முன்பாக ஒரு வெற்றிலையை வைத்து மஞ்சள் பொடியினால் பிள்ளையார் பிடித்து வைத்துச் சந்தனம், குங்குமப் பொட்டு, பூ ஆகியவற்றை வைத்துவிட வேண்டும். அதன் பின் சாம்பிராணித் தூபம் ஏற்ற வேண்டும். முதல் வணக்கத்துக்குரிய விநாயகப் பெருமானை வழிபட்டுவிட்டு துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி போன்ற தெய்வங்களை, கலசத்தில் எழுந்தருள வேண்டும் எனப்பிரர்த்தித்துத் தூபம், தீபம் காட்டி வழிபட வேண்டும். பால் பாயாசம், காய்ச்சிய இனிப்பான பசுப்பால் ஆகியவற்றை நைவேத்தியம் செய்யலாம்.

இந்தக் கலச அமைப்பை அப்படியே வைத்திருந்து நவராத்திரியின் ஒன்பது நாள்களும் விஜயதசமி நாளிலும் முதல் பூசையை இதற்கே செய்ய வேண்டும். கொலு வைக்கும் பொழுது கொலுவுக்குரிய நிவேதனமும் முதலில் இந்தக் கலச அமைப்புக்கே செய்ய வேண்டும். சக்தியைப்பற்றிய பாடல்களைப் படிக்கலாம். தினமும் இந்தப் பூசையை செய்து முடிக்கும் வரை உணவு உட்கொள்ளாமல் இருப்பது சிறப்பைத்தரும். இவ்வாறு அனுஷ்டிக்க முடியாதவர்கள் சிறிதளவு பால் பழம் எடுத்துக் கொள்ளலாம். முதல்மூன்று நாள் வைத்த கலசத்திற்கே அடுத்தடுத்த நாள்களில் புதிய மலர்கள் வைத்து நிவேதனமும் செய்ய வேண்டும். ஒன்பது நாள்களும் அம்பிகைப் பாடல்களைப் பாடுவதும், கேட்பதும் தொடர வேண்டும். முதல் மூன்று நாள்களில் துர்க்கையையும், அடுத்த மூன்று தினங்களில் இலட்சுமியையும், கடைசி மூன்று நாள்களில் சரஸ்வதியையும் வணங்குவது வழக்கம். நவராத்திரியின் கடைசி மூன்று நாள்கள் சரஸ்வதிக்குரியன. மூலநட்சத் திரம் உச்சமாக இருக்கும் நாளில் சரஸ்வதி தேவி தோன்றுகின்றாள் என்பது ஐதீகம். எதற்குமே ஒரு மூலம் உண்டு என்பதை உணர்த்தும் விதமாகவே கலை மகள் மூல நட்சத்திரத்தில் அவதரித்தாள் என்பர். ஞானம், கல்வி இவை மட்டுமன்றி, ஆயுள் ஆரோக் கியமும் அதிகரிக்க சரஸ்வதியின் கடாட்சத்தால் கிட்டும் என்கிறது பவிஷ்யேத்ர புராணம். நவராத்திரியின் ஒன்பது நாள்களிலும் பூசை, விரதம் இவற்றை ஒழுங்காக அனுஷ்டிக்க வேண்டும் என்றும், இயலாதவர்கள் அஷ்டமி திதி வரும் நாளில் மட்டுமாவது அவசியம் விரதம் இருக்க வேண்டும் எனவும் புராணங்கள் கூறுகின்றன. விஜயதசமி தினத்தன்று அம்பிகை வெற்றிவாகை சூடினாள். ஆணவம் சக்தியாலும் வறுமை செல்வத்தாலும், அறியாமை ஞானத்தினாலும் வெற்றி கொள்ளப்பட்ட தினம் ஆகும்.

எனவே விஜயதசமி தினமானது மிகவும் சிறப்பானது. அன்றைய தினம் புதிதாகத் தொடங்கும் எந்தக் கலையும் எளிதாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இந்துக்களிடையே இன்றும் நிலவுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலகில் எத்தனையோ மதங்கள் இருக்கின்றன. அவற்றில் இந்துமதம் ஒன்றே. தன்னுடைய மதத்துக்கு ஒருவனை வந்து சேர்ந்து கொள் என்று கூறுவதில்லை; ஏனெனில் அவன் இந்துவாகவே. அவனது கன்மானு பவங்களுக்கேற்பப் பிறக்கின்றான் என்ற உண்மையை உணர்ந்துள்ளது.**

சி.சக்திகிரீவன்



# நவராத்திரியின் மகோன்னதம்

இறைவன் ஒருவன் உளன் என்பதும் அவனே இவ்வுலகை இயக்குகின்றான் என்பதும் அனைத்து மதங்களும் ஏற்றுக் கொண்ட உண்மையாகும். சைவம் எம் முழு முதற் கடவுள் சிவன் என்றும் அவனது ஆற்றலை சக்தி என்றும் உணர்ந்து கொண்டாடுகிறது.

சிவபிரான் தனது திருவருட் சக்தியோடுகூடி அபின்னமாயிருக்கின்றார். அவர் உலகுயிர்கள் மல பந்தங்களில் இருந்து நீங்கித் தன்திருவடி, அடைய அருள் சுரந்த வண்ணமே உள்ளார்.

இதனைச் சிவஞான சித்தியார் அருளது சக்தியாகும். அரன் தனக்கு அருளையின்றி தெருள் சிவமில்லை. அந்தச் சிவமின்றிச் சக்தியில்லை என்கிறது.

உலகில் ஆண், பெண், அலி எனும் சேதனா சேதனப் பிரபஞ்சமாயிருத்தல், தோன்றுதலும் நிற்றலும், அழிதலும் ஆகிய முத்தொழிலை செய்யும் கருத்தாக்கங்களை உடையவனாய் இருத்தல் முதலியன இறைவன் சக்தி வடிவம் எய்தியதால் உண்டாயின என்பது தெளிவு. இதனை அவனால்வந்த ஆக்கம். இவ்வாழ்க்கை என்கிறது சைவ சித்தாந்தம்.

இதனை உணர்ந்த சைவத்தமிழ் ஞானிகள் மாசிமாத அபரபட்ச சதுர்த்தசியும் – திரயோதசியும் சந்திக்கும் இராப்பொழுதைச் சிவராத்திரி காலமாகச் சிவனை விசேடமாகப் பூசிக்கின்ற நாளாகவும், புரட்டாதி மாதபூர்வபட்ச பிரதமை முதல் நவமி ஈறாகவுள்ள ஒன்பது இரவுகளை அம்பிகையைப் பூசிக்கும் விசேட காலங்களாகவும் வகுத்துள்ளனர்.

### ஓர் இறைவனுக்கு ஏன் பல சக்திகள்?

இறைவன் ஒருவன் என்பது சைவ சித்தாந்தத் தெளிவு. அத்தகைய இறைவன் பல்வேறு திருவருட் செயல்களின்போது பல்வேறு வடிவங்களை எடுக்கின்றான்.

அந்த விதம் அவன் பெறும் வடிவங்களுக்கெல்லாம் சக்தியாகிய அம்பிகையும் அதற்கேற்ப வடிவங்களைத் தாங்கிக் கொள்கிறான்.

சத்தியாய் விஸ்வசத்தியாய் மனோன் மணி தர்னாகி ஒத்துறு மகேசையாகி யுமைதிரு வாணியாகி
பைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ் சத்தி யொருத்தியாகும்
எத்திறம் நின்றான் ஈசன் அத்திறமவளும் நிற்பாள்

என்கிற சித்தியார் பாடல் தெளிவாக் குகிறது. அம்பிகை மூவகை வடிவில் அனுக் கிரகம் செய்கிறாள்.

உலகத்தவருக்கு ஐஸ்வரியத்தைக் கொடுக்கும் காலத்தில், மின்னல் போன்ற பொன்னிறமுள்ள இலட்சுமியாகவும், கல்வியைத் தருகின்ற காலத்தில் சந்திரனைப் போன்று வெண்ணிறமான சரஸ்வதியாகவும் எதிரிகளை வெற்றி கொள்கின்ற காலத்தில், நீல நிறத்திருமேனியோடு துர்க்காதேவி என்ற நாமம் தாங்குகின்றாள். இத்தகைய அம்பிகையைச் சரணடைகிறேன் என்கிறது தேவி மகாத்மியம்.

*இலட்சுமி பிரதான சமயே. நமவித் ரூபமாம் வித்யாமா பிரதான சமயே சரதிந்து சுப்ராம் வித்வேஷி வர்க்க விஜயே(அ) பிதமால நிலாம் தேவீம் திரிலோக ஜெனனி சரணம் பிரபத்யே* என்கிறது.

### கல்வி, செல்வம், வீரம்

வாழ்வு முழுமை பெற வேண்டில் கல்வி, செல்வம், வீரம் அமையப்பெற வேண்டும். கல்வி உலகாயுதம் ஆத்மீகம் எனும் இரு வகையில் அமைகிறது. உலகாயுதக்கல்வி புலன் அளவைக்கு அகப்படுவதைப்பற்றி முடிவிலா ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது.

ஆத்மீகக் கல்வி கடவுள் என்றொருவன் உள்ளான் என்பதை அகத்தும் புறத்தும் உணர்ந்து அகக்காட்சி அளவைக்குட்படுத்தி, அவனருளில் அமிழ்வது இதுவே மெய்ஞானமாகிறது, இதுவே உண்மையான கல்வி.

செல்வம் என்பது மனதில் எழும் ஆசைக்குள் அழுந்தி எவ்வகையிலாவது பொருளைதேடுதல் என்பதல்ல, உடலுழைப்பால் தர்மநெறி பிசகாது பொருளீட்டுவதும், ஈட்டிய பொருளைத் தர்ம நெறி பிசகாது செலவிடுவதுமே கோடிக்கணக்கில் பணங்களையும், சொத்துக்களையும் சேர்த்துவிட்டு அதனைத் தர்மநெறி பிசகாது செலவு செய்யத் தெரியாதவன் உண்மையான செல்வந்தர் அல்ல. அவன் பரம ஏழையே என்பதை உணர்ந்தபடி வாழ்வதே செல்வத்தின் சிறப்பாகும். மனநிறைவோடு வாழ்வதே மேன்மையானதாகும்.

வீரமென்பது ஆயுத அல்லது உடல் பலத்தால் ஒருவரை அடக்கி ஆழ்வது என்பதல்ல. இன்று உலக நாடுகளே ஆயுதப்போட்டியிலும், பணப்போட்டியிலும் உலகாயுதக் கல்விப் போட்டியிலும் ஈடுபட்டு, தம்மையும் அழித்து உலகையும் சீரழித்து வருகின்றன. உலகம் இரண்டுபடுவது யுகங்கள்தோறும். இதனடிப்படையில் என்பதைக் காணப் பல்வேறு ஆதாரங்கள் உள்ளதை மறுத்துவிட முடியாதுள்ளது. ஓர் உயிருக்குரிய இயல்பான சுதந்திரத்தில் தலையிட எவருக்கும் உரிமை இல்லை என்கின்ற தெய்வ நீதியை உலகம் மறந்து வாழ்வதே உலகில் அமைதியின்மைக்குக் காரணமாகிறது.

உலகம் வாழவேண்டும் என்பதே சைவத்தின் அடிநாதம்

உலகம் வாழவேண்டும் என்பது சைவத்தின் அடிநாதமாகும். இந்தக் கொள்கை சனாதன மதங்களின் உயிர் மூச்சாயிருப்பதால் இந்து மதம் உலகுக்கு தர்மத்தைப் பல்வேறு வகையில் போதிப்பதோடு தாம் அன்னெறியில் வர்ழ்ந்தும் காட்டுகிறது.

உலகில் எத்தனையோ மதங்கள் இருக்கின்றன. அவற்றில் இந்துமதம் ஒன்றே. தன்னுடைய மதத்துக்கு ஒருவனை வந்து சேர்ந்து கொள் என்று கூறுவதில்லை. ஏனெனில் அவன் இந்துவாகவே அவனது கன்மானு பவங்களுக்கேற்பப் பிறக்கின்றான் என்ற உண்மையை உணர்ந்துள்ளது. இத்தகைய உயர்ந்த சிந்தையுடைத்த இந்துக்களுக்கு துன்பமிழைக்க முற்படுவனை என்னென்று சொல்வது. நவராத்திரி விழாவின் உண்மையான நோக்கம் மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்பதை எமக்கு வருடத்தில் ஒருமுறை உணர்த்துவதோடு எம்மவரையும் ஆதிக்கத்தின்பால் உயர்த்திவிடுகிறது.

### விரத காலம்

புரட்டாதி மாத பூர்வபட்ச பிரதமை தொடக்கம் நவமி வரை உள்ள திதிகளின் இராப்பொழுதில் அம்பிகைக்கு விசேட பூசை இடம்பெறுகிறது. இதில் பிரதமை, துதியை, திருதியை ஆகிய திதிகளில் துர்க்காதேவியை இராப் பொழுதில் விசேடமாகப் பூசித்தும்–

சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி ஆகிய திதி இரவுகளில் இலட்சுமி தேவியை இராப்பொழுதில் விசேடமாகப் பூசித்தும்–

சப்தமி, அட்டமி, நவமி ஆகிய திதிகளின் இரவுகளில் சரஸ்வதி தேவியை இராப்பொழுதில் விசேடமாக பூசித்தும் கொள்ளப்படுகிறது. இந்த அட்டமி மகா அட்டமி என்றும் – நவமி மகாநவமி என்றும் கொள்ளப்படுகிறது.

அடுத்த திதியான தசமி விஜயதசமி என்று கொள்ளப்படுகிறது. அன்று வன்னி பாரையை அம்பிகை எழுந்தருளி, வெட்டி வீழ்த்தி வெற்றிக்கான அனுக்கிரகத்தை பக்தர்களுக்கு கொடுக்கின்றாள். இந்த விஜயதசமியில் எந்த வேலையை எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும், அது வெற்றியாக முடிவுறும் என்பது அனுபவ உண்மை. இதனால் குழந்தை களுக்கு ஏடு தொடக்கல் புதிய வேலைகளை ஆரம்பித்தல் ஆகியவற்றை இந்நாளில் மேற்கொண்டு வருகின்றனர்.

### விரதமிருக்கும் முறை

நவராத்திரிக்கு முதல் நாள் அதிகாலை எழுந்து கர்மானுஷ் டானங்களை நிறைவு செய்து, அம்பிகையை வழிபட்டு, திருமுறைகள், அம்பிகை திருப்பதிகங்கள், சகலகலாவல்லிமாலை போன்றவற்றைப் பாராயணம் செய்து, ஒரு பொழுது உணவு உட்கொள்ள வேண்டும்.

நவராத்திரி காலங்களில் உபவாசமிருத்தல் மகா உத்தமமாகும். இயலாதவர் உணவைச் சுருக்கிக் கொள்ளலாம் விஜயதசமியில் அதிகாலை விரதத்தை நிறைவுசெய்துகொண்டு, அம்பிகைஆலயங்களுக்குச் சென்று வழிபாடாற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயதசமியை முன்னிட்டு ESOFT வழங்கும் விஷேட சலுகைகள்

*Begin your Career in*

**INTERNATIONAL DIPLOMA**

After A/L's

**25% off** for the all Diploma's

assured by PEARSON

Dual Certification Pearson (UK) + ESOFT

## IT + ENGLISH

**Diploma in Information Technology**
Duration : 4 Months
Course Fee : Rs. 26,500

- Ms Office, Hardware & Networking
- Graphics & Animation
- Web Designing
- Software Engineering
- Programming (Java, C#.net) and many more

**Diploma in English**
Duration : 4 Months
Course Fee : Rs. 19,500

- Grammar
- Spoken
- Comprehension
- Role Plays and more

Other International Diplomas

- DSE – Diploma in Software Engineering
- DBM – Diploma in Business Management
- DCA – Diploma in Computerized Accounting
- DBE – Diploma in Business English
- DWE – Diploma in Web Engineering
- DHN – Diploma in Hardware & Networking
- DM – Diploma in Multimedia
- DAE – Diploma in Academic English

*Obtain a world class*

**UK Qualification**

After A/Level's

Your **DREAM** Begind here

PEARSON BTEC

QCF ACCREDITED

# HND in

**Computing & Systems Development**

**Business Management**

Equivalent to the 1st & 2nd Year of a UK Honours Degree

Benefits
- ✓ Dual Pearson Certificate instead of one
- ✓ Direct entry to the final year of a UK degree
- ✓ No exams, only assignments
- ✓ Recognized in more than 100 countries

More Details :
077 309 2626

FREE TAB For the HND Registrations



## NEW BATCHES : 11/10/2016 @ 9:00am

Obtain a postgraduate qualification and

## Get exemptions for your MBA

PEARSON edexcel

# PGD

Post Graduate Diploma
Strategic Management & Leadership

UGC RECOGNIZED



ESOFT
*Shaping Lives, Creating Futures.*

## ESOFT METRO CAMPUS

No.137, K.K.S Road, Jaffna.
Hotline : 077 309 9308 Tel : 021 222 4142
www.esoft.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகபூஷணி
## திருமண சேவை

நீங்கள் விரும்பும் அரச உத்தியோகம்,
தனியார் துறையினர்
மற்றும் உள்நாட்டு / வெளிநாட்டு
மணமக்கள்
எம்மிடம் ஏராளமாக உள்ளனர்.
மிகப் பொருத்தமான ஜாதகங்கள்
போட்டோக்களுடன்
உடன் தெரிவு செய்து தரப்படும்.



383/14B, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோயில் வடக்குப் பக்கம்)
Tel: 021 222 9306 / 077 138 7596



## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**LONDON METROPOLITAN COLLEGE**

**IELTS**
Duration : 60 hours (Week, Weekends)
• Student Visa • Skill Migration

**IELTS LIFE SKILLS A1, B1**
(Speaking & Listening)
Duration : 48 hours (Week, Weekenda)
UKBA இன் புதிய நடைமுறைக்கிணங்க Settlement விசாக்களுக்கான IELTS A1 பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது

**APPLIED SPOKEN ENGLISH** (with Grammar)
Duration: 48 hours (Week, Weekends)

**DIPLOMA IN ENGLISH**
Duration: 60 hours (Week, Weekends)

**COMPUTER COURSES**
- Certificate in MS Office 2013
- Certificate in JAVA, VB, Net, C#
- Internet & Email
- Diploma in Computer Studies
- Diploma in Computer Programing

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna.
HOTLINE : 0714150995 | 021 753 8395

## விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Dip.in Information Technology
- Diploma in Office Automation
- Dip. in Pre-Press Desktop Publishing
- Diploma in Pc Applications
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Video Production & Multimedia
- Dip.in Web Designing & Development
- Dip. in Computerized Accounting
- Master Dip.in Mulitmedia & Animation

#Auto CAD, C++, JAVA#

**DMI COMPUTER EDUCATION**



(ISO 9001:2008) CERTIFIED

புதிய பிரிவுகள் ஆரம்பம்
10/10/2016 (Mon) - 9.30 am.
11/10/2016 (Tue) - 9.30 am.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி

# Spoken English
Veta Fluency Diploma

### ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

- தனித்துவமான வெற்றிகரமான பாடத்திட்டம்
- ஆங்கிலத்தில் அதிகம் பேசுவதற்கான சந்தர்ப்பம்
- ஒலி, ஒளி உடன் அமைந்த பாடத்திட்டம்
- சிநேக பூர்வமான போதனா ஆசிரியர்கள்
- நடைமுறை வாழ்க்கைக்கான ஆங்கில மொழியை பிரதிபலிக்கக் கூடிய பாடத்திட்டம்.

**புதிய பிரிவுகள்**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon, Wed, Fri 7.30 a.m.<br>Mon, Wed, Fri 3.30 a.m.<br>Sat, Sun 2.00 p.m. | Tue, Thu 4.30 p.m.<br>Sat, Sun 2.00 p.m. | Tue, Thu 10.30 a.m. | Tue, Thu 9.30 a.m. | Sat, Sun 8.00a.m. |

சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்

**IELTS**
Academic General

**IELTS Life Skills (A1,B1)**
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.
சர்வதேச, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

# DMI COMPUTER EDUCATION

| No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655 |
|---|---|---|---|---|

# உயர்கல்விக்கான மாபெரும் புலமைப்பரிசில்.

CIMA-UK, CompEngineering(Networking/Web/Software)-USA, BIT_university of Colombo ஆகிய கற்கை நெறிகளிற்கு புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றது. புலமைப்பரிசிலானது மாணவர்களிற்கு பதிவுக்கட்டணம், கற்கை நெறிக்கட்டணம், பரீட்சைக்கட்டணம் மற்றும் வருடாந்த கட்டணங்களில் வழங்கப்படவுள்ளது. மேலும் இம்மாணவர்களிற்கு மேலதிகமாக Msoffice, English, Accounting Package ஆகிய டிப்ளோமா கற்கை நெறிகளை முற்றிலும் இலவசமாக வழங்கவுள்ளது. கற்கை நெறிகளின் முதலாம் கட்டம் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யபட்டு சான்றிதழ்கள் உரிய நிறுவனங்களினால் வழங்கப்படும். திறமையினை வெளிப்படுத்தும் மாணவர்களிற்கு தொடர்ந்தும் புலமைப்பரிசில் வழங்கப்படும். இடவசதியினை கருதி தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் தாம் விரும்பும் கற்கை நெறி, தமது முழுப்பெயர், பிறந்த திகதி முகவரி என்பவற்யை 772395895 என்ற எண்ணிற்கு குறுந்தகவலாக அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களை யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில்

## மகாநவராத்திரி விசேட சலுகை Pay for one & get 9 >=18000Rs

ஒரு கற்கை நெறிக்கட்டணத்தில் ஒன்பது கற்கை நெறிகளை பயில முடியும். CIMA_UK, Dip.InIT(NVQ level5), FIT(univeristy of Colombo), Web, Networking, English(Toefl/IELTS), Shingala, AccountingPackages, AutoCAD, Programming,etc, விண்ணப்பிக்க விரும்புவோர் தமது முழுப்பெயர்,9DIP,பிறந்த திகதி முகவரி என்பவற்யை 772395895 என்ற எண்ணிற்கு குறுந்தகவலாக அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களை யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

## கற்கைநெறியொன்றிற்கான 100 வீத புலமைப்பரிசிலிற்கான வினா?

வெளிநாடுகளிற்கு குடிபெயரவும் உயர்கல்வி பயில்வதற்கும் கணினி வழிநடாத்தப்படும் ஆங்கிலப்புலமைக்கான பரீட்சையின் பெயர் எது? A.Toefl. B.BIT C.MCSE, D. IELTS

விடையினை பெயர் பிறந்த திகதி முகவரி என்பவற்றை 0772395895ற்கு குறுந்தகவலாக அனுப்பவும்

# MCS IT CAMPUS near university of Jaffna
**Listed college-CIMA UK, Silver Award-Microsoft-USA, Best performance Award-University of colombo**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WHITE LOTUS CAMPUS

White Lotus Campus

## No.154, A1,Navalar Road Jaffna

## 021 722 3773 / 077 622 3963

White lotus Campus ஆனது பட்டப்படிப்புக் கல்விகளைப் பூர்த்தி செய்வதை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனம் ஆகும். ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள் பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்ற அபிலாசையுடனே அவர்களை உயர்தரம் கற்க வைக்கின்றனர். ஆனால் 5-8 % பரீட்சார்த்திகளுக்கே இலங்கையின் அரச பல்கலைக்கழகம் வாய்ப்பளிக்கின்றது. ஏனைய மாணவர்கள் தனியார் துறை கல்லூரிகளுடன் இணைந்தே தமது உயர் கல்வியைப் பூர்த்தி செய்ய முடிகின்றது.

அந்த வகையில் எமது White lotus Campus ஆனது மாணவர்கள் உத்தியோ கத்தர்களுக்கு பட்டப்படிப்புகளையும் தொழிற்கல்விகளையும் குறைந்த செலவில் வழங்குவதுடன் அவர்களை தொழில்தருநர்களுக்கு தேவைப்படும். தகைமை உடையவராக மாற்றுவதை இலட்சியமாகக் கொண்டு யாழ்.நாவலர் வீதியில் தனது கிளையை விஸ்தரித்துள்ளது.

எமது கல்லூரி ஆனது இந்தியாவின் இந்திராகாந்தி தேசிய பல்கலைக்கழகத்துடன் (இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உட்பட 30 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டது) இணைந்து. இளமாணி, முதுமாணி பட்டப்படிப்புகளை வழங்குவதுடன் இலங்கை பல்கலைக்கழகங்களான ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகம் மற்றும் களனி பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வெளிவாரி பட்டப்படிப்புக்கான விரிவுரைகளையும் வழங்குன்றது.

எமது பட்டப்படிப்புக்கள் அனைத்தும் பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவை என்பதனால் இவை தொழிற் சந்தையில் அதிக வரவேற்பையும் அதே நேரம் குறைந்த கட்டணத்தில் பூர்த்தி செய்ய முடிவதனால் மாணவர்களுக்கு அதிக நிதி சுமையினை ஏற்படுத்தாது அவர்கள் உயர்கல்வியையும் , தொழில் வாய்ப்பினையும் மெருகுபடுத்துகிறது.

பட்டப்படிப்பினை விட எமது கல்லூரியில் தொழிற்கல்விகளான CA (இலங்கை பட்டய கணக்காளர்) CMA ( முகாமைத்துவ பட்டய கணக்காளர்) AAT, BANKING போன்ற கல்விகளும் கற்பிக்கபடுகின்றன. அத்துடன் Advance Education Australia என்ற ஆஸ்திரேலிய பல்கலைக்கழகத்துக்கான முகவர்களாக செயற்படும் எமது நிறுவனம் Sydney, Melburne, Newzland ஆகிய நாடுகளுக்கான Student place ment, Skill migration சேவைகளையும் செய்து வருகிறது.

எமது தாய் நிறுவனமான White lotus consultans 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வெளிநாட்டு நிறுவனங்களுக்கான கணக்கீட்டு தகவல் தொழில்நுட்பவியல் சேவையை ஆரம்பிக்க இருப்பதானால் எமது மாணவர்கள் தமது கல்விக் காலத்தில் தொழிற்பயிற்சிகள் (internships) களை பெற்றுக் கொள்ள வாய்ப்புள்ளது.

எமது பிரதேச மாணவர்களின் நலன் கருதி எடுக்கப்பட்ட இம் முயற்சியின் விளைவை எமது பிரதேசம் அறுவடை செய்து பயனடைய வேண்டும் என்பதே எம் நிறுவனத்தினதும் முகாமைத்துவத்தினதும் அபிலாசை ஆகும்.


P. Rajaram
பிரதம நிறைவேற்று அதிகாரி. White lotus Campus
District First 2010 (Jaffna)

October INTAKES


# WHITE LOTUS CAMPUS

INTAKES
077 622 3963, 077 932 4255


| Sri Jeyawardenepura University | Kalani University | Indirakandi University (India) | Profisinal Education |
|---|---|---|---|
| BSc - Business Administration<br>BSc - Public Management<br>B.Com<br>B.A - Humanity and Social Science<br>B.A - Environment and Social Studies<br>B.A - English | Bachelor of Arts<br>Bachelor of Science<br>Bachelor of Business Management<br>Bachelor of Commerce | B.Com<br>B.A<br>1. Public Administration<br>2. Economics<br>3. Political Science<br>4. Sociology<br>5. English<br><br>Masters. Degrees<br>M.A<br>M.BA<br>M.A Education. | CA<br>CMA<br>AAT<br>Banking<br>Business English<br>Spoken English |



P.Rajaram
B.Sc - ACC (University of Sri Jeyawardenepura)
CIMA - Passed Finalist
4 years lecturing experience



K.Kirunthan
B.Sc - ACC (University of Sri Jeyawardenepura)
ACCA Finalist,
CMA Finalist CA Finalist
2 years lecturing experience



T.J.Joney
BBA - Finance Management CA(R)
4 years lecturing experience



R.Nathiya
CIMA Finalist
CBF 2 years lecturing experience



T.Sutharsan
B.Sc Public Management 2 years lecturing experience



Niruja Rajakulanajagam
B.BA (hons) (Sp.in Accounting) University of Jaffna Temporary Lecturer -University of Jaffna
Past Finalist Ibsi
Sri Lankan gold medalist 2012

## P.Rajaram
## BSc Accounting, Cima Passed Finalist
## (University of Sri jeyawardenepura)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமணன் அழகுகலைப் பயிற்சி நிலையம்

கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி மத்தி



## ரமணன் டிசைனிங்

- பந்தல்
- கதிரை
- நவீன மணவறை
- பூமாலை
- பலூன் டிசைனிங்
- நிழல்க் குடை, மேசை, கதிரை
- கம்பளங்கள், நில விரிப்புக்கள்
- செல் சேவிஸ் பாத்திரங்கள்
- சமையல்ப் பாத்திரங்கள்
- கேக் ஐசிங், றெஜிபோம் கேக் ஐசிங்
- சிகை அலங்காரம்
- முக அலங்காரம்
- மணப் பெண் அலங்காரம்
- தலை மசாச்
- மருதாணி
- நெயில் ஆட்
- பேஷியல்
- இமை சேப்

ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன்
தொடர்புகொள்ளவும்
மகளிர் மட்டும்

பேசியலுக்குரிய கிறீம் வகைகள் மற்றும்
Fancy item கள் ஒரே கூரையின் கீழ் நீங்கள்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

டிப்ளோமா கோர்ஸ்

முற்கூட்டியே
பதிவு செய்யவும்

பிறைடல் மேக்கப், சாறிரொப்பிங், பிறைடல் ரெஸ்சிங், பேசியல், ஸ்ரெயிட்னிங், பேமிங், கேளிங், பிளக்ஸ்பொட்ட றீட்மென்ட், ஹெயார் (கலறிங் ஹென்னாட் றீட்மென்ட் டையிங், ஒயில் மசாஜ்), பிம்பிள்ட்றீட்மென்ட், மெசினறி ட்றீட்மென்ட், திரெட்டிங் வக்ஸிங், பெடிக்கியூர், மெனிக்கியூர், நெயில் ஆட், மொந்திடிசைன், ஸ்கின் அனலைசிங், டான்டப்ட்றீட்மென்ட், ஹெயார் செற்றிங், ஹெயார்ஸ்ரைல் ஆகியன. மேலும் தையல், கேக் ஐசிங், ஹான்ட்வேர்க், சாறிவேர்க் பயிற்சிகளும் நடைபெறுகின்றன.



mail - uramanandesign@gmail.com

077 491 1974 / 021 221 5666 / 070 277 2990

(சி.25667)
(13.18)



# 10th December 2016 இல்



யாழ்ப்பாணத்தில்
நடைபெறும் பரீட்சைகளுக்கு
ஆயத்தப்படுத்தும்
வகுப்புக்கள்

16 - Practice Tests with
Explanations Daily Writing Practice
Daily Speaking and Listening Practice
It is an Inovative Training Programme

# IELTS

இந்த ஆண்டு September - October மாதங்களில் British Council Colombo இல் நடைபெற்ற IELTS ஆசிரியர் Workshop மற்றும் Trainings இல் பங்குபற்றி IELTS பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதற்கு British Council லினால் அங்கீகாரம் பெற்ற ஆசிரியரினால் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றது.





எமது கல்வி நிலையம் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் சிறந்த நிலையம் என British Council னால் Awards வழங்கி கௌரவிக்கப்பட்ட நிலையமாகும்.

## OUR TARGET IS BAND : 9

கடந்த 27.07.2016 ல் Colombo Cinnamon Lakeside Hotel ல் நடைபெற்ற வைபவத்தில் கடந்த வருடம் 2015 ல் கொழும்பில் IELTS பரீட்சையில் அதிக பட்ச பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கட்கு Scholarship ஆக £3000 வழங்கப்பட்டது. இந்த வருடத்தில் எமது கல்வி நிலையத்தில் இருந்து அதிகபட்சப் புள்ளிகளை மாணவர்கள் பெற வேண்டும் என்பதற்காக அதிக கவனம் எடுத்து கற்றல் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இன்றே வகுப்பில் சேருங்கள்.

**IELTS பாடங்களைப் படிப்பிக்கும் அதேவேளை Grammar and Vocabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கின்றோம்.**

**Pearson English Course Level B2**

**எனவே இரண்டு பாடநெறிகளையும் ஒரு கட்டணத்திலேயே நிறைவு செய்யலாம்.**

வகுப்புக்கள் (11.10.2016) விஜயதசமி அன்று ஆரம்பமாகும்.

## COURSE SCHEDULE

Mon, Tues, Wed, Thus 60 Hours 8.30 - 11.30, 5.00 - 7.00
Saturday & Sunday 60 Hours Time: 8.30 - 12.00

**IELTS** **LIFE SKILLS** **A1, B1**

March, April, May, June, July, August - 2016 ஆகிய மாதங்களில் நடைபெற்ற A1, B1 பரீட்சைகளில் எமது நிறுவனத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 100% சித்தியடைந்துள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அடிப்படையில் இருந்து ஆங்கிலம் 2 மாதங்களில் பூரணமான அறிவைப் பெற்று பரீட்சையில் சித்தியடைய வைப்போம்.

IELTS Registration Centre for British Council

# BRITISH COLLEGE OF ENGLISH

No. 192, Navalar Road, Jaffna.

Tel : 021 222 0384 , 077 880 3887


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### சைவத்தமிழ் மக்களால் வித்தைகளை ஆரம்பிக்க உகந்த நாள்

# விஜயதசமி

மதுரகவி காரை.எம்.பி.
அருளானந்தன்

நவராத்திரியை அடுத்து வரும் பத்தாவது நாள் விஜயதசமியாக கொண்டாடப்பட்டு வந்தது. இந்த முறை 11ஆம் நாள் விஜயதசமி விழாவைக் கொண்டாடுகின்றோம். இந்த விழாவை இந்தியாவிலே தசரா எனக் கொண்டாடுவர். இந்து ஆலயங்களிலே நடைபெற்றுவரும் ஒரு முக்கியமான பூசை ம ானம்பூ (மகாநோன்பு) என அழைக்கப்படும். அது மகிடாசுர சங்காரமாகும். கன்னி விக்கிரமன் என்னும் மகிடாசுரனைச் சங்கரித்தமையால் அம்பிகைக்கு மகிடாசுர வர்த்தினி என்னும் ஒரு திருநாமமும் உண்டு. இந்தச் சங்காரத்தை நோக்காகக் கொண்டு ஆலயங்களில் வன்னி மரம் அல்லது வாழை மரத்தை நட்டு மகிடாசுரனைத் தேவி சங்காரம் செய்வதாகப் பாவனை பண்ணி, அந்த மரத்தை வெட்டி வீழ்த்தி விழா கொண்டாடுவர். மகிடாசுரன் என்பவன் கொழுத்த எருமைக்கடா போல மாட்டுத் தலையுடன் காட்சி கொடுப்பான். மகிடாசுர சங்காரம் என்பது உண்மையில் ஆன்மாக்களைப் பிடித்த ஆணவ மலத்தை அழித்தல் எனப் பொருள்படும். இந்த நவராத்திரியில் ஒன்பது தினங்களும் மெய்யன்போடு தேவியை வழிபட்டுப் பெற்ற சக்தியினால் ஆணவ மலத்தை ஒழித்துவிட முடியும். இந்த நிலையில் ஞானம் கைவரப்பெற்ற நிலை ஏற்படும்.

பாண்டவர்கள் அஞ்ஞான வாசகாலத்தில் ஆயுதங்களை ஒரு வன்னிமரப் பொந்தில் ஒளித்து வைத்திருந்தனர். அஞ்ஞான வாசம் முடிந்ததும் தமது ஆயுதங்களை எடுத்து வன்னி மரத்தை வாளால் வெட்டிவிட்டனர். இந்தத் தினம் விஜய தசமியாகும். வித்தைகள் ஆரம்பிப்பதற்கும் உகந்த தினம் இந்த விஜய தசமியாகும்.

சுகேதன் என்னும் அரசன் தன் பகைவர்களால் நாடு,நகரை இழந்து காட்டில் ஒளிந்து இருந்தான். கவலையுடன் இருந்த சுகேதன் ஆங்கிரச முனிவரைச் சந்தித்து தன் துயரத்தைக் கூறினான். முனிவர் நவராத்திரி விரதத்தின் பெருமையை எடுத்துரைத்து அந்த விரதத்தை அனுஷ்டிக்குமாறு கூறினார் .சுகேதன் நவராத்திரி விரதத்தை முறையாக அனுஷ்டித்து, அம்பிகை அருளினால் இழந்த அரசுரிமையை மீண்டும் பெற்று, நல்வாழ்வு பெற்றான்.

சீதா பிராட்டியை இழந்த இராம பிரான், கிஷ்கிந்தையில் கவலையுடன் இருந்தார். அங்கு வந்த நாரத மகரிஷி இராம பிரானிடம் நவராத்திரி மகிமை பற்றிக் கூறினார். இராமபிரான் நாரதர் உதவியுடன் நவராத்திரி விரதம் நோற்றார். இதனால் அம்பிகையின் அருள்பெற்று, இராவணனை ஜெயித்துச் சீதையைச் சிறை மீட்டார்.

ஆலயங்கள், பாடசாலைகள், வீடுகள், வர்த்தக தொழில் நிறுவனங்கள் போன்ற இடங்களிலெல்லாம் இந்த விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. எல்லோருக்கும் தேவியின் திருவருள் துணை கிடைக்கின்றது. அந்த வகையில் சைவத்தமிழ் மக் கள் இன்று தாம் வாழும் பிரதேசங்களிலெல்லாம் முதல் முதல் சுப நிகழ்வுகளைத் தொடங்கும் நாளாகவும் இந்த விஜய தசமி விளங்குவதோடு, பாடசாலைகள் மற்றும் ஆலயங்களில் பிள்ளைகளுக்கு ஏடு தொடக்குகின்ற சுப மங்கள வைபவங்கள் நிறைவேற்றப் பொருத்தமான ஒரு திருநாளாக அமைகின்றது எனலாம்.

இந்து ஆலயங்களிலே நடை பெற்றுவரும் ஒரு முக்கியமான பூசை மானம்பூ (மகாநோன்பு) என அழைக்கப்படும். அது மகிடாசுர சங்காரமாகும். கன்னி விக்கிரமன் என்னும் மகிடாசுரனைச் சங்கரித்தமையால் அம்பிகைக்கு மகிடாசுர வர்த்தினி என்னும் ஒரு திரு நாமமும் உண்டு. இந்தச் சங்காரத்தை நோக்காகக் கொண்டு ஆலயங்களில் வன்னி மரம் அல்லது வாழை மரத்தை நட்டு மகிடாசுரனைத் தேவி சங்காரம் செய்வதாகப் பாவனை பண்ணி, அந்த மரத்தை வெட்டி வீழ்த்தி விழா கொண்டாடுவர்.

DEUTSCH , ITALIAN
மொழி கற்கைநெறி வகுப்புக்கள் புதிய பிரிவு ஆரம்பம் 0777 17 35 17
ஜேர்மன், சுவிஸ், இத்தாலி நாடு செல்பவர்களுக்கானது
ஜேர்மனில் பிரஜாவுரிமை பெற்று 21 வருடங்கள் வசித்த அனுபவம் மிக்க ஆசிரியரினால் ஜேர்மன் தூதரகத்தினால் கோரப்படும் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு மிகவும் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.
DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470
No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775
No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970
No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655


மதுரா அழகுக்கலைப்பயிற்சி நிலையம்
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)
புதிய பிரிவுகள் - முற்றிலும் புதிதாக வடிவமைக்கப்பட்ட பயிற்சிகள் - குறைந்த கட்டணம் நிறைந்த பயிற்சி காலம் - 3 மாதம், ஒரு மாதம் பயிற்சியின் நிறைவில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.
டிப்ளோமா கோர்ஸ் - (பயிற்சி சுருக்கம்) எயாபிரஷனர் மேக்கப் ( 3Dஐ, லிப், பேஸ், மேக்கப்) ஈவினிங், ஓயிலி சன்லைற், நைற், லைற் கிறியேற்றிவ் ஸ்ரூடியோ ஆகிய மேக்கப் பிறைடல் டிரெஸ்ஸிங் (6) பேசியல் - 25, கல்வனிக், அல்ரா சொனிக், கிளாவனிக், பிம்பிள்றிமூவிங், பிளக்ஸ்பொட்றிமூவிங், அன்றின ஜிங், பில்லிங் பேசியல், ஹெயார்கெயா, ஹெயார் செற்றிங், ஹெயார் ஸ்ரைலிங், பெடிக்கியூர், மெனிக்கியூர், திரெட்டிங் வக்ஸ்ஸிங், நெயில்ஆட், மெகந்தி டிசைனிங், சாறிரொப்பிங் - 25 ஆகியன மேலும் தையல், கேக், ஐசிங் டிப்ளோமா பயிற்சிகள் உடன் தொடர்புகொள்ளவும்.
மகளிர் மட்டும்
ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
பழைய வீதி, கோப்பாய்.
T.P: 076 648 0749
(சி.25646) (13.18)

COMPUTER CORNER
கணினி காட்சியறை
Computer Sales, Laptop Sales, Maintenance, Repair, CCTV Camera, Networking, Antivirus Solutions

COMPUTER CORNER
Kasthuriyar Road, Jaffna, Sri Lanka.
021 222 1323, 077 353 7126
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம் - சந்தி, மல்லாகம்.
Kasthuriyar Road, Jaffna, Sri Lanka. 021 222 1323
computercorner18@gmail.com 077 353 7126
intel ASUS hp ASRock LITEON msi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## புதிய சாதனை படைத்தது கோக்லி, ரகானே இணை

டெஸ்ட் ஆட்டங்களில் நான்காவது இலக்குக்காக அதிக ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த இணை என்ற சாதனையைப் படைத்தது கோக்லி, ரகானே இணை.

இந்தியா– நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் மூன்றாவதும், கடைசியானதுமான ஆட்டம் இந்தூரில் தற்போது நடைபெற்று வருகிறது. இந்திய அணி நாணயச் சுழற்சியில் வென்று, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 100 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது, மூன்றாவது இலக்குச் சரிக்கப்பட்டது. கோக்லி, ராகானே இருவரும் இணைந்து இந்திய அணியை தடுமாற்றத்திலிருந்து மீட்டனர். இந்த இருவரும் தமக்குள் இணைப்பாட்டமாக 365 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். இதன்மூலம் நான்காவது இலக்குக்காக அதிக ஓட்டங்களைப் பகிர்ந்த இந்திய இணை என்ற சாதனையை கோக்லி, ராகானே இணை படைத்தது.

லக்ஷ்மன், சச்சின் இணை, ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 353 ஓட்டங்களைப் பெற்றதே இதுவரை சாதனையாக இருந்தது. மூன்றாவது இடத்தில் கங்குலி, சச்சின் இணை நியூசிலாந்துக்கு எதிராகப் பெற்ற 281 ஓட்டங்கள் உள்ளது. (ம)





## மூன்றாம் பிரிவு துடுப்பாட்டம்; ஜொனியன்ஸ் அணி சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 10

இலங்கை கிரிக்கெட் சபை, தனது மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் ஜொனியன்ஸ் அணி சம்பியனானது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில், ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. அணி மோதியது.

முதலில் துடுப் பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி. அணி 35.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குக ளையும் இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிசாந்தன் 30 ஓட்டங்களையும், சசிதரன் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜொனியன்ஸ் அணியின் சார்பில் டக்சன் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

137 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி, 13 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக கானாமிர்தன் 56 ஓட்டங் களைப் பெற்றார்.

பந்து வீச்சில் கே.ஸி.ஸி.ஸி. அணியின் சார்பில் உத்தமக்குமரன் 2 இலக்குகளை வீழ்த்தினார். (ம-23-422)

## ஜோகன்னா கோன்டா வரலாற்று அடைவு

பன்னாட்டு பெண்கள் ரென்னிஸ் சம்மேளனத்தின் தரப்படுத்தலில் கடந்த 32 ஆண்டுகளில் முதல்முறையாக முதல் பத்து இடங்களுக்குள் இடம்பிடித்த இங்கிலாந்து வீராங்கனை என்ற வரலாற்று அடைவை ஏற்படுத்தவுள்ளார் ஜோகன்னா கோன்டா.

சீன ரென்னிஸ் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டமொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பன்னாட்டுத் தரப்படுத்தலில் 14 ஆம் இடத்திலுள்ள இங்கிலாந்தின் ஜோகன்னா கோன்டா, அமெரிக்காவின் மெடிசன் கீஸை எதிர்கொண்டார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 7:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய கோன்டா, இரண்டாவது செற்றை 4:6 என்ற புள்ளிகளின் அடிப்ப



டையில் இழந்தார். சரிவிலிருந்து மீண்ட அவர் இறுதி செற்றை 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் அடுத்து வெளியாகவுள்ள பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களுக்குள் முன்னேறக்கூடிய வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. அவ்வாறு முதல் பத்து இடங்களுக்குள் முன்னேறினால், கடந்த 32 வருடங்களில் தரப்படுத்தலில் பத்து இடங்களுக்குள் இடம்பிடித்த முதல் இங்கிலாந்து வீராங்கனை என்ற வரலாற்று அடைவு அவருக்குக் கிடைக்கும். (ம)

## ஆஸிக்கு நேற்றும் சிறப்புக் கவனிப்பு



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது ஒரு நாள் ஆட்டத்தையும் வெற்றிபெற்று தொடரில் 4:0 என்று முன்னிலை வகிக்கிறது தென்னாபிரிக்கா.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முன்வரிசை பலவீனமாக அமைய அந்த அணி 167 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக வேட் 52 ஓட்டங்களையும், மிச்செல் மார்ஷ் 50 ஓட்டங்களையும், திரிமைன் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்காவின் சார்பில் அப்பொட் 4 இலக்குகளையும், சம்சி 3 இலக்குகளையும், பங்கிசோ 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்காவுக்கு அம்லா 4 ஓட்டங்களுடனும், குயின்டன் டி ஹொக் 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றி னாலும், மத்திய வரிசை சிறப்பாக அமைய 87 பந்துகள் மீதமிருக்க 4 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்து 6 இலக்குகளால் வெற்றி பெற்றது தென்னாபிரிக்கா. அதிகபட்சமாக பிளா சிஸ் 69 ஓட்டங்களையும், ரொஸ்சொவ் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும், டுமினி 25 ஓட்டங்களையும் குவித்தனர். (ம)

## கபடி உலகக்கிண்ணம் இன்றைய மோதல்கள்

கபடி உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவின் அகமதாபாத்தில் நடைபெற்று வருகிறது. இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்தை எதிர்த்து ஆஸ்திரேலியாவும், 8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் தாய்லாந்தை எதிர்த்து போலந்தும் மோதவுள்ளன. (ம)




## புஜாரா சுழலில் தடுமாற்றம்

இந்தியாவின் டெஸ்ட் துடுப்பாட்ட வீரரான புஜாரா, சுழல் பந்துவீச்சில் தடுமாற்றம் அடைவதை அவரின் அண்மைக்கால பெறுபேறுகள் வெளிப்படுத்துகின்றன. இந்திய துடுப்பாட்ட வீரர்கள் பொதுவாக சுழல் பந்து வீச்சை சிறப்பாக எதிர்கொள்ளக்கூடியவர்கள். ஆனால் புஜாராவின் விடயத்தில் குறித்த நிலைப்பாடு தலைகீழாகவே உள்ளது. நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸையும் சேர்த்து மொத்தமாக 18 தடவைகள் சொந்த மண்ணில் சுழல் பந்துவீச்சில் அவர் ஆட்டமிழந்துள்ளார். ஓர் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இந்திய வீரர் சுழல் பந்துவீச்சுக்கு வெளிப்படுத்திய மோசமான அடைவுமட்டமாக இது பதிவாகியுள்ளது. (ம)

## இங்கிலாந்துக்கு அதிர்ச்சி வைத்தியம் முறையாகக் கவனித்தது பங்களாதேஷ்




கபடி உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் இங்கிலாந்தை இலகுவாக வீழ்த்தி அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது பங்களாதேஷ்.

அகமதாபாத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. குறித்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே இங்கிலாந்தை சிறப்பாகக் கட்டுப்படுத்தியது பங்களாதேஷ். முதல் பாதியின் முடிவில் 23:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஆதிக்கம் செலுத்தியது பங்களாதேஷ். இரண்டாம் பாதியிலும் இங்கிலாந்தால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. முடிவில் 52:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது பங்களாதேஷ். அந்த அணி, தனது அடுத்த ஆட்டத் தில் இந்தியாவை எதிர்கொள்ளவுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்சமாமின் நம்பிக்கை

பன்னாட்டு டெஸ்ட் தரப்படுத்தலில் தாம் இழந்த முதலிடத்தை மீண்டும் இந்தியாவிடமிருந்து கைப்பற்றுவோம் எனத் தெரிவித்தார் பாகிஸ்தான் அணியின் தலைமைத் தேர்வாளரான இன்சமாம் உல் ஹக்.

குறித்த விடயம் தொடர்பாக இன்சமாம் உல் ஹக் வழங்கிய நேர்காணல் ஒன்றில், டெஸ்ட்டில் பாகிஸ்தான் அணி முதலிடத்தைப் பிடித்தது மிகச் சிறப்பானது. ஏனெனில் நாம் கடந்த 2009ஆம் ஆண்டிலிருந்து சொந்த மண்ணில் டெஸ்ட் தொடரில் விளையாடியது இல்லை. அன்னிய மண்ணில் அத்தனை ஆட்டங்களையும் எதிர் கொண்டு முதலிடத்தைக் கைப்பற்றுவதென்பது மிகப்பெரிய விடயம். இதை நாம் சாதித்தோம். ஆனால் நடைபெற்றுவரும் நியூசிலாந்துக்கு எதிரான தொடரைக் கைப்பற்றுவதை உறுதிசெய்த இந்திய அணி எம்மிடமிருந்து முதலிட அந்தஸ்தைப்



பறித்துள்ளது.

எங்கள் அணியில் மிகத் திறமையான வீரர்கள் உள்ளனர். பாகிஸ்தான் அணி தொடர்ச்சியாக சிறந்த ஆட்டங்களை வெளிப்படுத்தி மீண்டும் முதலிடம் பிடிக்கும் எனத் தெரிவித்தார்.

இந்திய அணி அடுத்து நடைபெறவுள்ள 13 தொடர் டெஸ்ட் ஆட்டங்களை அதன் சொந்த மண்ணிலேயே எதிர் கொள்ளவுள்ளது. எனவே அந்த அணிக்கான வெற்றி வாய்ப்பு அதிகம். இதனால் அந்த அணியின் முதலிடம் தொடர்ச்சியாக பேணப்படும் என்று கருதப்படும் நிலையில் இன்சமாம் இவ்வாறானதொரு கருத்தை வெளிப்படுத்தினார். (ம)




# கொழும்பு வெஸ்லிக் கல்லூரி சாகிராவின் தொடரில் சம்பியன்

கொழும்பு, ஒக். 10
சாகிராக் கல்லூரியின் பழைய மாணவத் தலைவர்கள் சங்கத்தினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றியது கொழும்பு வெஸ்லிக் கல்லூரி அணி.

சாகிராக் கல்லூரியின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில், கொழும்பு வெஸ்லிக் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சாகிராக் கல்லூரி அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதே நிலைமைதான். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல்கள் எதனையும் பதிவுசெய்ய இயலாது போக சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது கொழும்பு வெஸ்லிக் கல்லூரி அணி. ஆட்டநாயகனாக சாகிராக் கல்லூரியின் சப்வாஸ் தெரிவானார். பெறுமதிமிக்க வீரராக அதே கல்லூரியின் சாகில் தெரிவானார். (ம-23)

# சென். பெனடிற் சம்பியன்

கொழும்பு, ஒக். 10
சாகிராக் கல்லூரியின் கால்பந்தாட்டத் தொடரில் வெல்ட் கிண்ணத்தை வென்றது கொழும்பு சென். பெனடிற் கல்லூரி.

சாகிராக் கல்லூரியின் கால்பந்தாட்ட மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. கொழும்பு சென். பெனடிற் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி அணி மோதியது. வழங்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளாலும் கோல்களைப் பதிவுசெய்ய இயலாது போக சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் கிண்ணத்தைத் தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டது. 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது சென். பெனடிற் கல்லூரி அணி. (ம-23)

# மாரியப்பனின் அடுத்த கனவு

அடுத்த பரா ஒலிம்பிக் தொடரில் உலக சாதனை படைப்பதே தனது கனவு எனத் தெரிவித்தார் நடப்பு வருட பரா ஒலிம்பிக் தொடரில் இந்தியாவுக்கு தங்கப் பதக்கம் வென்று கொடுத்த தமிழ்நாட்டு வீரர் தங்கவேலு மாரியப்பன்.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில், அண்மையில் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் (பரா ஒலிம்பிக்) தொடர் நடைபெற்றது. ஆண்களுக்கான உயரம் பாய்தலில் இந்திய வீரர் தங்கவேலு மாரியப்பன் தங்கப் பதக்கம் வென்றார். இவருக்கான கௌரவிப்புக்கள் இன்னும் முடிவுக்கு வந்தபாடில்லை. பல்வேறுபட்ட விழாக்களிலும் அவர் தலைமை விருந்தினராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார். தமிழ்நாட்டிலுள்ள தனியார் பாடசாலை ஒன்றின் நிகழ்வுக்கு விருந்தினராகச் சென்ற அவர் அங்கு உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நீங்கள் எதை முயற்சி செய்கிறீர்களோ அதை விடாமுயற்சியுடன் செயல்படுத்துங்கள். யார் எது கூறினாலும் அதைக் கண்டுகொள்ளாதீர்கள். உங்கள் முயற்சியில் மட்டும் கவனமாக இருங்கள். அதற்கு என்றாவது ஒரு நாள் கண்டிப்பாகப் பலன் கிடைக்கும். உயரம் பாய்தலில் நான் களமிறங்கிய போது ஆரம்பத்தில் என் மீது பல விமர்சனங்கள் வந்து குவிந்தன. என்னை பலர் ஏளனம் செய்தனர். ஆனால் அவற்றை நான் கண்டுகொள்ளவில்லை. இன்று ஒலிம்பிக் தொடரின் தங்கப் பதக்கம் ஒன்று எனது கையிலுள்ளது. அடுத்த பரா ஒலிம்பிக் தொடரில் தங்கப் பதக்கம் மட்டுமல்ல சாதனையும் படைப்பேன் என மாரியப்பன் மேலும் தெரிவித்தார். (ம)




# பிளேட் கிண்ணத்தை கைப்பற்றியது றோயல்

கொழும்பு, ஒக். 10
சாகிராக் கல்லூரியின் பழைய மாணவத் தலைவர்கள் சங்கத்தினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் பிளேட் கிண்ணத்தைக் கைப்பற்றியது றோயல் கல்லூரி.

சாகிராக் கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. கொழும்பு றோயல் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சென். ஜோசெப் கல்லூரி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் இரு அணிகளும் கோலெதையும் பதிவு செய்யாத நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது றோயல் கல்லூரி அணி. (ம-23)




# மேரிஸ் ஸ்ரெலாக் கல்லூரி சீல்ட் கிண்ணம் வென்றது

கொழும்பு, ஒக். 10
சாகிராக் கல்லூரியின் பழைய மாணவத் தலைவர்கள் சங்கத்தினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் சீல்ட் கிண்ணப் பிரிவில் நீர்கொழும்பு மேரிஸ் ஸ்ரெலாக் கல்லூரி அணி சம்பியனானது.

சாகிராக் கல்லூரியின் மைதானத்தில் நேற்று முன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. நீர்கொழும்பு மேரிஸ் ஸ்ரெலாக் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு இசிபத்தானை கல்லூரி அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் சம்பியனானது நீர்கொழும்பு மேரிஸ் ஸ்ரெலாக் கல்லூரி அணி. (ம-23)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலந்தை வீழ்த்தியது கென்யா



கபடி உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் போலந்தை வீழ்த்தியது கென்யா.

இந்தியாவின் அகமதாபாத்தில் தொடர்நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்று லீக் ஆட்டங்களில், ஒன்றில் போலந்தை எதிர்த்து கென்யா மோதியது. முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் தலா 27 புள்ளிகளைப் பெற்றிருந்தன. இரண்டாம் பாதியில் தனது ஆதிக்கத்தை அதிகப்படுத்திய கென்யா, முடிவில் 54:48 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று போலந்தை வீழ்த்தியது. கென்யா தனது அடுத்த ஆட்டத்தில் ஈரானை நாளை எதிர்கொள்கிறது. (ம)

# சீன ரென்னிஸ் தொடரில் முர்ரே இறுதிக்குத் தகுதி

சீன ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிக்குத் தகுதி பெற்றார் பிரிட்டன் வீரர் அன்டி முர்ரே.

தொடர் பீஜிங் நகரில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் முர்ரேயை எதிர்த்து டேவிட் பெரர் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் முர்ரே. அவர் தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் நிலைப்படுத்தி இரண்டாவது செற்றையும் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். இதன்மூலம் பெரரை 2:0 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தி அவர் இறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

# இங்கிலாந்து பங்களாதேஷ் தொடரில் சிக்கல்கள்

இங்கிலாந்து-பங்களாதேஷ் தொடர் நடைபெறுவதில் சிக்கல் ஏற்பட்டது.

பங்களாதேஷில் பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்த இங்கிலாந்து, அங்கு செல்வதை இழுத்தடித்தது. ஆனால் நீண்ட பரிசீலனையின் பின்னர் சென்றது. இருப்பினும் தமக்கு அங்கு பாதுகாப்பில்லை எனத் தெரிவித்த மோர்கன், கேல்ஸ் இருவரும் தொடரிலிருந்து விலகினர். இந்த இரு சிறந்த வீரர்களும் இல்லாமல் இங்கிலாந்து அணி தற்போது விளையாடி வருகிறது. இந்த நிலையில் டாக்கா நகரில் உள்ள தங்காளி பகுதியில் நேற்று முன்தினம் பொலிஸாருக்கும் ஆயுததாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 11 ஆயுததாரிகள் கொல்லப்பட்டதாகவும் இதனையடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டுள்ளதாகவும் பங்களாதேஷ் ஊடகங்களும் பன்னாட்டு ஊடகங்களும் செய்தி வெளியிட்டன. இதனால் சில வேளைகளில் இங்கிலாந்து கிரிக்கெட் சபை தொடரைக் கைவிடுவது தொடர்பாகவும் சிந்திக்கலாம் என்று - கருதப்படுகிறது. (ம-ரி4)



# உலக சம்பியன் என்பதை மீண்டும் நிரூபித்தது ஜேர்மன்

உலகக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் செக்குடியரசை வீழ்த்தியது உலகச் சம்பியனான ஜேர்மனி.

ஹம்பேர்க்கில் இந்த ஆட்டம் நடைபெற்றது. ஜேர்மனின் நட்சத்திர வீரரான முல்லர் 13 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவு செய்தார். ஜேர்மனின் கோல் கணக்கு அதிகரிக்கப்படவுமில்லை. செக்குடியரசு பதிலடி கொடுக்கவுமில்லை. முடிவடைந்தது முதல் பாதி.

49 ஆவது நிமிடத்தில் குரூஸ் ஜேர்மனின் கோல் கணக்கை இரண்டாக உயர்த்தினார். இந்தக் கோலின் மூலம் அந்த அணியின் வெற்றிவாய்ப்பு அதிகமானது. 69ஆவது நிமிடத்தில் முல்லர் தனது இரண்டாவதும் அணியின் மூன்றாவதுமான கோலைப் பதிவுசெய்தார். வேறெந்த மாற்றங்களும் நிகழவில்லை. செக்குடியரசால் பதிலுக்கு ஒரு கோலைத்தானும் பதிவுசெய்ய முடியாது போக, முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று உலகச் சம்பியன் என்பதை மீண்டும் நிரூபித்தது ஜேர்மனி. (ம)

# சீன ரென்னிஸ் தொடர்; ரட்வன்ஸ்கா இறுதியில்

சீன ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றார் போலந்து வீராங்கனை ரட்வன்ஸ்கா.

பீஜிங் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில், சீனத் தொடரின் நடப்புச் சம்பியனான ரட்வன்ஸ்காவை எதிர்த்து உக்ரைன் வீராங்கனை ஸ்வெட்டலினா மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 7:6, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ரட்வன்ஸ்கா, 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)



இலவச UK முகாமைத்துவ டிப்ளோமா
* வியாபார முகாமைத்துவம் DBM
* மனிதவள முகாமைத்துவம் DHRM
* சந்தைப்படுத்தல் DMKT
சான்றிதழ் கட்டணம் மட்டுமே
பயிற்சியுடன் வேலை வாய்ப்பு
தொடர்பு:- Dr.ந. பிரபு MBBS (SL)
சுவடி இலாப நோக்கற்ற நிறுவகம்
076 838 4466

AUTO CAD
Specially Designed For:
Engineering,Architecture Students
Draught,Technical Personnel
Surveyors
Level 1.Elementary Draughting,
Level 2.Advanced Draughting & Visualizations(3D).
New Batch start on :- 22.10.2016
77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
iCS EDUCATION 076-7013060 , 021-7306000

# வழித்துத்துடைக்கும் முனைப்பில் இந்தியா

நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாள் நிலவரத்தின்படி இந்திய அணி பலமான அடித்தளம் அமைத்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதலாம் நாள் முடிவில் அந்த அணி, 267-3 என்ற நிலையில் இருந்தது. கோக்லி 103 ஓட்டங்களுடனும், ரகானே 79 ஓட்டங்களு டனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். ரகானே சதம் கடந்தார். இருவரது ஆட்டத்திலும் பதற்றம் இருக்கவில்லை. கோக்லி அடிக்கொருதடவை பவுண்டரிகளைப் பதிவு செய்து கொண்டிருந்தார். விரைவாக ஆட்டத்தை இடைநிறுத்தி நியூசிலாந்தைச் சுருட்டி விடுவது திட்டம். ரகானே அவ்வப்பொழுது சிக்சர்களையும் பதிவு செய்தார். இந்தியா 400 ஓட்டங்களைக் குவித்த பின்பும் இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டபாடில்லை. இரட்டைச் சதத்தை விளாசினார் கோக்லி. இது அவரது இரண்டாவது இரட்டைச் சதம். 211 ஓட்டங்களுடன் பட்டேலின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யு. ஆனார் கோக்லி.

போல்ட்டின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து 12 ஓட்டங்களால் இரட்டைச் சதத்தைத் தவறவிட்டார் ரகானே. விரைவான அரைச் சதத்தைப் பதிவு செய்தார் ரோகித் சர்மா. இந்திய அணி 557-5 என்ற நிலையிலிருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தினார் கோக்லி. பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து, நாள் முடிவில் 28-0 என்ற நிலையில் உள்ளது. குப்தில் 17 ஓட்டங்களுடனும், லாதம் 6 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

ஆங்கிலம் 3 மாத பயிற்சி நெறி
3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேச...
இம்முறை A/L எழுதியோர், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர், இளைஞர் யுவதிகள் இணையமுடியும்!
சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 15.10.2016
பிரிவு1.காலை 08-10 பிரிவு 3.மாலை 01-03
பிரிவு2.காலை 10-12 பிரிவு 4. மாலை 03-05
ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும் கூட 3 மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்!
பாடபுத்தகங்கள் Video DVD என்பன இலவசம்.
பயிற்சிநெறி முடிவில் "Diploma Certificate"
SAAMSON Expert in Language Training
யாழ்ப்பாணம்
077 1570 486
021 320 3313

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.